


விலை ரூபா 80 பக்கங்கள் - 12 + XII

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 12 குரோதி வருடம் மார்கழி மாதம்
14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 28 (29.12.2024)




# அரிசிப் பற்றாக்குறை ஏற்பட இனி இடமில்லை

## உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன



## கே.டி.லால்காந்த

■ சுப்ரமணியம் நிஷாந்தன்

எதிர்காலத்தில் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது என்பதுடன், எதிர்வரும் போகத்தின் அறுவடையுடன் குறிப்பிடத்தக்களவு அரிசி கையிருப்பை பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

"அரிசி தொடர்பில் சில இடங்களில் பிரச்சினைகள் உள்ளன. அதிகமான இடங்களில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அரிசிக்கு பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் இந்தப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சந்தையில் விலை தளம்பல் ஏற்பட்டால் அதனை சமநிலைப்படுத்த அரசாங்கம் பலத்தை கொண்டிருக்க வேண்டும். எதிர்வரும் போகம் முதல் குறிப்பிடத்தக்களவு நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்காக அரச களஞ்சியசாலைகள் மறுசீரமைக்கப்பட்டு, வருகின்றன. மேலதிக களஞ்சியசாலைகளும், நிதியும் தேவைப்படுகிறது.

அதேபோன்று விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அவர்களை காப்பாற்ற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் அரிசியை இறக்குமதி செய்யவும் நாம் பின்நிற்க போவதில்லை. உள்நாட்டில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவை அடைவதே எமது கொள்கையாகும். என்றாலும், அதனை பூர்த்தி செய்ய முடியாத இடத்தில் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மாதத்தின் பின்னர் அரிசி விலை உயர்வடையாது. அத்துடன், பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் முகாமைத்துவம் செய்யவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. நெல் கொள்வனவு விலைகள் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும்.

02 →

## மன்மோகன் சிங்கின் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம்





இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க X தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தி வருமாறு,

நான் எனது சார்பிலும், இலங்கை மக்கள் சார்பிலும் இந்தியக் குடியரசுக்கும், கலாநிதி. மன்மோகன் சிங் அவர்களின் குடும்பத்தாருக்கும், உலகெங்கிலும் அவர் மீதான பற்றை வெளிப்படுத்தும் எண்ணற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறேன்.

02 →

## 72,000 மெ.தொ. இறக்குமதி அரிசி துறைமுகத்திலிருந்து விடுவிப்பு



■ கனூஷியா புஷ்பகுமார்

இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து வெள்ளிக்கிழமை(27) வரையில் இறக்குமதி செய்யப்பட்ட 72,000 மெட்றிக் தொன் அரிசி துறைமுகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட 72,000 மெட்றிக் டொன் அரிசியில் 32,000 மெட்றிக் டொன் பச்சை அரிசியும், 40,000 மெட்றிக் டொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாகவும், மேலும், சுங்கத்திற்கு அனுப்பப்படும்

02 →

## எதிர்க்கட்சிகளை திரட்டி அரசுக்கு எதிராக போராடுவோம்



எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு எதிராக போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

சுற்றுநிருபங்களை மாற்றியமைக்கும் நிலைக்கு அரசாங்கத்தின் நிலைமை தள்ளப்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவான அரசாங்கம் ஜுலை மாதத்தில் கவிழ்க்கப்பட்டது. 2001இல் நாம் அமைத்த அரசாங்கம் 2004இல் வீழ்ந்தது. கோட்டாபய ராஜபக்ச, மூன்று வருடங்களுக்குள் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது.

02 →

## மன்மோகன் சிங்கின் பூதவுடலுக்கு ரணில் அஞ்சலி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை(27) புதுடெல்லியில் இறுதி அஞ்சலி செலுத்தினார்.




←06




←10




←XII




←XII

## மீனவர் விவகாரத்தில் இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை

### அமைச்சர் சந்திரசேகரன் திட்டவட்டம்!

■ பு.கஜிந்தன்




இலங்கை – இந்திய மீனவர்களுக்கிடையே இனிமேல் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் இடம்பெறாது என கடற்றொழில் இ.சந்திரசேகரன் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர், "ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தின்போது, இலங்கை – இந்திய மீனவர்களிடையே

02 →

## அரச வைத்தியசாலைகளில் கதிரியக்க நிபுணர்கள் பற்றாக்குறை

■ கனூஷியா புஷ்பகுமார்



அரச வைத்திய சாலைகளில் சுமார் 530 கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் பற்றாக்குறையாக உள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கதிரியக்க தொழில்நுட்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட 1,150 ஊழியர்கள்

02 →

## மன்மோகன் சிங் மறைவிற்கு உலகத் தலைவர்கள் அனுதாபம்

### 7 நாட்கள் துக்கதினம் பிரகடனம்



இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவைத் தொடர்ந்து இந்தியாவில் 7 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் (வயது 92) உடல்நலக்குறைவால் வியாழக்கிழமை மாலை டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் காலமானார்.

02 →

## அரசாங்கம் தமிழர்களை முன்னிறுத்தி செயற்றிட்டங்களை முன்வைக்கவில்லை

■ வெல்லாவெளி நிருபர்



ஊழலற்ற சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டும் என கூறும் அரசாங்கம், தமிழ் மக்களுக்கான, அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாசைகள், தமிழ் மக்களை முன்னிறுத்துவதற்கான எந்தவிதமான செயல்திட்டங்களையும் முன் வைக்கவில்லை என இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார்.

குருமண்வெளியில் வியாழக்கிழமை (26) மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குருமண்வெளி சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.நாகேந்திரன்

02 →

## 150 கோடி மோசடி: இந்தியாவுக்கு தப்பிச்சென்ற தம்பதி நாடுகடத்தல்; கொழும்பில் கைது



கல்முனைப் பிரதேசத்தில் பிரிவெல்த் குளோபல் எனும் சட்டவிரோத நிதிநிறுவனம் மூலம் வைப்பாளர்களிடம் சுமார் 150 கோடி ரூபா பணத்தை பெற்று தமிழ்நாட்டிற்கு தப்பியோடிய தம்பதி தமிழக பொலிஸ ரால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டனர்.

திருச்சி இலங்கைத் தமிழர் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இத்தம்பதிக்கு எதிராக இலங்கையில் பல கோடி ரூபாய் நிதி மோசடி புகார் வழக்குகள் இருப்பதால், அவர்கள் வியாழக்கிழமை(26) இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

02 →

# தேர்தலில் போட்டியிட முன் கல்வி தகைமை சான்றிதழ்கள் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்க கோரிக்கை

■ கனூஷியா புஷ்பகுமார்

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் வேட்பாளர்களின் கல்வி அல்லது ஏனைய தகைமைகள் உள்ளடங்கிய தரவுகளை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குவதை கட்டாயமாக்கும் முறையொன்றை தயார் செய்யுமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் மற்றும் பல வெகுஜன அமைப்புகளும் தேர்தல் ஆணைக்குழு தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் தொடர்பில் நாட்டில் நிலவும் சர்ச்சைக்குரிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வேட்பாளர்களை தேர்வு செய்ய கல்வி மற்றும் இதர தகுதிகள் வாக்காளர்களுக்கு உதவும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் ஊடாக அந்த முறையை நடைமுறைப்படுத்த முடியாத பட்சத்தில் அந்தந்த அரசியல் கட்சிகள் இணையம் ஊடாக அதனை நடைமுறைப்படுத்த முடியும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து வேட்பாளர்களின் அடிப்படை தரவுகளையும் சேகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆயிரத்திற்கும் குறைவான வேட்பாளர்களே தகவல்களை வழங்கியதாக ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டினார்.

அண்மையில், முன்னாள் சபாநாயகரின் "கலாநிதி" பட்டம் மற்றும் பல எம்.பி.க்களின் கல்வித் தகுதிகள் குறித்து சர்ச்சைக்குரிய விவாதம் எழுந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியாவில் மீண்டும் சர்ச்சை புதிய இடைக்கால ஜனாதிபதி நியமனம்

■ பாலகணேஷ் டிலுக்ஷா



தென்கொரிய இடைக்கால ஜனாதிபதி ஹான் டக்-சூ பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த பதவிக்கு நிதியமைச்சர் சோய் சாங்-மோக் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்கொரிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதிக்கத்தால் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஹான் டக்-சூ வெள்ளிக்கிழமையன்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 151 வாக்குகள் மாத்திரமே தேவையாக காணப்பட்ட நிலையில் 192 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆளுங்கட்சி உறுப்பினர் சிலர் வாக்கெடுப்பை புறக்கணித்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.தென் கொரியா ஜனநாயக நாடாக மாறிய பின்னர் பதில் ஜனாதிபதி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதன்முறை.

முன்னாள் தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த மூன்றாம் திகதி (03) அந்நாட்டில் அவசரகால இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

வடகொரியாவின் கம்யூனிஸ்ட் படைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து தென்கொரியாவை பாதுகாக்கும் நோக்கிலும் உள்நாட்டில் தேச விரோத சக்திகளை ஒழிக்கும் நோக்கிலும் இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியாக அவர் விளக்கமளித்திருந்தார்.

இதன்பின்னர் இந்நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரானது என தென் கொரிய அரசியல்வாதிகள் இராணுவச் சட்டப் பிரகடனத்தை விமர்சித்தனர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலருமே இதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அவர் அந்த சட்டத்தை மீளப்பெற்ற போதிலும் அவர் பதவி விலக வேண்டும் என பொதுமக்கள் உட்பட பலரும் வலியுறுத்தினர்.

மேலும் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தையும் எதிர்கட்சிகள் தாக்கல் செய்திருந்தன. ஆனால் அந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆளுங்கட்சியினர் புறக்கணித்ததால், தீர்மானம் தோல்வயடைந்தது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக அவருக்கு எதிரான பதவிநீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

# மன்மோகன் சிங்கிற்கு இலங்கை அரசியல் தலைவர்கள் இரங்கல்

■ பாலகணேஷ் டிலுக்ஷா

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸின் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் தனது 92 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானதையடுத்து இலங்கை அரசியல் பிரமுகர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கலாநிதி மன்மோகன் சிங் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவராக இருந்துள்ளதாக தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவருடைய பொருளாதார சீர்திருத்தங்கள் இந்தியாவை மாற்றியமைத்ததுடன் பிராந்தியத்தை ஊக்கப்படுத்தியது எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்திலேயே இதனைப் பதிவிட்டுள்ளார். அவரது இரங்கலில்,

" கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவு மிகவும் கவலையளிக்கிறது. முன்னேற்றம் மற்றும் நேர்மைக்கான அவரது அர்ப்பணிப்பு எமக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும். இந்த இழப்பின் போது எங்களின் எண்ணங்கள் அவரது குடும்பத்தினருடனும் இந்திய மக்களுடனும் உள்ளன" என பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, மன்மோகன் சிங் ஒரு தொலைநோக்கு பொருளாதார நிபுணர் என்றும், இந்தியாவின் பொருளாதார தாராளமயமாக்கலின் சிற்பி என்றும், அவரது பங்களிப்புகள் இந்தியாவிற்கு ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் அவர் பதிவிட்டிருப்பதாவது,

"முன்னாள் இந்தியப் பிரதமர் டொக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு பெரும் கவலையில் ஆழ்த்துகிறது. அவரது குடும்பத்தினருக்கும்,இந்திய மக்களுக்கும் எனது இதயபூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என அவர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிறந்து விளங்கிய கலாநிதி மன்மோகன் சிங் நேர்மையாகச் செயற்பட்டார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

"இந்திய மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கல்கள். நவீன இந்தியாவின் பொருளாதார மறுமலர்ச்சியின் சிற்பியான ஒரு சிறந்த மனிதர், இலங்கையில் தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையாக உழைத்தவர் " என சுமந்திரனும் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# காலி கோட்டை நான்கு நாட்களுக்கு பூட்டு



காலி கோட்டை செல்வதற்கான பழைய கோட்டை நுழைவாயில் சனிக்கிழமை (28) முதல் 31 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்படும் என தொல்பொருள் திணைக்களத்தின் தென் மாகாண பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

தொல்பொருள் நினைவுச் சின்னமாகவும் உலக பாரம்பரிய சின்னமான காலி கோட்டையின் பழைய கோட்டை வாசலின் சுவரைப் புனரமைப்பதற்காகவே இது தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

கோட்டை வாயில்களைச் சூழவுள்ள பகுதியில் இரசாயன பாதுகாப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண தொல்பொருள் பணிப்பாளர் வசந்தி அழககோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 31ஆம் திகதி வரை காலி கோட்டைக்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் கோட்டையின் புதிய வாயிலை பயன்படுத்துமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### அரிசிப் பற்றாக்குறை...

அரிசி ஆலை உரிமையாளர்களுடன் சுமுகமாகவே செயல்பட விரும்புகிறோம். அவர்கள் சட்டவிரோதமாக செயல்பட்டால் நாம் மக்களின் பக்கம் நிற்போம் விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதுகாக்கும் தேவை எமக்கு உள்ளது." என்றார்.

### மன்மோகன் சிங்கின்...

தொலைநோக்கு கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவிற்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை. 2004 முதல் 2014 வரை இந்தியாவின் பிரதமராக அவர் செயல்படுத்திய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலைவாய்ப்பு செயல்திட்டம் போன்ற மாற்றத்துக்கான திட்டங்கள் என்பன சமத்துவம், தலையீடு தொடர்பிலான அவரது உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

சர்வதேச ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கலாநிதி மன்மோகன் சிங், நீண்டகால கூட்டுறவு கூட்டணிகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் BRICS போன்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்தியா, அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் மூலம் அவரது சிறந்த இராஜதந்திரம் தெரிகிறது. அவரது தன்னடக்கம், அறிவாற்றல் மற்றும் அரச சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியன நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலையான முன்மாதிரியாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்!

### 72,000 மெ.தொ.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அருக்கொட குறிப்பிட்டார்.

நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் கடந்த 4ஆம் திகதி வழங்கியது.

### மன்மோகன் சிங்...

இதனையடுத்து, அஞ்சலிக்கு பின் மன்மோகன் சிங்கின் உடல் அரசு மரியாதையுடன் சனிக்கிழமை தகனம் செய்யப்பட உள்ளதாக வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவைத் தொடர்ந்து தேசிய அளவில் 7 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதுமட்டுமன்றி நடைபெறவிருந்த அனைத்து அரச நிகழ்ச்சிகளையும் மத்திய அரசு இரத்து செய்துள்ளது. மேலும், 7 நாட்கள் துக்கப்பிரகடன அறிவிப்பைத் தொடர்ந்து மத்திய அரசு அலுவலகங்களில் தேசியக் கொடி அரை கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

அவரது இறுதிப் பயணம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைமையகத்திலிருந்து சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு ஆரம்பிக்கும் என அறிவித்திருந்தது.

பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, மல்லிகார்ஜுன் கார்கே உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் தலைநகரில் உள்ள முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை அஞ்சலி செலுத்தினர்.

இந்திய பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மன்மோகன் சிங்கின் நினைவாக அமைச்சரவை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றியது.

முன்னாள் பிரதமருக்கு அவரது மனைவி குர்க்ஷரன் கவுர் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் கட்சி வேறுபாடுகளின்றி தலைவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் மற்றும் இலங்கை உட்பட உலகம் முழுவதிலுமிருந்து மறைந்த மன்மோகன் சிங்கிற்கு இரங்கல்கள் குவிந்தன.

### அரச வைத்தியசாலைகளில்...

காணப்பட வேண்டும் எனினும், தற்போது 620 ஊழியர்கள் மாத்திரமே பணியாற்றுவதாக அவர் கூறினார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக கதிரியக்க நிபுணர்கள் நியமனம் செய்யப்படாமையால் நோயாளர்களின் சிகிச்சை மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஒன்றரை வருடத்திற்குள் 80க்கும் மேற்பட்ட கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த பதவிக்கு 110 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளதாக கூறிய அவர், சுகாதார அமைச்சின் கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் பயிற்சிப் பாடசாலையில் உயர்தர டிப்ளோமா பயிற்சியை முடித்த 41 டிப்ளோமாதாரர்கள் எட்டு மாதங்களாக சேவையில் இணைவதற்கு காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

### எதிர்க்கட்சிகளை...

எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என கணிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு எதிராக போராடுவோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் எம்முடனேயே இருக்கின்றன." என்றார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட பேராசிரியர் சரித்த ஹேரத்த கருத்து வெளியிடுகையில்,

"அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியே தற்போது செயல்படுகிறது. கல்வித்துறையை சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ளனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய வெளியிடும் சுற்றுநிஷரூபங்களை மீள திருத்தியமைக்க கல்வி அமைச்சர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுவொரு அரசியல் 'புஷரூட்செலட்'. எவ்வாறு நாட்டை முகாமைத்துவம் செய்யப் போகின்றனர் என நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்." என்றார்.

### மீனவர் விவகாரத்தில்...

ஒரு மனிதாபிமானமான தீர்மானம் எட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. அந்த தீர்மானத்துக்கான கலந்துரையாடல் எப்போது எங்கிருந்து ஆரம்பிக்கப்படும்?" என கேள்வி எழுப்பியவேளை அதற்கு பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டது. இனி பேச்சுவார்த்தை எதுவும் இல்லை. மீன்பிடி அமைச்சில் இருக்கின்ற அதிகாரிகளும் இந்தியாவில் இருக்கின்ற அதிகாரிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. அந்த பேச்சுவார்த்தைகள் தொடரும். அதில் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பேசப்படுகின்றது.

மனிதாபிமான உதவிகளை வாங்குவதோ கொடுப்பதோ தொடர்பாக ஒரு பேச்சுவார்த்தைக்கு நாங்கள் செல்லப்போவதில்லை. இதுதான் எங்களது மனிதாபிமான நடவடிக்கை என நாங்கள் கூறுகின்றோம் - என்றார்.

### அரசாங்கம் தமிழர்களை

தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், வைத்தியர் இ.சிறிநாத் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்கள், கிராம பெரியோர்கள், உறுப்பினர் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

இதன் போது தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநாத் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் அரசியல் உரிமையும், அரசியல் அபிலாசைகளும், அரசியலிலே தீர்மானிக்கின்ற சக்தியாக நமது மக்கள் இருக்க வேண்டும். வரும் தேர்தல்களிலும் மிக அவதானமாக எந்த விதமான அரசியல் நிகழ்ச்சி திட்டத்தின் மத்தியிலும் சரியான தீர்மானத்தை எடுப்பவர்களாக மக்கள் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் உரிமைகளுக்காகவும், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காகவும், தமிழ் மக்களின் எதிர்கால வாழ்க்கைக்காகவும் மிக உறுதியான கட்சியாக தமிழரசு கட்சி இருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே எனக்கு வாக்களித்த மக்களுக்கும் இந்த வேலையில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்திலும் அவ்வாறான உறுதியான நிலைப்பாட்டுடன் எனது மக்கள் நடந்து கொள்வார்கள் என நான் நம்புகின்றேன். இதன் மூலம் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதற்கும் நமது மக்கள் தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

மக்கள் எதிர்காலத்திலே பல துறைகளிலும் வெற்றி அடைகின்ற போது அல்லது திறமைகளைப் பெற்றுக் கொள்ளுகின்ற போது அதில் திருப்தி அடைந்து விடக்கூடாது. இன்னும் அத்துறைகளில் மேலும் அவற்றை சரியாக முன்கொண்டு செல்ல வேண்டும். அதனை எவ்வாறு இன்னும் மேம்படுத்த வேண்டும் போன்ற நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

### 150 கோடி மோசடி:

இதனையடுத்து கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவர்களை விமான நிலைய பொலிஸார் கைது செய்தனர்.

கொழும்பில் பிரிவெல்த் குளோபல் என்ற நிதி நிறுவனம், இஸ்லாமிய சரீ ஆ சட்டப்படி செயல்படுவதாகக் கூறி முதலீட்டாளர்களிடம் வைப்புத்தொகையைப்

பெற்று வந்ததாகவும், பொதுமக்களிடம் இருந்து சுமார் 150 கோடி இலங்கை ரூபாய் வைப்புத் தொகையைப் பெற்று மோசடி செய்தமைக்கு எதிராக இலங்கையில் அவர்களுக்கெதிராக பாதிக்கப்பட்டவர்கள் வழக்குகளைபதிவு செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணம், கல்முனையில் உள்ள பிரிவெல்த் குளோபல் நிறுவனத்தின் கிளையில் இந்த மோசடி நடந்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் அந்த நிறுவனத்தின் உரிமையாளராக முஹம்மது ஷிஹாப் என்பவரும் இயக்குநராக அவரது மனைவி பாத்திமா பர்சானாவும் உள்ளனர்.

கல்முனை நீதிமன்றத்தில் இம்மோசடி தொடர்பாக நூற்றுக்கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், முஹம்மது ஷிஹாப் அவரது மனைவி பாத்திமா பர்சானா மற்றும் மகன் ஆகியோர் 2020ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு தப்பிச் சென்றிருந்தனர்.

# ரூ. 2200 கோடி நிதியுதவியில் சீனாவின் வீட்டுத்திட்டம்

## முதற்கட்ட நிர்மாணப் பணிகள் மொறட்டுவையில் ஆரம்பம்






குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சீன நிதியுதவியான 2200 கோடி ரூபாய் நிதியுதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் வீட்டுத்திட்டத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் மொறட்டுவ, பட்டரிவத்தை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை (27) ஆரம்பித்து வைக்கப்பட்டன. சீன நிதியுதவியின் கீழ் 1996 வீடுகளில், குறைந்த வருமானம் பெறுவோருக்கு 575 வீடுகளும் மொறட்டுவ, பாட்டரிவத்தை பிரதேசத்திலும், 108 வீடுகள் கொட்டாவ பிரதேசத்தில் சிரேஷ்ட கலைஞர்களுக்காகவும் நிர்மாணிக்கப்படவுள்ளன

பாரபட்சமின்றி அனைவரும் மகிழ்ச்சியான மற்றும் உயர் வாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். இலங்கைக்கு இந்த வீடமைப்புத் திட்டத்தை வழங்கிய சீன அரசாங்கத்திற்கு தாம் நன்றி கூறுவதாகவும், வீடு என்பது ஒரு குடும்பத்தின் தரமான வாழ்க்கை மற்றும் பாதுகாப்பான இடமாகும். அரசாங்கம் என்றவகையில் வீடு மட்டுமல்ல, ஒரு வலுவான குடும்பத்தையும் சமூகத்தையும் கட்டமைக்க வேண்டும். குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் தேவைகளுக்கு வழங்கப்படும் இடம் மிகவும் முக்கியமானது என்று பிரதமர் கூறினார். இனம், மதம், பாலினம் போன்ற பேதமின்றி மக்கள் மகிழ்ச்சியாகவும், சிறப்பாகவும் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும், அதற்காக தனது நன்றியைத் சீன அரசாங்கத்துக்கு தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

### இலங்கையின் வரலாற்றில்

# மரபணு குறைபாட்டுடன் பிறந்த முதல் குழந்தை

அனுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தையொன்றுக்கு இலங்கையில் முதன்முறையாக கன்ஜெனிட்டல் மெத்தமோகுளோபினீமியா (Congenital Methomoglobinemia) என்ற அரிதான மரபணு கோளாறு கண்டறியப்பட்டுள்ளது.



தோல் நீல நிறமாக மாறி சுவாசத்தை கடுமையாக பாதிக்கும் இந்த நிலை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் முன்கூட்டிய சிசு பிறப்பு பிரிவின் விசேட வைத்தியரால் அடையாளம் காணப்பட்டது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தை பராமரிப்புப் பிரிவின் விசேட வைத்தியர் எஸ்.யு.சி.ரணவக்க, இந்தக் குறைபாடு குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக விளக்கமளித்தார்.

நோயறிதலை உறுதிப்படுத்துவதற்கான ஆரம்ப சோதனைகள் உள்நாட்டில் கிடைக்காத காரணத்தினால் மேலதிக பரிசோதனைக்காக குழந்தையின் இரத்த மாதிரியை ஜேர்மனிக்கு அனுப்பியதையடுத்து பிறவி மெத்தமோகுளோபினீமியா நோய் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

சவால்களுக்கு மத்தியில் சரியான நேரத்தில் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியுள்ளதாக தெரிவித்த வைத்தியர், சுகாதார அமைச்சு தேவையான மருந்துகளை வழங்கியதுடன் அக்குழந்தைக்கு முறையான சிகிச்சையை அளிக்க உதவியளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

பிறவி மெத்தெமோகுளோபினீமியா என்பது ஒரு அரிய நிலை, பொதுவாக நெருங்கிய இரத்த உறவினர்களின் திருமணங்களுடன் இது தொடர்புடையது.இருப்பினும், இந்தக் குழந்தையின் பெற்றோர் அத்தகைய உறவை கொண்டிருக்கவில்லை. இந்த நோய் உலகளவில் சுமார் 100,000 குழந்தைகளில் ஒருவரை பாதிக்கிறது.

பிறவி மெத்தமோகுளோபினீமியா உள்ளவர்களின் இரத்த திசுக்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்ல முடியாது. இது ஒட்சிசன் பற்றாக்குறை மற்றும் சயனோசிஸ், பலவீனம் மற்றும் மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளுக்கு வழிவகுக்கும் இலங்கையின் வரலாற்றில், நாட்டில் ஒரு நோயாளிக்கு பிறவி மெத்தமோகுளோபினீமியா கண்டறியப்பட்டது இதுவே முதல் முறை என்றும் வைத்தியர் உறுதிப்படுத்தினார்.

# கிழக்கு மாகாண புதிய உள்ளூராட்சி ஆணையாளராக அஸ்மி நியமனம்

**(முகம்மட் முக்தார்)**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக இலங்கை நிருவாக சேவை முதலாம் தர உத்தியோகத்தரான ஏ.எல்.எம்.அஸ்மி கிழக்கு மாகாண ஆளுனரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கல்முனை, அக்கரைப்பற்று மாநகர சபைகளின் ஆணையாளராகவும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண பயிற்சியும் ஆளணியும் பிரதிப்பிரதம செயலராகவும் கடமையாற்றிய இவர் பொத்துவில் உதவி பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியவராவார்.



உள்ளூராட்சி நிருவாகத்துறையில் பரந்த அனுபவம் கொண்ட இவர் பொத்துவிலை பிறப்பிடமாக கொண்டவராவார்.

கல்முனை மாநகர சபை ஆணையாளராக கடமையேற்ற பின்னர் அங்கு நிலவிய ஊழல்களை கண்டுபிடித்ததுடன் சுமார் 02 கோடி பணக் கையாடலையும் கண்டுபிடித்த ஒரு உத்தியோகத்தராவார்.

# நடுவானில் திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவு குர்திஸ்தானில் இலங்கை பெண் உயிரிழப்பு

உடல்நலம் பாதிக்கப்பட்ட இலங்கைப் பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை எர்பில் சர்வதேச விமான நிலையத்தில் (Erbil International Airport) உயிரிழந்துள்ளார்.

நடுவானில் விமானம் பயணித்துக்கொண்டிருந்த போது இந்த பெண்ணுக்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவால் விமானம் அவசரமாக எர்பில் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காமையால் இந்த உயிரிழப்பு இடம்பெற்றதாக குர்திஸ்தானில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி அஹமட் ஜலால் தெரிவித்துள்ளார்.

இந்தப் பெண் டோஹாவில் இருந்து பாரிசுக்கு விமானத்தில் சென்றுக்கொண்டிருந்த போது திடீர் சுகயீனம் ஏற்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக தூதரக அதிகாரி அஹமட் ஜலால், கூறியுள்ளார்.

81 வயதான குறித்த இலங்கை பெண் பிரான்சில் வசித்து வருபவர் என குர்திஸ்தானில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் கூறியுள்ளது. இவரின் சடலத்தை பிரான்ஸ்’க்கு கொண்டுசெல்ல அவரது மகனுக்கு உரிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் துணை தூதரகம் தெரிவித்துள்ளது.

“இலங்கை பிரஜை ஒருவருக்கு இப்பகுதியில் இதுபோன்ற சம்பவமொன்று நடப்பது இதுவே முதல் முறையாகும்” என தூதரக அதிகாரி அஹமட் ஜலால் கூறினார்.


### விளம்பரம்

**தேவை**

பெலியத்த பகுதியில் உள்ள எங்கள் நிறுவனத்திற்கு டயர் வேலை மற்றும் வீல் எலைமன்ட் வேலைகளுக்கு பயிற்சி பெற்ற தொழிநுட்பவியலாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

047-2251599/077-7556781


## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம்
14ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்:** இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள்.

**ரிஷபம்:** இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்:** சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள்.

**கடகம்:** நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள்.

**சிம்மம்:** சில சமயங்களில் அமைதியின்மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள்.

**கன்னி:** இன்று பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும்.

**துலாம்:** இன்று நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

**விருச்சிகம்:** இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள்.

**தனுசு:** ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

**மகரம்:** இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

**கும்பம்:** நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள்.

**மீனம்:** இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 03:54 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.
**நட்சத்திரம்:** இன்று முழுவதும் கேட்டை.
**யோகம்:** மரண,அமிர்த.
**சந்திராஷ்டமம்:** அஸ்வினி,பரணி
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** 04:30 PM முதல் 06:00 PM வரை.
**குளிகை:** 03:00 PM முதல் 04:30 PM வரை.
**எமகண்டம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களவெளி இறால் பண்ணையில் வேலை செய்துவந்த குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இறால் பண்ணையில் வேலை செய்து வந்த உயிரிழந்த நபர், மதுபோதையில் காணப்பட்டுள்ளதுடன், அவருக்கும், அங்கு தொழில் புரிந்துவந்த மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை அஸ்ரப் வைத்தியசாலையில் ‘டயாலிசிஸ்’ இயந்திரம் செயலிழப்பு

**(முகம்மட் முக்தார்)**

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக கல்முனை அஷ்ஃரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இருந்த டயாலிசிஸ் (Dialysis) இயந்திரங்களுக்குள் நீர் உட்புகுந்து பழுதடைந்துவிட்டதாக வைத்தியசாலை நிருவாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இப்பிரதேச சிறுநீரக நோயாளிகள் மற்றும் நோயாளிகள் டயாலிசிஸ் செய்ய முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. கல்முனை பிரதேசத்தில் உள்ள நோயாளிகள் டயாலிசிஸ் செய்வதற்கு மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கும் தனியார் வைத்தியசாலைகளுக்கும் தூரப் பயணங்கள் செய்து அலைய வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை அஷ்ஃரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ளதாகக் கூறப்படும் டயாலிசிஸ் இயந்திரங்கள் பல வாரங்கள் கடந்தும் திருத்தப்படாமல் உள்ளது. கொழும்பிலிருந்து உரிய தொழில்நுட்ப நிபுணர்களை அழைத்து வந்தே திருத்தப்பட வேண்டியுள்ளது. அண்மைய வெள்ளம் இவ்வைத்தியசாலை வளாகத்தினுள் நான்கு அடி உயரத்திற்கு உட்புகுந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வைத்திய சாலையின் பின்புறமாகவுள்ள கரைவாகு ஆறு சிற்றோடையாக மாற்றப்பட்டமை காரணமாகவே வெள்ளம் பரந்தோட வழியின்றி வைத்தியசாலையினுள் புகுந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வைத்தியசாலையினுள் உட்புகுந்த வெள்ளம் காரணமாக பழுதடைந்த மருத்துவ இயந்திரங்களை சுகாதார அமைச்சின் மூலம் திருத்துவதற்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் மக்கள் கோருகின்றனர்.

இதேவேளை, திகாமடுள்ள மாவட்ட ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா இவ்வைத்தியசாலைக்கு நேற்று(26)கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டு வைத்தியசாலை உபகரணங்கள் பழுதடைந்தமை பற்றி வைத்தியசாலை நிருவாகிகளிடம் கேட்டறிந்து சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கவனத்திற்கு விடயத்தை கொண்டுவருவதாகவும் உறுதியளித்தார்.

# திருமலை கடலில் மிதந்த ஆளில்லா விமானம்

## விசாரணைக்கு விசேட குழுக்கள்

**(கீத பொன்கலன்,கியாஸ் ஷாபி,சரவணன்)**

திருகோணமலை அருகே கடலில் மிதந்து கொண்டிருந்த சிறிய ரக விமானமொன்றை மீனவக் குழுவொன்று மீட்டுள்ளதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார். கடற்கரையிலிருந்து 35 கடல் மைல் தொலைவில் மீட்கப்பட்டுள்ள இந்த சிறிய ரக விமானம் விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கெப்டன் எரந்த கிகனகே தெரிவிக்கையில்,

இது இலகுரக ஆளில்லா விமானம். இந்த வகை விமானம் இதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டிலும் மீட்கப்பட்டிருந்தது. சுமார் 40 கிலோ எடையுள்ள இதுபோன்ற விமானங்கள் இந்திய விமானப்படையின் பயிற்சி அமர்வுகளில் பயன்படுத்தப்படுவது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.




எவ்வாறாயினும், மீட்கப்பட்டுள்ள விமானம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் விமானம் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் வெடிபொருட்கள் எதுவும் இதில் கண்டறியப்படவில்லை என்றும் விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## இந்தியாவை உச்சத்தில் நிறுத்திய பொருளாதார சிற்பி மன்மோகன்

இந்தியாவைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்த பெருந்தலைவர் மன்மோகன் சிங் தனது 92 வயதில் வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தி இருக்கிறார்.

இவருடைய இழப்பின் வேதனையை தாங்க முடியாத இந்தியா, ஏழு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கிறது.

இந்தியாவின் பலத்திற்கும் இருப்புக்கும் வித்திட்ட ஒரு பெருந்தலைவர் இவர். ஒரு காலத்தில்,பலவீனமான பிரதமர் என விமர்சிக்கப்பட்டவர். என்றாலும்,அணுக் குண்டு ஒப்பந்த விவகாரத்தில் சாதித்து காட்டிய திருமகன் இவர்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் 2004 முதல் 2014 வரை தொடர்ந்து இரண்டு முறை மன்மோகன் சிங் பிரதமராக இருந்தார். காங்கிரஸ் பிரதமராக இருந்த நரசிம்மராவ் ஆட்சியில் முதன்முறையாக நிதி அமைச்சராக பணியாற்றினார்.

இந்திய அரசியலில் மன்மோகன் சிங் செய்த பொருளாதாரப் புரட்சி இன்றும் நினைவு கூரப்படுகிறது.

பொருளாதாரப் பேராசிரியராக இருந்து, மத்திய நிதியமைச்சர் பதவியில் அமர்ந்த மன்மோகன், 1991ல் பல பொருளாதார சீர்திருத்தங்களை செய்தார். இந்தியாவின் அரசியல் கட்சிகள் மாத்திரம் அல்ல, சர்வதேச ரீதியாகவும் மன்மோகன் சிங் பலவீனமான ஒரு தலைவராக பார்க்கப்பட்டார். என்றாலும், அவர் சார்ந்த காங்கிரஸ் கட்சி, அவருடைய திறமையையும் கல்வித் தகமையையும் நன்கு அறிந்திருந்தது. அவருடைய பதவியேற்பை காங்கிரஸ் கட்சி மிகவும் எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் மேற்கொண்டது. யாருடனும் சிரித்துப் பேசாத மென்போக்கு நிலையை கடைப்பிடித்து வந்த மன்மோகன் சிங், இந்தியாவை அழிவிலிருந்து பாதுகாத்து, உலகிற்கு உயர்ந்த செய்தியை பறைசாற்றினார்.

2008-ல் உலகம் முழுவதிலும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை இந்தியாவில் திறமையுடன் சமாளித்த பெரும் தலைவராக உலகத்தில் அடையாளம் காணப்பட்டார்.

இந்தியா-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங் கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதால், உலகம் முழுவதும் வியந்து நின்றது.

ஏனெனில், “பலவீனமானவர்” என்று கருதப்பட்ட மன்மோகன் சிங், அணுசக்தி ஒப்பந்தத்தில் அற்புதம் செய்ததாக ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டார். இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாக்க கடுமையான நிலைப்பாட்டையும் அவர் காட்டி இருந்தது பாராட்டை பெற்றது.

உலக நாடுகளின் முன் இந்தியாவின் தேசநலன் கருதி எடுக்கப்பட்ட முடிவுகளில் பிரதமர் மன்மோகன் செய்தது பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தம் இந்தியா மீது விதிக்கப்பட்ட அணுசக்தி தடைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு மைல்கல் என்பதை இந்தியாவும் இந்திய மக்களும் பின்னரே அறிந்து கொண்டார்கள்.

இந்த விடயத்தில், மன்மோகன் சிங் அனைத்து அரசியல் எதிரிகளையும் தோற்கடித்தார். இந்தியாவின் பிரதமராக, நாட்டின் வரலாற்றின் திசையை மாற்றியமைக்கும் இத்தகைய முடிவுகளை தற்துணிவோடு இந்தியாவை நிலை நிறுத்தினார்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசு, இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவை நம்பியிருந்தது. இக்கட்சிகள், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தன. சிபிஐ(எம்) கட்சியின் பொதுச் செயலாளராக ஹர்கிஷன் சிங் சுர்ஜித்துக்குப் பதிலாக பிரகாஷ் காரத் பதவியேற்றதும் இடதுசாரிகளுடன் மன்மோகன் சிங்கின் பிரச்சினை தொடங்கியது. சாந்த குணத்திற்கும் அமைதியான குரலுக்கும் பேர்போன மன்மோகன் சிங், இடதுசாரிகளின் பிரச்சினையை எளிதாக சமாளித்து காங்கிரஸ் ஆட்சியை ஆட்டங் காணாமல் நகர்த்திச் சென்றார்.

உலகப் புகழ்பெற்ற கேம்ப்ரிட்ஜ், ஒக்ஸ்போர்ட், பல்கலைக் கழகங்களில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றவர் மன்மோகன் சிங். பஞ்சாப், டெல்லி பல்கலைக்கழகங்களில் பணியாற்றியும் உள்ளார். டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் கௌரவ பேராசிரியராகவும் கடமையாற்றி இருக்கிறார்.

மன்மோகன் சிங், ரிசர்வ் வங்கி ஆளுநராக 1982 முதல் 1985 வரை பணியாற்றினார். 1985 முதல் 1987 வரை திட்டக்குழு துணைத் தலைவராக இருந்தார். 1990-91 வரை பிரதமரின் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றினார்.

இவர் நிதி அமைச்சராக இருந்த காலத்திலும் சரி, பிரதமராக இருந்த காலத்திலும் சரி, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் இந்தியா என்ற இலக்கோடு செயல்பட்டவர்.

மன்மோகன் சிங்கைப் பொறுத்தவரை, கொள்கையில் சோரம் போகாதவர் என்பதை வாழ்நாளில் நிரூபித்திருக்கிறார். கொள்கையில் விடாப்பிடித்தனமாக செயல்பட்டவர் என்றும் இவரை நாம் பார்க்க முடிகின்றது.

1999 இல், நடந்த மக்களவை தேர்தலில் அவர் தெற்கு டெல்லி தொகுதியில் மக்களவைக்கு போட்டியிட்டார். இந்த தேர்தல் பிரச்சாரத்துக்காக காங்கிரஸ் கட்சி தம் வேட்பாளர் மன்மோகன் சிங்குக்காக அப்போது ரூ.20 இலட்சம் அளித்திருந்தது. இது போதாது என டெல்லியின் பல செல்வந்தர்களும், தொழிலதிபர்களும் கூடுதல் தொகை நன்கொடையாக மன்மோகனுக்கு அளிக்க முன்வந்தனர்.

ஆனால், நன்கொடை பெறுவதைத் தவறு எனும் கொள்கை கொண்டிருந்த மன்மோகன் சிங், எவரிடமும் அவற்றை பெறவில்லை. தம் கட்சி அளித்த செலவுத் தொகையிலும் ரூ.7 இலட்சத்தை மன்மோகன் சிங் அன்று காங்கிரஸிடம் திருப்பி அளித்த வரலாறு உண்டு.

உண்மையில், இந்தியாவை உலகத்தின் உச்சத்தில் நிறுத்திய பெரும் பொருளாதார நிபுணர் மன்மோகன் சிங் என்பதை யாரும் மறுக்க முடியாது. நேர்மைமிகு இந்த அரசியல் தலைவருக்கு நாமும் இதய அஞ்சலியை செலுத்துகிறோம்.

# அரிசி இறக்குமதிக்கு ஏன் தாமதம்? இந்திய எதிர்ப்பு பின்னணியா?



கனுஷியா
புஷ்பகுமார்



அரிசித் தட்டுப்பாடு என்பது இலங்கைக்கு புதிய ஒரு விடயம் அல்ல. அதற்கான காரணம் அரிசி விலையேற்றம் மற்றும் அரிசி தட்டுப்பாடு இன்று நேற்று நாட்டில் இடம்பெற்றதாகக் கூற முடியாது. 1960ஆம் ஆண்டு ஹர்த்தால் இடம்பெற காரணமும் அரிசி விலை அதிகரிப்பு ஆகும்.

1972ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் உள்ளூர் உற்பத்தி வரவேற்கப்பட்டதுடன், இறக்குமதி பொருளாதாரத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இதன்காரணமாக நாட்டில் அன்று வரிசை யுகம் ஏற்பட்டது.

அதன் பின்னர் 1977ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்தன 6/5 பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதையடுத்து, திறந்த பொருளாதாரத்திற்கு வழிவகுக்கப்பட்டது.

இவ்வாறான போராட்டங்களுக்கு மத்தியில் அரிசி நெருக்கடி என்பது இலங்கை வரலாற்றில் அரசியல் மாற்றங்களை மேற்கொள்ளும் அளவிற்கு காணப்பட்டுள்ளது.

தற்போது மீளவும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எந்தவொரு அரிசியும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படாது என்று வழங்கப்பட்ட தேர்தல்கள் வாக்குறுதிகளை மீற வேண்டிய ஒரு சூழல் அநுர அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டில் தலைதூக்கியுள்ள அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும் என கடந்த நவம்பர் மாதத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டது.

அதன்படி, அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து, தனியார் இறக்குமதியாளர்களுக்கு அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்தது.

எவ்வாறாயினும், தற்போது சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு உக்கிரமடைந்துள்ள நிலையில், அரசாங்கம் விதித்த கட்டுப்பாட்டு விலையையும் தாண்டி தொகை மற்றும் சில்லறை வியாபாரிகள் மக்களை சுரண்டிக் கொண்டிருக்கின்றனர்.

அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அரசாங்கம் தனது கொள்கையையும் மீறி இறக்குமதிக்கு அனுமதி வழங்கினாலும் , இன்று வரையில் தனியார் இறக்குமதியாளர்கள் மாத்திரமே அரிசியை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றனர்.

அதன்படி, இந்தியாவிலிருந்து பச்சையரிசி, நாட்டு அரிசி போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு வந்தாலும், குறித்த அரிசித் தொகையை சுங்கத்திலிருந்து வெளியேற்றுவதற்குள் தனியார் இறக்குமதியார்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளனர். இதன் காரணமாக அவர்களுக்கு எதுவித இலாபமும் இல்லை என்பதை அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து கூறி வருவதுடன் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தும் வருகின்றனர்.

எனினும், இந்த கோரிக்கைகள் எதற்கும் அரசாங்கம் செவிசாய்க்கவும் இல்லை. அரசாங்கத்தினால் இது வரையில் அரிசி இறக்குமதி செய்யப்படவுமில்லை.

ஆக, அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள், இறக்குமதியை ஊக்குவிக்க மாட்டோம் என்ற அவர்களின் கொள்கை தான் காரணமா அல்லது இந்திய எதிர்ப்புவாதத்தின் தொடர்ச்சியா என்ற கேள்விகளும் இல்லாமில்லை. இது தொடர்பில் மக்களிடம் சந்தேகங்களும் வலுவடைந்துள்ளன.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் அநுர அரசாங்கம் இறக்குமதி பொருளாதாரத்தை ஊக்குவிக்க மாட்டோம், எந்தவொரு அரிசியும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படாது என்றே பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர்.

அந்த வாக்குறுதிகளின், கொள்கைகளை நம்பியே மக்களும் வாக்களித்தனர். எனினும், இன்று அரிசி தட்டுப்பாட்டால் துன்புறுவதும் அதே மக்கள் தான்.

உண்மையிலேயே, அரசாங்கத்தின் உள்ளூர் உற்பத்தி யோசனை வரவேற்கத்தக்கது. அதனால் தான் மக்கள் பெரும்பான்மையை அநுர அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தனர்.

உள்ளூர் உற்பத்தி என்ற இறக்குமதியில் ஈடுபடாமல் இருப்பது ஏன் என்பது பல கேள்விகளை எழுப்புகின்றன.

தனியார் இறக்குமதியாளர்கள் அரிசியை இறக்குமதி செய்தாலும், அதில் அவர்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதை பகிரங்கப்படுத்தியுள்ளனர். இந்நிலை தொடருமாக இருந்தால், இறக்குமதியை நிறுத்த வேண்டிவரும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான ஒரு பின்னணியிலும்

**எந்தவொரு அரிசியும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படாது என்றே ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் அநுர பிரசாரம் செய்திருந்தார். மக்களும் வாக்களித்தனர். எனினும், இன்று அரிசி தட்டுப்பாட்டால் துன்புறுவதும் அதே மக்கள் தான்**

கருத்தியலோடுதான் 1972ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் ஆட்சிக்கு வந்தார். அதனையே நடைமுறைப்படுத்தினார். அன்றும் மக்கள் அதனை சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொண்டனர். சகிப்புத் தன்மையோடு அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற மக்கள்

வரிசையில் காத்திருந்தனர். உள்ளூர் உற்பத்தித் திட்டம் சிறந்தது. அதனை மக்கள் வரவேற்காமலில்லை. ஆனால் அதற்குரிய பக்குவமான அணுகுமுறைகள் அவசியம். இப்பக்குவத்தை அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கவும் கையாளவில்லை. இன்று அநுரவும் கையாளவில்லை.

தட்டுப்பாடு நிலவும் ஒரு சந்தர்ப்பத்தில் கட்சிக் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் மையப்படுத்திக் கொண்டு அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் இருப்பது அரசியல் சித்து விளையாட்டாக இருக்குமோ என்ற அச்சங்களையும் ஏற்படுத்துகிறது.

கட்டுப்பாட்டு விலையை தாண்டி அரிசி விற்பனை செய்யப்படுகிறது. எதிர்வரும் நாட்களில் மக்கள் பண்டிகைகளை கொண்டாடவுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டில் முக்கிய உணவில், அரிசி தட்டுப்பாடாக இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மேற்படி சுட்டிக்காட்டியது போன்று, அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் இறக்குமதி பொருளாதாரத்தை ஊக்குவிக்கவில்லை எனின், உள்ளூர் உற்பத்தியிலாவது அவதானம் செலுத்த வேண்டும்.

இலங்கைத்தீவு வளத்தால் குன்றியது அல்ல, நீராலும், நிலத்தாலும் சிறப்புற திகழும் இந்நாட்டில் உள்ளூர் உற்பத்திக்கென இசைவாக்கமடைந்தது. மீன் வளம், விவசாயம் என்பன இந்நாட்டில் மிக நிறைவான விடயங்கள். அவ்வாறு இருப்பினும், உள்ளூர் உற்பத்திக்கு இடமளிக்கப்படும் என்பதை தேர்தல்


விஞ்ஞாபனத்தில் வெறும் எழுத்துக்களுக்கும், மேடைப் பேச்சுக்கும் மட்டுப்படுத்துவது ஏன்?

இதேவேளை, அதனால் பல வேலை வாய்ப்புகள் மேம்படுவது மாத்திரமன்றி, விவாசாயிகள், மீனவர்கள் இதனால் அநேக பயன்களை அடைவார்கள்.

எவ்வாறாயினும், தட்டுப்பாடு என்ற ஒன்று நிலவி வரும் சந்தர்ப்பத்தில் அதனை பயன்படுத்தி தனது அரசியல் விளையாட்டுக்களை அரங்கேற்றுவது அதிகளவு மக்களின் ஆணையைப் பெற்ற ஒரு அரசாங்கத்திற்கு நல்லதல்ல.

ஆக, “புதிய அரசாங்கம் அரசியலில் அனுபவமற்றவர்கள்“ என்ற அடைமொழியை மாற்ற தற்போதைய அநுர அரசாங்கம் முன்வர வேண்டும்.

உள்ளூர் உற்பத்தியோ ஏற்றுமதி பொருளாதாரமோ, எதுவாயினும் மக்கள் ஏமாற்றப்பட்டு விடக் கூடாது. சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு, சரியான வழியில் மக்களை வழிநடத்த புதிய அரசாங்கம் செயல்பட வேண்டும்.



# இந்திய பொருளாதாரத்தின் சிற்பி மன்மோகன் சிங்

மன்மோகன் சிங், இந்திய வரலாற்றில் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர்களில் ஒருவர் மாத்திரமின்றி தார்மீக ரீதியாக நேர்மையானவர் என்ற நற்பெயரைப் பெற்றவர்.

கடந்த 2004 முதல் 2014 வரை பிரதமராகவும், அதற்கு முன்னர் நிதியமைச்சராகவும் இருந்தபோது, நாட்டின் பொருளாதாரத்தில் தாராளமயமாக்கல் உட்பட பல முக்கியமான சீர்திருத்தங்களைச் செதுக்கிய சிற்பியாக அவர் கருதப்படுகிறார்.

ஜவஹர்லால் நேருவுக்கு பின், முழு முதல் பதவிக் காலத்திற்குப் பிறகு மீண்டும் தெரிவு செய்யப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்ற மன்மோகன் சிங், இந்திரா காந்தி உட்பட 7 பிரதமர்களுடன் பணியாற்றியுள்ளார். அவருடைய இந்த அரசியல் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை விபரிப்பதே இந்தக் கட்டுரை..

**சிறு வயதிலேயே தாயை இழந்த மன்மோகன்**

மன்மோகன் சிங், பிரிக்கப்படாத இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள "கஹ்" என்ற கிராமத்தில் 1932ம் ஆண்டு செப்டம்பர் 26ம் திகதி அன்று பிறந்தார். மன்மோகன் பிறந்து சில மாதங்களே இருந்த போது அவருடைய அம்மா இறந்துவிட்டார். அவருடைய அப்பா வேலைகளுக்காக அடிக்கடி வெளியே சென்றுவிடுவார். தன்னுடைய உறவினர் வீட்டில் அவர் வாழ்ந்து வந்தார். அவருடைய பாட்டி, அவரை பார்த்துக் கொண்டார் என்று சஞ்சய் பாரு, "தி ஆக்சிடெண்டல் பிரைம் மினிஸ்டர்" புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். மூத்த பத்திரிகையாளரான அவர், மன்மோகனுக்கு ஊடகவியல் ஆலோசகராக ஒருமுறை பணியாற்றியுள்ளார்.

அவருடைய சொந்த கிராமத்தில் ஆரம்பப் பாடசாலையோ, சுகாதார மையமோ இல்லை. பல மைல்கள் நடந்தே அவர் பாடசாலைக்குச் சென்றார். மின்சார வசதிகள் போதுமானதாக இல்லாத அந்த காலத்தில் அவர் மண்ணெண்ணெய் விளக்கு வைத்து இரவு நேரங்களில் படிப்பார். மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்ட மன்மோகன் சிங் படிப்பில் சிறந்து விளங்கினார்.

1947ம் ஆண்டு, பிரிவினைக்குப் பிறகு மன்மோகன் சிங் அவருடைய குடும்பத்தோடு இந்தியாவுக்கு வந்தார். அவர்கள் ஆரம்பத்தில் உத்தராகண்டில் அமைக்கப்பட்டிருந்த ஹல்த்வானி அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். பிரிவினையால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக, அவருடைய தேர்வுகளை அவரால் எழுத முடியாமல் போனது. இந்தியாவில் அவர் அந்த தேர்வுகளை எழுதினார். பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படிக்க சென்றார் என்று, மூத்த பத்திரிகையாளர் மனினி சாட்டர்ஜி தெரிவிக்கிறார்.

கடந்த 1991ம் ஆண்டில் ஒன்றிய நிதி அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பிறகு, அவரின் பால்ய கால நினைவுகளை விரிவாக நேர்காணல் ஒன்றில் மன்மோகன் சிங் பகிர்ந்தார் என்று சாட்டர்ஜி குறிப்பிடுகிறார். இந்தியாவிற்கு வந்த பிறகும் கூட, அவரின் குடும்ப சூழல் நிச்சயமற்றதாக இருந்தது. அகதிகள் முகாமில் வசித்த பிறகு அமிர்தசரஸ், பட்டியாலா, ஹோஷாப்பூர் மற்றும் சண்டிகர் உள்ளிட்ட இடங்களில் அவர் வாழ்ந்தார். அவரின் குடும்ப சூழல் மோசமாக இருந்தது. ஆனாலும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பிறகு தனக்கு கிடைத்த கல்வி உதவித்தொகையை வைத்து அவர் கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்ஃபோட் பல்கலைக்கழகங்களில் மேற்படிப்புகளை மேற்கொண்டார்.

"அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் சூழலில் நான் இருக்கவில்லை. ஆனால், நான் இந்தியா வந்த பிறகு நன்றாக படித்தேன். அதிர்ஷ்டமும் எனக்கு கைகொடுத்ததால் எனக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைத்தன" என்று மன்மோகன் சிங் அமெரிக்க ஊடகவியலாளர் சார்லி ரோஸ்‌க்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். இந்த நேர்காணலை அவர் 2004ம் ஆண்டு அமெரிக்காவில், ஐ.நா. நிகழ்வு ஒன்றில் பங்கேற்க சென்றபோது வழங்கினார்.

இந்தியா ஏன் ஏழ்மையாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள நான் பொருளாதாரம் படித்தேன் என்று அவர் ஒருமுறை கூறியுள்ளார். ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்த மன்மோகன் சிங், முதலாளித்துவத்தை ஆதரித்தார். நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அது தேவை என்று அவர் கருதினார். கடந்த 1991ம் ஆண்டு அவர் நிதி அமைச்சராக இருந்தபோது நாட்டின் பொருளாதாரத்தை உலகத்திற்காக திறந்துவிட்டார். தாராளாமயமாக்கலை நோக்கி நாடு நகர்ந்தது.

**அரசியலுக்கு முன் மன்மோகன் சிங்**

ஒக்ஸ்ஃபோட்டில் முனைவர் படிப்பை முடித்த பிறகு, பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். பிறகு டில்லியில் பேராசிரியராக பணியாற்றினார். 1971ம் ஆண்டு அவர் இந்திய அரசின் வர்த்தகத்துறையில் பொருளாதார ஆலோசகராக பணியாற்றினார். அப்போதிருந்து அவர் இந்திய அரசுக்காக பணியாற்றி வந்தார்.

1972ம் ஆண்டு அவர் நிதித்துறையின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டார். பிறகு திட்ட அறிக்கையின் துணைத்தலைவர், ரிசர்வ் வங்கியின் ஆளுநர், பிரதமர் ஆலோசகர், பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை வகித்தார்.

**மன் மன்மோகன் சிங்கின் அரசியல் வருகை**

அவரின் அரசியல் வருகை மிகவும் சுவாரஸ்யமானது. கடந்த 1991ம் ஆண்டு கோடை காலத்தில் இந்திய அரசியலில் நடந்த பல்வேறு நிகழ்வுகளை கவனித்து வந்தார் மன்மோகன் சிங். சந்திரசேகரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். தேர்தலுக்குப் பிறகு நரசிம்ம ராவ் பிரதமர் ஆனார். அதேநேரத்தில், இந்தியாவின் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருந்தது. இரண்டு வாரங்களுக்குத் தேவையான எரிபொருள், உரம் மற்றும் இதர பொருட்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்குத் தேவையான அந்நிய செலாவணி மட்டுமே இந்திய கருவூலத்தில் இருந்தது. அன்னியச் செலாவணி தொடர்பான முடிவுகளை எட்டவில்லை என்றால் இந்தியாவின் இறக்குமதி 1991ம் ஆண்டு ஜூலை மாதத்தோடு ஸ்தம்பித்திருக்கும். நரசிம்ம ராவ் அந்த நேரத்தில் இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க சிறப்பு பொருளாதார நிபுணர் தேவை என்று கருதினார். நிதி அமைச்சர் பொறுப்புக்கான ஆட்களை அவர் தேட ஆரம்பித்தார். அரசியலுக்கு வெளியே உள்ள ஒருவர் தான் இந்த பொறுப்புக்கு சரியானவர் என்றும் அவர் நம்பினார். ஐ.ஜி.பட்டீல் மற்றும் மன்மோகன் சிங் என இருவரின் பெயர்கள் அவர் முன்னால் வைக்கப்பட்டது. மன்மோகன் சிங் தேர்வு செய்யப்பட்டார். நரசிம்ம ராவின் நம்பிக்கைக்குரிய ஐ.ஏ.எஸ் அதிகாரி பி.சி.அலெக்சாண்டரிடம் இந்த தகவலை சிங்கிடம் தெரிவித்து, அவரின் ஒப்புதலைப் பெறும் பணிக்காக நியமிக்கப்பட்டார். உறங்கி எழுந்த மன்மோகன் சிங்கிடம் அதிகாலையில் முதல் தகவலாக இதைக் கொண்டு போய் சேர்த்தார் அலெக்சாண்டர். அந்த பொறுப்பை ஏற்ற அவர் இந்தியாவின் பொருளாதார கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தப்பிக்க நாட்டின் கையிருப்பில் இருந்த தங்கம் அடமானம் வைக்கப்பட்டது. பிறகு 1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பொருளாதாரத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. அடமானம் வைத்த தங்கத்தை மீட்டது இந்தியா.



**நிதி அமைச்சராக பொறுப்பேற்று நாடாளுமன்ற பயணம்**

தேர்தலுக்குப் பிறகு முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்தார் அவர். பிரான்ஸ் எழுத்தாளரும் அரசியல்வாதியுமான விக்டர் ஹ்யூகோவின் பிரபலமான வாசகத்தை மேற்கோள்காட்டி "ஒருவருக்கான காலம் கைக்கூடினால், பூமியில் எந்த சக்தியும் அவரின் சிந்தனைகளை நிறுத்த முடியாது" என்று விக்டர் ஹ்யூகோவை மேற்கோள் காட்டி கூறினார். "இந்தியா அதனுடைய சந்தையை உலக நாடுகளுக்காக திறந்தது. இந்தியாவின் பொருளாதாரத்தில் பல மாற்றங்களை அது ஏற்படுத்த உள்ளது. உலகத்தில் உள்ள எந்த சக்தியும் இனி நம்மை தடுக்க முடியாது," என்று தன்னுடைய உரையை அவர் முடித்தார். கூறினார். 1991ம் ஆண்டு ஜூலை மாதம் 24ம் திகதி இந்தியாவின் பொருளாதார சந்தை உலக நாடுகளுக்காக திறந்துவிடப்பட்டது. இந்த புதிய பொருளாதார கொள்கையின் விளைவாகவே, 2024ம் ஆண்டு 3 ரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரத்தை இந்தியா எட்டியுள்ளது. மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஐந்தாவது நாடாக இந்தியா திகழ்கிறது.

**மன்மோகன் சிங் பிரதமரான கதை**

2004ம் ஆண்டு, நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அடல் பிஹாரி வாஜ்பாய் தோற்கடிக்கப்பட்டார். அன்றைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி பிரதமராவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், பாஜகவினர், குறிப்பாக சுஷ்மா ஸ்வராஜ் கடுமையான எதிர்ப்புகளை பதிவு செய்தார். "இந்தியா சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆன பிறகு, வெளிநாட்டை சேர்ந்த ஒருவர் இந்தியாவின் முக்கியமான பொறுப்பில் பணியாற்றுவார் என்றால் நான் மொட்டை அடித்துக்கொண்டு, செருப்பு அணியாமல், வெள்ளை புடவை உடுத்தி, தரையில் தூங்குவேன்" என்று விமர்சனம் செய்தார். காங்கிரஸ் பாஜகவின் எதிர்ப்பைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சோனியா, கூட்டணி கட்சிகளின் மூத்த தலைவர்களை சந்தித்து பேசினார். கூட்டணி ஆட்சியை உருவாக்கும் முனைப்பில் அவர் இருந்தார். அதன் பின்னால் நடந்த நிகழ்வுகளை பத்திரிகையாளர் நீர்ஜா சௌத்ரி தன்னுடைய "ஹவ் பிரைம் மினிஸ்டர்ஸ் டிசைட்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். பாஜகவின் எதிர்ப்பை தீவிரமாக காங்கிரஸ் எடுத்துக் கொள்ளாத போதும் ஒரு நிகழ்வு சோனியா பிரதமராகும் எண்ணத்தை கைவிட வைத்தது. மே 17, 2004 அன்று ஜன்பத்தில் அமைந்துள்ள சோனியா காந்தியின் அதிகாரப்பூர்வ இல்லத்திற்கு சென்றார் நட்வர் சிங். அங்கே மன்மோகனை பார்க்க அவர் சென்றிருக்கிறார். அப்போது சோனியா, பிரியங்கா, சுமன் துபேய் உள்ளிட்டோரும் அங்கே அமர்ந்திருந்தனர். அப்போது அங்கே வந்த ராகுல் காந்தி, "நீங்கள் பிரதமராகக் கூடாது அம்மா. ஏற்கனவே என்னுடைய தந்தை கொல்லப்பட்டுவிட்டார். என்னுடைய பாட்டியும் கொல்லப்பட்டுவிட்டார். இப்போது நீங்கள் பிரதமரானால், ஆறு மாதங்களில் நீங்களும் கொல்லப்படுவீர்கள்" என்று அவர் கூறினார். மேலும் 24 மணிநேரத்திற்குள் இந்த விவகாரம் தொடர்பாக முடிவெடுக்கும்படியும் ராகுல் கூறிவிட்டு சென்றுவிட்டார். நட்வர், "இந்த விவகாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சோனியாவிடம் தெரிவித்தார்.

தன்னுடைய மகனின் கருத்துக்கு எதிராக சோனியா காந்தியால் ஒரு அம்மாவாக முடிவெடுக்க இயலவில்லை என்று நட்வர் சிங் கூறினார். அதே நாளில், காங்கிரஸின் மூத்த தலைவர்களை ஜன்பத்தில் உள்ள இல்லத்திற்கு அழைத்தார் சோனியா காந்தி. அவருடன் நட்வர் மற்றும் மன்மோகன் உடன் இருந்தனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் பிரனாப் முகர்ஜி, சிவ்ராஜ் பட்டீல், குலாம் நபி, அஹ்மது படேல் உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்றனர். "மன்மோகன் சிங் பிதமராக பதவி ஏற்க வேண்டும்" என்று சோனியா காந்தி அந்த கூட்டத்தில் குறிப்பிட அனைவரும் அமைதியானார்கள்.

மன்மோகன் சிங்கோ, "இந்த பதவியை அளிக்க முன்வந்ததற்கு நன்றி. ஆனால் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் என்னால் இதை ஏற்றுக் கொள்ள இயலாது" என்று கூறினார். அப்போது நட்வர் "இதனை மறுக்கும் உரிமை மன்மோகனுக்கு இல்லை. ஏனென்றால் பெரும்பான்மையை கொண்ட ஒரு நபரே உங்களுக்கு இப்படி ஒரு பதவியை வழங்குகிறார்" என்று கூறினார். அடுத்த நாள் சோனியாவும், மன்மோகனும் அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை நேரில் சந்தித்தனர். சிங்கின் பெயர் அதிகாரப்பூர்வமாக பிரதமராக அடுத்த நாள் அறிவிக்கப்பட்டது. மன்மோகன் சிங் 2004ம் ஆண்டு இரண்டு காரணங்களுக்காக பிதமராக தேர்வு செய்யப்பட்டார். ஒன்று சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்தவர். இரண்டாவது ராகுல் காந்தி அவருடைய அம்மாவுக்கு விடுத்த எச்சரிக்கை என்பனவாகும்.

**பொருளாதார முறைகேடுகளால் சிக்கலான அரசியல் வாழ்க்கை**

இந்தியாவின் 13வது பிரதமராக 2004ம் ஆண்டு பொறுப்பேற்றார் மன்மோகன். இந்தியாவின் பொருளாதாரத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 முதல் 8 வீதமாக உயர்ந்தது. இந்த ஆட்சிக்காலத்தின் போது ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டமான நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டம், கல்வியை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக சேர்த்தது போன்ற முக்கிய முடிவுகள் எட்டப்பட்டன.

இந்தியா – அமெரிக்கா அணு ஆயுத ஒப்பந்தம் மன்மோகன் சிங்குக்கு சவாலாக முடிந்தது. இதனைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்மொழிந்தனர். அரசுக்கு அளித்த ஆதரவை விளக்கிக் கொண்டது இடதுசாரி கட்சிகள். ஆனாலும், சிங்கின் ஆட்சி வெற்றி கண்டது. இந்த காலக்கட்டத்தில் மற்றொமொரு வரலாற்று ரீதியான முடிவை அறிவித்தது மன்மோகன் சிங்கின் அரசாங்கம். அதன்படி, விவசாயக் கடன்கள் இரத்துச் செய்யப்பட்டன. மன்மோகன் சிங்கின் இரண்டாவது ஆட்சி காலம் சவாலாக இருந்தது. நிதி மோசடிகள் தொடர்பாக அவருடைய அரசாங்கம் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டது. அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிரான இயக்கத்தைத் ஆரம்பித்தார். ஓடும் பேரூந்தில் இளம்பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான நிகழ்வும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெற்றன. உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணராக அறியப்பட்ட சிங்கால் தன்னுடைய ஆட்சியில் நடைபெற்ற மோசடிகளை தடுக்க இயலவில்லை என்ற விமர்சனத்தை எதிர்கொண்டார். மன்மோகன் சிங் எந்த தேர்தலிலும் போட்டியிடவில்லை. ஆனால், உலக அரங்கில் ஒரு மகத்தான பொருளாதார நிபுணராக அறியப்படுகிறார்.



உலக அரங்கில் ஒரு மகத்தான பொருளாதார நிபுணராக அறியப்பட்டது மட்டுமன்றி இந்திரா காந்தி உட்பட 7 பிரதமர்களுடன் பணியாற்றியுள்ளார்

**கணேஷ் போல்**
**- நன்றி பிபிசி தமிழ்-**







# ரோஹிங்கியா அகதிகளுக்கு மனிதாபிமான புகலிடம்

## ஜனாதிபதிக்கு ஒரு திறந்த மடல்



**103 புகலிட கோரிக்கையாளர்களை மீரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பிய அதேவேளை, அழைத்து வந்த படகுக்காரர்கள் 12 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது**



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

“இலங்கையில் உள்ள மியான்மர் ரோஹிங்கியா அகதிகளுக்கு மனிதாபிமான புகலிடம் கோரிக்கை” என்ற தலைப்பிட்டு இலங்கையில் செயற்பட்டு வரும் முன்னணி தன்னார்வ சிவில் சமூக அமைப்புக்களும் சமூக செயற்பாட்டாளர்களுமாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் ஒரு திறந்த வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர். இந்த மகஜரில் இலங்கையில் செயற்பட்டு வரும் முக்கிய முன்னணி 47 உள்ளூர் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் கையொப்பமிட்டுள்ளன. கிறிஸ்மஸ் (2024) தினத்தன்று இந்த அவசரக் கடிதம் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோள் மனுவில் தெரிவிக்கப்ப ட்டுள்ளதாவது,

நாமும் அகதிகளை அனுப்பும் நாடாக இருந்துள்ளோம் என்பதை இலங்கையர்களாகிய நாம் ஒருபோதும் மறந்துவிடாமல் ரொஹிங்கியா அகதிகள் விடயத்தை அணுகவேண்டியுள்ளது.

அண்மையில் மியான்மரில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள ரோஹிங்கிய புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பாக உண்மையான மற்றும் அவசர வேண்டுகோளுடன் நாங்கள் உங்களுக்கு எழுதுகிறோம்.

மியான்மரில் குடியுரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நாடற்ற இனக்குழுவாக ரோஹிங்கியா மக்கள் உள்ளனர். அவர்களில் பலர் 2017ஆம் ஆண்டு முதல் பங்களாதேஷில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர், மேலும் அவர்கள் மியான்மருக்கு திரும்புவது மிகவும் கடினமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர்களின் அவல நிலையை ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பரவலாக அங்கீகரித்துள்ளதுடன், அவர்களின் துன்பங்களுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகம் பலமுறை கோரிக்கை விடுத்து வந்துள்ளது.

மியான்மரில் இடம்பெற்றுவரும் மிருகத்தனமான இனச்சுத்திகரிப்பு சூழ்நிலைகளில் இருந்து தப்பியோடுபவர்களுக்குப் பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் பாதுகாப்பை வழங்குவதன் முக்கியத்துவத்தை UNHCR அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. டிசம்பர் 19, 2024 அன்று காலை, 103 ரோஹிங்கியா புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற பல நாள் இழுவைப் படகு முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் கடற்கரையை நோக்கிச் சென்றுள்ளது.

படகு இலங்கை கடற்படையினரால் திருகோணமலை துறைமுகத்தில் உள்ள அஷ்ரப் ஜெட்டிக்கு அன்றைய தினம் மாலையில் கொண்டு செல்லப்பட்டு, டிசம்பர் 20, 2024 அன்று திருகோணமலையில் தரைதட்டியது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆரம்பத்தில் பொது அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு, திருகோணமலை ஜமாலியா பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து அவர்கள் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். தஞ்சம் கோரி இலங்கை வந்ததாக அகதிகள் நீதிமன்றத்தில் விளக்கமளித்தனர்.

அவர்கள் மூன்று படகுகளில் புறப்பட்டனர், ஆனால் ஒரே ஒரு படகு மட்டுமே இலங்கையை அடைந்தது, இதில் 103 புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அவர்களை இங்கு அழைத்து வந்த 12 பேர் உட்பட 115 பேர் இருந்தனர்.

103 புகலிடக் கோரிக்கையாளர்களை மீரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பிய அதேவேளை, அழைத்து வந்த படகுக் காரர்கள் 12 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அவர்களை மீரிஹானவிற்கு மாற்றுவதற்கான ஆரம்ப முயற்சி தோல்வியடைந்தது, குடிவரவு அதிகாரிகள் அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அன்றிலிருந்து டிசம்பர் 23ஆம் திகதி காலை மீரிஹானவிற்கு மாற்றப்படவிருந்ததாகவும், ஆனால், முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமில் (கேப்பாபுலவு) தடுத்து வைக்குமாறு பணிக்கப்பட்டதாகவும் கேள்விப்பட்டோம்.

புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கையில் தரையிறங்க அனுமதிப்பதும் முல்லைத்தீவு மற்றும் திருகோணமலையில் உள்ள கடற்படை, அரச அதிகாரிகள் மற்றும் பிரஜைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியணியினரால் அவசர உதவிகள் வழங்கப்படுவதும் பாராட்டத்தக்கது.

எவ்வாறாயினும், அவர்கள் நீண்டநேரம், மணிக்கணக்கில் கடலில் வைக்கப்பட்டிருந்தமை மற்றும் அவர்கள் தங்கவைக்கப்பட வேண்டிய இடத்தை தீர்மானிப்பதில் அடிக்கடி ஏற்பட்ட மாற்றங்கள் அவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என்ற செய்திகள் இது போன்ற விடயங்கள் குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம்.

இந்த அகதிகளின் கதைகள் நெஞ்சை உலுக்குகின்றன. அவர்கள் மூன்று படகுகளில் மியான்மரில் இருந்து புறப்பட்டனர், ஒரு படகு மட்டுமே இலங்கையின் கரைக்கு வந்தது.

துரதிர்ஷ்டவசமான, பயணத்தின்போது நான்கு குழந்தைகள் உட்பட ஆறு பேர் பசியால் இறந்தனர், அவர்களின் உடல்கள் கடலில் வீசப்பட்டன.

அகதிகள், தாங்கள் மியான்மரின் ராக்கைன் மாநிலத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும், ஆனால் வன்முறை மற்றும் ரோஹிங்கியாக்களை இனச் சுத்திகரிப்புச் செய்வதன் காரணமாக மீண்டும் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் பகிர்ந்து கொண்டனர்.

இந்த அகதிகள் மியான்மரில் வன்முறை, துன்புறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களால் தப்பி ஓடிவிட்டனர். இப்போது, அவர்கள் இலங்கையில் பாதுகாப்பையும் கண்ணியமான வாழ்க்கையையும் நாடுகின்றனர்.

**நாமும் அகதிகளை அனுப்பும் நாடாக இருந்துள்ளோம்..!**

இலங்கை, 1951 அகதிகள் மாநாட்டில் ஒரு தரப்பாக இல்லாத அதேவேளை, வரலாற்று ரீதியாக இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களுக்கும் அகதிகளுக்குமான ஒரு முக்கிய இடமாக இருக்கவில்லை.

அவ்வாறு இருந்தபோதிலும், இலங்கை அரசாங்கத்திற்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்திற்கும் (UNHCR) இடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகள் தற்காலிகமாக தங்குவதை பொறுத்துக்கொள்ளும் கொள்கையையும் நடைமுறையையும் அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்துள்ளன.

இலங்கையில் தஞ்சம் தேடியுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஹசாரே மற்றும் மியான்மரில் இருந்து வந்த ரோஹிங்கியாக்களாக உள்ளனர்.

இந்த ஆண்டு (2024) வரை, புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகள் தங்கியிருந்த காலத்தில் அவர்களுக்கு உதவுவதுடன், அவர்கள் மற்ற நாடுகளுக்கு நிரந்தரமாக மீள்குடியேற்றம் செய்வதற்கு வசதியாக UNHCR அலுவலகம் இலங்கையில் இருந்தது.

விருந்தோம்பல் மற்றும் இரக்கத்தின் வளமான வரலாற்றைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில், மியான்மர் ரோஹிங்கியா புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு, சர்வதேச சட்டம் மற்றும் இலங்கை அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பையும் ஆதரவையும் வழங்குமாறு நாங்கள் வலுவாக வலியுறுத்துகிறோம்.

கூடுதலாக, பிராந்தியத்தில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியின் அடிப்படையில் இது தொடர்ச்சியான பிரச்சினையாக இருக்கும் என்பதால், UNHCRஐ இலங்கையில் அதன் அலுவலகத்தை முழு ஆணையுடன் மீண்டும் திறக்குமாறு கோருமாறு அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகள், அவர்களில் பலர் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள், வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் இடப்பெயர்ச்சி ஆகியவற்றிலிருந்து மியான்மரின் ராக்கைன் மாநிலத்தில் தங்கள் வீடுகள் மற்றும் சமூகங்களை அழித்தது மற்றும் கடல் வழியாக அவர்கள் மேற்கொண்ட ஆபத்தான பயணம் வரை கற்பனை செய்ய முடியாத துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

எனவே, இந்த அவசர மனிதாபிமான பிரச்சினையில் கீழ்வரும் விடயங்களில் அதிக சிரத்தை எடுத்து நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நாம் இலங்கை அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. சர்வதேச சட்டத்தின்படி இந்த அகதிகளின் பாதுகாப்பையும் அவர்களுக்கு வழங்க வேண்டிய ஆதரவையும் உறுதிப்படுத்துதல்.
2. அவர்களின் கௌரவம், பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளான வீடமைப்பு, உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் அவர்கள் தற்காலிகமாக தங்குவதற்கு வசதிகளை வழங்குதல்.
3. புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், நிரந்தர மீள்குடியேற்றம் உள்ளிட்ட நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறிவதற்கும் பிற நாடுகள், UNHCR மற்றும் பிற தொடர்புடைய சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.
4. அமைதியான ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கும் பாகுபாட்டைத் தடுப்பதற்கும் ரோஹிங்கியாக்கள் மற்றும் பிற புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளின் அவலநிலை குறித்து உள்ளூர் சமூகங்களுக்கு தெளிவூட்டவும் புரிந்துணரச் செய்யவும் வழிவகை மேற்கொள்ளல்.
5. இலங்கையில் புகலிடம் கோரி வரும் ரோஹிங்கியாக்கள் மற்றும் பிற துன்புறுத்தப்பட்ட சமூகங்களுக்கு நிரந்தர தீர்வைப் பெற சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து ஈடுபடுதல்.

இவற்றுடன் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுடன் இணைந்து ஒரு விரிவான அகதிகள் கொள்கையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் ரோஹிங்கியாக்களின் தஞ்சமடைவு நமக்கு நினைவூட்டுகிறது.” என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.







யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகரயோதி மண்டலத்தின் கருப்பண்ணசாமி பூஜை விழாக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது. விநாயக வழிபாட்டுக் கிரியைகள் ஆரம்பமாகி, கருவறையில் வீற்றிருக்கும் ஐயப்பனுக்கு விசேட, அபிஷேகம் நடைபெற்று பின்னர் 18 படி பூஜைகள், வசந்த மண்டபத்தில் அருள்பாலிக்கும் ஐயப்பனுக்கும் தீபாராதனைகள், 108 ஐயப்பன் தோத்திர மாந்திரங்கள் குரு சாமியார்கள், சிவாச்சாரியாரினால் ஓதப்பட்டு ஐயப்பனின், கருப்பண்ணசாமி வீதியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். படங்கள்: பு.கஜிந்தன்

# பச்சிளம் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் பிறந்து மூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று வியாழக்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. தெல்லிப்பழை பன்னாலைப் பகுதியைச் சேர்ந்த பங்கஜன் சிறீதி கன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தைக்குக் கடந்த 24ஆம் திகதி காய்ச்சல், இருமல், சளி ஏற்பட்டது.

அதற்குச் சிகிச்சை வழங்குவதாகப் பெற்றோர் குழந்தையை தெல்லிப்பழை வைத்தி சாலைக்கு கொண்டு சென்ற நிலையில் குழந்தைக்குச் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டது. அதேவேளை மேலதிக சிகிச் சைக்காகக் குழந்தை புதன் கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலைக்கு கொண்டு செல லப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண் டார். இருதய செயலிழப்பு காரண மாகக் குழந்தை உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# யாழ்.தனியார் பஸ் நிலைய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு



▮ பு.கஜிந்தன்

அதிக செலவில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தனியார் பஸ் நிலையம் ஆளில்லாத அநாதை யாகக் காணப்படுகின்றது எனக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத் தில் தனியார் போக்குவரத்துத் துறையினரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்க அவர் மேலும் தெரிவிக் கையில்,

தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் பல்வேறு பிரச்சினைகளை எமக்கு எடுத்துக் கூறியிருந்தனர். அதில் முக்கியமானது யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய விவகாரமா கும்.

இலங்கை போக்குவரத்து சபைக்கும் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் இடையே முரண்பாடாக மாறி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் அதிக செலவில் ஒரு பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அது இன்றைக்கு ஆளில்லாத அநாதையாக்கப்பட்ட இடமாக உள்ளது. ஆகையால் அதனை மாற்றியமைக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

அந்த தேவையை முதன்மைப் படுத்தியதாகவே யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் போக்குவரத்துத் துறையினரின் கோரிக்கை அமைந்துள்ளது. அது அவர்களின் கோரிக்கை மாத்திரம் அல்ல, அதனை அனைவருடைய கோரிக் கையாகவே நாங்கள் பார்க்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இது குறித்து பிராந்திய போக்குவரத்து ஆணையாளர்களோடு பேச்சுவார் த்தை நடத்தி, அவர்கள் ஏன் இவ்வளவு தாமதப்படுத்தினார்கள் என்ற கேள்வி கேட்க வேண்டிய தேவை உள்ளது. அதுபோல எங்க ளது ஆளுநருக்கும் இது குறித்துத் தெரியப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்றார்.

இந்த பிரச்சினையைக் கலந்து ரையாடல் மூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என நாங்கள் நினைக்கின்றோம். அதுவும் சாத்தியமாகாதபட்சத்தில் இது குறித்து நேரடியாகப் போக்கு வரத்து அமைச்சரோடு கலந்துரை யாடி இதற்கு நிரந்தரமான தீர்வினை பெற்றுக்கொடுப்போம் என்றார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையின் சிறப்பு சிகிச்சைப் பிரிவை இயங்கச் செய்ய நடவடிக்கை

▮ பு.கஜிந்தன்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் நெதர்லாந்து நாட்டின் கொடை மற்றும் மென் கடன் மூலம் ரூபா 5000 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மகளிருக்கான சிறப்புச் சிகிச்சை நிலையத்தினை பார்வையிட்டு அதனை முழுமையாக இயங்கச்செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஆராயப்பட்டது.



அத்துடன் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கத் தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் ஆளணி எண்ணிக்கையினை அதிகரிப்பது தொடர்பிலும் பேசப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இடம்பெற்றதன் பின்னராக யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா மற்றும் ஜெ. றஜீவன் ஆகியோர் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போதே குறித்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் வினோதன் மற்றும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை பணிப்பாளர்,பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்த கொண் டிருந்தனர்.



# ஏ-9 வீதியில் பாரிய குழிகள்

▮ பு.கஜிந்தன்

ஏ-9 வீதியில் எழுதுமட்டு வாளுக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய குழிகள், பள்ளங்கள் காணப்ப டுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாகனச் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர் கொள்வ தாகத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை குறித்த குழிகளி னால் விபத்துக்கள் ஏற்படும் அபா யம் இருப்பதாகவும் மக்கள் தெரி விக்கப்படுகிறது.

# யாழில் திருவாசகம் முற்றோதுதல்

யாழ்ப்பாணம் பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி ஆலயத்தில் சனிக்கிழமை (28) காலை 7.00 மணி முதலும், வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் ஞாயிற்றுக் கிழமை (29) காலை 6.00 மணி முதலும் திருவாசகம் முற்றோ துதல் நடைபெறும்.

# சமகால அரசியல் உரையரங்கு

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு பருத்தித்துறை வீதி ஆவரங்கால் கூட்டுறவு மண்டபத்தில் நடை பெறும்.

நிகழ்வில் தலைமையுரையை தமிழ்த் தேசிய பசுமை இயக் கத்தின் தலைவர் பொ.ஐகரநேசன் நிகழ்த்துவார்.

'தமிழ் மக்களும் புதிய அரசியல் அமைப்பும்' என்ற தலைப்பில் சட்டத்துறை யாழ். பல்கலைக்கழகம் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதனும் 'தமிழ் மக்களும் முறைமை மாற்றமும்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் நிகழ்த்துவார்.

# அரசடி வீதி புகையிரத கடவை மூடல்

யாழ்ப்பாணம் (ஜே/102, ஜே/104) அரசடி வீதி புகையிரத கடவையானது, சனிக்கிழமை (28) காலை 7.00 மணி தொடக்கம் ஞாயிற் றுக்கிழமை 29ஆம் திகதி மாலை 6.00 மணி வரை திருத்த வேலைகளுக்காக மூடப்படும்.

அக்காலப் பகுதியினுள் பொதுமக்களை மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறு. புகையிரததிணைக்களத்தால் அறிவுறுத்தப்பட் டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகம் அறிவித் துள்ளது.

# வவுனியாவும் வடக்கு மாகாணம் என உயர் அதிகாரிகள் உணர வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன்

▮ கி.வசந்தன்

வடக்கு மாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வவுனியாவும் வடக்கு மாகாணம் என்று உணர்ந்து கடமையாற்ற வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.



வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

சூடுவெந்தபுலவு பகுதியில் உள்ள பாடசாலையில் தகவல் தொடர்பாடல் பாடம் கற்பித்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டு 6 மாதம் கடந்தும் அவர் அங்குச் செல்லவில்லை. இதனால் அந்த மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மகாவித்தியால யத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்து நாகரிக பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. ஏன் அந்த வெற்றிடம் நிரப்பப்படவில்லை. வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித ஆசிரியர்கள் பற்றாக்குறை. யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 கணித ஆசிரியர்கள் மேலதிகமாக வுள்ளனர்.

வடமாகாணத்தில் இருக்கும் உயர் அதிகாரிகள் வடக்கு மாகாணம் என்றால் யாழ். மாவட்டம் மட்டும் தான் என்றா நினைக்கிறார்கள். வவுனியாவும் வடக்கு மாகாணம் தான். இனிமேல் இவ்வாறான கூட்டங்களுக்கும் மாகாணப் பணிப்பாளர்களையும் அழைக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு இது விளக்கும்.

பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை இருந்தால் விபரத்துடன் தாருங்கள். நாம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுடன் கதைக்கின்றோம். கிராமப்புற பாடசாலைகளில் சில மாணவர்கள் கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சை எழுத முடியாத நிலையில் உள்ளனர். அடிப்படை கல்வி கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# கபரகல தோட்ட மக்களுக்கு பெருந்தோட்ட அமைச்சால் உதவிகள்

## பிரதியமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சிவப்பிரகாசம் நேரில் ஆராய்வு



▮ கம்பளை நிருபர்

மலையக தொடர் குடியிருப்புக ளில் திடீர் தீ விபத்துகள் அதிகரித் துள்ளன. அந்த வகையில் கபரகல தோட்டத் தீ விபத்தும் அவ்வாறான ஒன்றாகவே காணப்படுகின்றது.

லயன்களில் தீ வேகமாகப் பரவுவதற்கும் இழப்புக்கள் ஏற்படுவதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளன. எவ்வாறெனினும் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து நாங்கள் கவலையடைகின்றோம். அவர்களுக்குத் தற்காலிக மற்றும் நீண்ட கால உதவிகள் செய்யப்படவுள்ளன.

அதேவேளை பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு பிரதிய மைச்சர் சுந்தரலிங்கம் பிரதீபின் வேண்டு கோளுக்கிணங்க இவற்றை ஆராய வந்ததாக பெருந் தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு பிரதியமைச்சரின் பிரத்தியேக செயலாளரும், ஆலோசகரும் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசிய குழு உறுப்பினருமான கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

கபரகல நாமகள் வித்தியா லயத்தில் தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து மேற்கண்ட வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

ஹங்குராங்கெத்த கபரகல தோட்ட கீழ்ப்பிரிவிற்குச் சென்று பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், நீண்டகால அடிப்படையில் தனி வீடுகள் அமைப்பதற்கான நிலம் வழங்கப்படவேண்டும். இது குறித்து தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்தி வருகின்றது. இவ்விடயம் சம்பந்தமாக எமது கொள்கை திட்டத்திலும் தெரிவித் துள்ளோம் என்றார்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# நவீன தொழில்நுட்பத்திற்கு மாற்றியமைக்கப்பட வேண்டும்

(ஏ.எச்.ஹஸ்பர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது கல்விச் செயற்பாடுகளை நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்த திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், இதற்காக தமது தொழில்நுட்ப ஆற்றலை அதிகரிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் நாலா புறங்களையும் சேர்ந்த மாணவர்கள் வெளிவாரிப்பட்டப் படிப்புக்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தம்மை பதிவு செய்துள்ளனர். இவர்களில் தொழில் புரிவோரும் உள்ளனர். தொழில் இல்லாதோரும் உள்ளனர்.இந்த வெளிவாரி மாணவர்கள் கற்றலுக்காக வார இறுதிநாட்களில் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்படுகின்றார் கள். தொழில்



புரிவோர் வாரத்தில் 5 நாட்களும் தமது தொழில் நிலையங்களுக்குச் செல்லும் அதேவேளை வார இறுதிநாட்களில் பல்கலைக் கழகத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. தொழில் இல்லாதோர் பெரும் பணச்செலவு செய்து பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. ஒரு நாள் பல்கலைக்கழக சூழலில் தங்க வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது.

இதனால் பல சிரமங்களை இந்த மாணவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். இந்தச் சிரமங்களால் சிலர் தமது வெளிவாரிப் பட்டப்படிப்பை கைவிட்டும் நிலையில் உள்ளனர். இந்த விடயத்தை பல மாணவர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இரண்டு முன்மொழிவுகளை முன்வைத்து பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஏற்கனவே கடிதம் அனுப்பினேன். ஒன்று பிராந்தியக் கற்கை நிலையங்களை ஏற்பாடு செய்வது, ஒன்லைன் வகுப்புகளை நடத்துவது மற்றொன்று.

எனினும், இந்த விடயங்களையும் பல்கலைக்கழக நிர்வாகம் கவனத்தில் கொண்டதாக தெரியவில்லை. பல பல்கலைக்கழகங்கள் தமது தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஒன்லைன் வகுப்புகளை நடத்தும் போது தென்கிழக்குப் பலக்லைக்கழகம் மட்டும் மாணவர்களை நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு அழைப்பதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி நிதியம் வருமானம் குறைந்த மக்களுக்கானதே

(வெல்லாவெளி நிருபர்)

ஜனாதிபதி நிதியம், உண்மையில் வருமானம் குறைந்த மக்களுக்காக நிறுவப்பட்டதென தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஞானமுத்து ஸ்ரீநேசன், சிலர் மில்லியனர்கள் அல்ல பில்லியனர்களாக மாறி இருக்கின்றார்கள் எனத்தெரிவித்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட குருமண்வெளி சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 37வது ஆண்டு நிறைவு விழாவும் சாதனையாளர் பாராட்டு விழாவும், குருமண்வெளியில் அமைந்துள்ள அச்சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையில் வருமானம் குறைந்த மக்களுக்காக, ஜனாதிபதி நிதியத்தில் இருந்த நிதி வழங்கப்பட வேண்டும். ஆனால் சுகாதார அமைச்சராக இருந்தவர்கள், அரசியலில் பிரமுகர்களாக இருந்தவர்கள்



செல்வந்தர்களாக இருந்தவர்கள், தமது சிகிச்சைகளுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை பெற்றிருக் கின்றார்கள். இந்த ஊழல் மோசடிகள்தான் நாட்டில் வங்குரோத்து நிலை ஏற்படுவதற்கு காரணமாக இருந்திருக்கின்றன.

கடந்த காலத்தில் நமது பகுதியில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் இராஜாங்க அமைச்சர்களான பின்னர் அபிவிருத்திகள் ஆங்காங்கே நடைபெற்றன. ஆனால் அந்த அபிவிருத்திகள் மூலமாக வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டதோ தெரியவில்லை, ஆனால் அவர்கள் மில்லியனர்கள் அல்ல பில்லியனர்களாக மாறி இருக்கின்றார்கள். பில்லியன் என்பது 100 கோடி ரூபாய்கள் இது சாதாரண விடயம் அல்ல. சாமானியர்களாக இருந்தவர்கள், விலாசம் இல்லாமல் இருந்தவர்கள் இப்போது கொடி கட்டி பறக்கின்ற கோடீஸ்வரர்களாக மாறியிருக்கின்றார்கள் என்றார்.

# கிழக்கு ஆளுநருக்கும் முதன்மைச் செயலாளருக்குமிடையே சந்திப்பு



(ஏ.எச். ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கல்விக்கான முதன்மைச் செயலாளர் சந்தீப் சௌத்ரிக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட 2371 மில்லியன் ரூபா நிதியுதவியின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள் ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநர் கலந்துரை யாடியதுடன், அதற்கு உரிய உதவியை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு இந்திய அரசாங்கம் ஏற்கனவே வழங்கி வரும் உயர்கல்வி புலமைப்பரிசில்கள் குறித்து இங்கு தெரிவித்த இந்திய செயலாளர், எதிர்காலத்தில் இலங்கையின் கிழக்கு மாகாண கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்கு இந்திய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

# ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலய ஆபரணப்பெட்டி எடுத்துவரும் நிகழ்வு





(ருத்ரா)

மட்டக்களப்பு சித்தாண்டி மாவடிவேம்பு குடிகொண்டுள்ள ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயத்தின் வருடாந்த நிகழ்வான ஆபரணப்பெட்டி எடுத்துவரும் நிகழ்வு குருசாமி சிவஸ்ரீ விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவடிவேம்பில் முதன் முதலில் அமைக்கப்பட்ட இவ் ஆலயம் புகழ்பெற்று விளங்குகிறது.செங்கலடி உதயகுமார் சர்மி இல்லத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று ஐயப்பன் மாலை அணிந்த சாமிமார்கள் ஆபரணப்பெட்டியை சுமந்த வண்ணம் மட்டக்களப்பு பிரதான வீதி வழியாக மாவடிவெம்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு வந்து அம்மனை தரிசித்து அங்கிருந்து ஆலயத்தை வந்தடைந்தனர்.

இதன்போது வந்தாறுமூலை மகாவிஷ்ணு பஜனை குழுவினரின் ஐயப்பன் பஜனை பாமாலை இசையுடன் இவ் ஆபரணப்பெட்டி வீதி வழியாக எடுத்துவரப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டோர்களில் சிலர் இந்தியாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்ய முடியாத நிலை காணப்படுவதால் அவர்களின் நலன் வேண்டி நெய் அபிஷேகப் பூஜையுடன் நிகழ்வு இடம்பெற்றது.ஏனையோர்கள் எதிர்வரும் சில தினங்களில் இந்தியா சென்று அங்கு தரிசனம் செய்து ஜோதி பூஜை கண்டவுடன் மீண்டும் இலங்கை வந்தடைவர்.

# கிணற்று நீரை சுத்திகரிக்கும் வேலைத்திட்டம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை பகுதியிலுள்ள கிணற்று நீர் சுத்திகரிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் வெள்ளநீர் கிணற்றில் புகுந்து கிணறுகள் அசுத்தமடைந்து காணப்பட்டன.இதனால் கிணற்று நீரை மக்கள் பாவிப்பதில் பல்வேறு அசௌகரியங்களை மேற்கொண்டு வந்தனர்.

இதனைக் கருத்திற் கொண்ட காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் கல்குடா ரைஸ்அப் அமைப்பின் நிதியுதவியுடன் கிணற்று நீரை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது, இதுவரை 83 கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# கிண்ணியாவில் பாத்திமா நாயகி பிறந்ததின நிகழ்வு



(ஏ.எச் ஹஸ்பர்)

கிராமிய அபிவிருத்திக்கான அமைப்பு ஏற்பாட்டில் செவ்வாய்கிழமை பாத்திமா நாயகி பிறந்த தின சிறப்பு நிகழ்வு , கிண்ணியா விஷன் மண்டபத்தில் நடைபெற்றது .இதன் போது ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஆத்மீக தலைவரின் செயற்பாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதி குஜ்ஜத்துல் இஸ்லாம் ஹாத்தம் பூரி வருகை தந்து சிறப்பித்தார். இதன் போது கிண்ணியா பெண்கள் சுயதொழில் கல்வி மற்றும் கலாசார பண்பாடு அபிவிருத்தி மேம்பாடுகள் பற்றி பேசப்பட்டன. இதில் குறித்த அமைப்பின் தலைவர் ஏ.ஆர்.எம்.ராபில் உட்பட சிவில் சமூக நிறுவனங்களின் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு





(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை சம்புநகர் அல் – மினா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பில் பாடசாலை சமூகத்திற்கான விழிப்புணர்வு செயலமர்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற

இச்செயலமர்வில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொது சுகாதாரப்

பரிசோதகர் எம்.எம். ஜெசீர் பிரதம வளவாளராக கலந்து கொண்டு டெங்கு நுளம்பு எவ்வாறு உருவாகின்றது. இதன் தாக்கம் என்ன இதை எவ்வாறு தடுக்கலாம். நமது பிள்ளைகளும் நமது குடும்பமும் நமது சமூகமும் இந்த நோய்த் தாக்கத்திலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறலாம் போன்ற பல்வேறு விளக்கங்கள் இதன் போது முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இச் செயலமர்வில் பாடசாலையின் மௌலவி என்.ரி. நசீர், பாடசாலையின் எஸ்டீசி செயலாளர் ஏ.எல்.எம். அர்சாத்,பாடசாலையின் பிரதி அதிபர் எம் ஐ. ஹாசீம்,வலயத்தலைவர் எம். எச் அப்துல் ஹைஹ, சம்புநகர் ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் எஸ்டீசி உறுப்பினர்களான எஸ்.எல்.வசீம், நியாஸ், ஆசிரியர்கள்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண சபைக்கு

# புதிய ஆணையாளர்கள், பணிப்பாளர்கள் நியமனம்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள திணைக்களங்களுக்கு இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பலர் புதிய பணிப்பாளர்களாகவும் , ஆணையாளர்களாகவும் கிழக்கு மாகாண ஆளுனரால் ஜனவரி 2025 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களது விபரம் வருமாறு,

ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவும் ஏ.ரி.எம். றாபி, கல்முனை மாநகர ஆணையாளராகவும் என்.எம்.நௌபீஸ், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராகவும் என்.தனஞ்செயன், மட்டு.மாநகர ஆணையாளராகவும்வி. தேவநேசன் மட்டக்களப்பு உதவி உள்ளூராட்சி ஆணையளராகவும் வீ.ரவீந்திரன், மாகாண காணி ஆணையாளராகவும் எஸ்.வருணி,மாகாண போக்குவரத்து ஆணையாளராகவும் எல். வில்வரட்ணம், பதில் மாகாண நிருவாக பிரதி பிரதம செயலராகவும் என்.மணிவண்ணன், மாகாண தொழில்துறை பணிப்பாளராகவும் என்.சிவலிங்கம், சிரேஸ்ட உதவி செயலாளர், முதலமைச்சு ஐ.எம்.றிகாஸ்,மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர்– நிருவாகம் கே.இளங்குமரன்,கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் திருமதி.எம்.எம்.எப். றிப்கா,முகாமைத்துவ அபிவிருத்தி நிலைய பணிப்பாளராகவும் எஸ்.பிரகாஸ்,விளையாட்டு பணிப்பாளராகவும் யூ.சிவராசா,சமூகசேவை பணிப்பாளருமாவார்.

# முதியோர்களுக்கு காதுகேள் கருவிகள் வழங்கி வைப்பு

(கியாஸ் ஷாபி)

திருகோணமலை மாவட்ட முதியோர்களுக்கு, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ், ரூபா 1 இலட்சத்து 60 ஆயிரம் பெறுமதியான காதுகேள் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன. திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இதற்கான நிகழ்வு, மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த கெட்டி ஆராய்ச்சி தலைமையில் நடைபெற்றது. குச்சவெளி மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள, தேவையான முதியோர்களுக்கு இந்த கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ் . சுதாகரன், மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத் தர் ஏ.எல்.எம். இர்பான் மற்றும் யாழ்ப்பாண போதனா வைத்திசாலையில் ஒலியியல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பு





(எ. ஹமீட்)

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் உயர்பீட உறுப்பினரும் மாவட்ட செயலாளரருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கடந்த பொதுத்தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தனர். இதுதொடர்பான நிகழ்வு கட்சியின் உயர்பீட உறுப்பினரும் நற்பிட்டி முனை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான தௌபீக் தலைமையில் நற்பிட்டிமுனையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நற்பிட்டிமுனை பிரதேச கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பும், இந்நாள் ஜனாதிபதியின் சேமிப்பும் !



நூருல் ஹுதா உமர்

"பல வருடங்களாக பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் நீக்கப்பட்டுள்ளனர். உண்மையில் இந்த 116 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்ட பின்னணியில் பாரிய சூழ்ச்சி உள்ளது என நாம் நம்புகிறோம். விடுதலைப் புலிகள் இருந்த காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதியின் உணவை சோதனையிட்டவர்கள் கூட அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்கான சூழலை எவருக்கேனும் ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிக்கிறார்களா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது" என பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் சங்கத்தின் கொழும்பு மாவட்ட உப தலைவர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை ஆட்கொண்டிருந்த பட்ட பிரச்சினை ஓய்வுக்கு வந்த பின்னர் இதுதான் இன்றைய நாட்களில் இலங்கையர்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. அநுரகுமார திஸா நாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை கையேற்றவுடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதில் பல நேரங்களில் மக்களிடமிருந்து பாராட்டை பெற்றாலும் சில விடயங்கள் சர்ச்சையான விடயங்களாக அது மாறியும் வருகிறன. அதில் அமைச்சரவை நியமனம், அமைச்சின் செயலாளர் நியமனம், பிரதியமைச்சு நியமனம், கிளீன் ஸ்ரீலங்காவில் சிறுபான்மையினர் சுத்தமாக விடுபட்டிருப்பது என நீளும் சர்ச்சை பட்டியலில் இப்போது முன்னாள் ஜனாதிபதிகள் பாதுகாப்பு குறைப்பு பிரச்சினையும் ஒட்டிக்கொண்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் அரச வரப்பிரசாதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், இதன் முதற்கட்டமாக அவர்களது பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு வெளியானவுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அணியினர் கடுமையாக ஆட்சேபனை தெரிவித்து வருகிறார்கள். நாட்டில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக புரையோடி இருந்த உள்நாட்டு யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த ஜனாதிபதி மஹிந்தவின் உயிருக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உரிய பாதுகாப்பை வழங்கவில்லை. அவரின் பாதுகாப்பு நிமித்தம் கடமையில் இருந்த 116 உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என அவர்கள் வெளிப்படையாக குற்றம்சாட்டி வருகிறார்கள்.

மட்டுமின்றி மஹிந்த ராஜபக்சவை இலக்கு வைத்து ட்ரோன் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளதுடன் அவருக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பாலும் அச்சுறுத்தல் உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றஞ்சாட்டியுள்ளது.

மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தால் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளதையடுத்தே, மஹிந்தவுக்கு இன்னமும் பல்வேறுபட்ட உயிரச்சுறுத்தல் உள்ளது என்றும், அவருடைய பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தவறான நடவடிக்கை என்றும் பெரமுன கூறியுள்ளது. புலிகள் அமைப்புக்கு முடிவுகட்டிய மஹிந்த ராஜபக்சவுக்குரிய இராணுவப் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டமையானது அவரின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது மஹிந்த ராஜபக்சவுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் அறிக்கை ஒன்றை கோரியிருந்தது. 5ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரியால் மேற்படி குழுவுக்கு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது. 13 புலனாய்வு அறிக்கைகளை மேற்கோள்காட்டி மஹிந்த ராஜபக்சவுக்குள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றியும், அவருக்கு ஏன் பாதுகாப்பு குறைக்கப்படக்கூடாது என்பது பற்றியும் பாதுகாப்புப் பிரிவு பணிப்பாளரால், முக்கியஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பில் மறுபரிசீலனை செய்த குழுவுக்குத் தெளிவூட்டப்பட்டிருந்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, புலிகள் அமைப்பு மற்றும் பாதாளக் குழுக்கள் உள்ளிட்ட தரப்புகளால் மஹிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் நீங்கவில்லை என்ற தெளிவான விளக்கம் வழங்கப்பட்டும், மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. எனவே, மஹிந்த ராஜபக்சவுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும். போருக்கு முடிவுகட்டி, படையினரின் சடலங்கள் கிராமங்களுக்கு வருவதை தடுத்த தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. அவருக்கு ஆயிரம் பேரை பாதுகாப்புக்கு வழங்கினால்கூட அதில் தவறு இருக்காது என்கிறது மொட்டு அணி.

அவற்றையும் தாண்டி இந்த ஜனாதிபதி 2007ஆம் ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் முக்கிய உரையாற்றினார். அன்று ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் போராடினார். ஆனால் இன்று ஜனாதிபதியாகியதன் பின்னர் அதனை அவர் மறந்து விட்டார். எனவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்த தீர்மானத்தை உடனடியாக மீளப்பெற வேண்டும். இது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஆகும் என "மொட்டு இதழ்கள்" ஊடகங்கள் வாயிலாகவும், நாடாளுமன்றத்திலும் உரத்து பேசி வருகிறார்கள்.

மஹிந்தவின் பாதுகாப்புக்கு



குரலெழுப்பும் உச்சகட்ட போராட்டமாக முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு சமளவிலான பாதுகாப்பை வழங்கும் தீர்மானம் எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டதென நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க நாடாளுமன்ற அமர்வில் வினவினார். இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் ஆனந்த விஜேபால, அச்சுறுத்தல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பின்னரேயே பாதுகாப்பு குறைப்பு தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். முப்படை பாதுகாப்பு முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. கைதிக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அளவு கூட நாட்டை காப்பாற்றிய தலைவருக்கு வழங்கப்படவில்லையென குற்றம் சுமத்தி 60 சாதாரண பொலிஸ் அதிகாரிகளால் மஹிந்தவுக்கு பாதுகாப்பு வழங்க முடியுமா என சாணக்க எம்.பி கேள்வி எழுப்பினார்.

> **முன்னாள் ஜனாதிபதிகளில் எந்த ஒருவரினதும் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொலிஸாரே தீர்மானம் எடுக்கின்றனர்.**

முன்னாள் ஜனாதிபதிகளில் எந்த ஒருவரினதும் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொலிஸாரே தீர்மானம் எடுக்கின்றார்கள். அந்த தீர்மானங்களில் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்று நாங்கள் தலையீடுகளைச் செய்வதில்லை. அந்த வகையில் பொலிஸார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸாரில் பொலிஸை குறைத்து 60 பேரை வழங்கியுள்ளனர். ஆனால் அந்த விடயத்தினை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மறைத்துவிடுகின்றார்கள். மக்களை திசைதிருப்பும் சூழ்ச்சியுடன் தான் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அதேநேரம், அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் பொதுக்கொள்கையொன்றையே கொண்டிருக்கிறது. நாட்டின் தேசிய பாதுகாப்பையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றபோது தனி நபர்களுக்கான பாதுகாப்புக்காக கோடிக்கணக்கில் செலவிடமுடியாது. அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கூட இன்னமும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்ளாத நிலையில் உள்ளனர். ஆகவே, எம்மைப் பொறுத்தவரையில் எமது அரசாங்கத்தில் அரசியல்வாதிகள் பாதுகாப்பு விடயத்தில் தலையீடுகளைச் செய்வதில்லை. அதனை பொலிஸாரே இறுதி செய்கின்றார்கள். ஆகவே, அரசாங்கத்தின் மீது அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்க தரப்பு நழுவி செல்கிறது.

நாடு வங்காரோத்தடைந்து பங்களாதேஷிடம் கடன் கேட்டு கை நீட்டும் அளவுக்கு சென்று, அத்தியாவசிய தேவைகளுக்கே வரிசை யுகத்தை கண்ட நமது நாட்டில் முன்னாள் ஜனாதிபதியை பாதுகாக்க பல மில்லியன்கள் செலவழிக்கப்படுவது ஏற்புடையதா? என்ற கேள்விக்கு முன்னாள் ஜனாதிபதிகளே இல்லை என்பர். அவர்களுக்கு உரிய கௌரவமும், பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும் என்பதில் இலங்கையர்கள் யாரிடமும் மாற்றுக்கருத்துக்கள் இருக்காது. ஆனாலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கான இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 1448 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த நிதி விரையமானது எவ்வகையில் நாம் நிலைப்படுத்துவது என்ற வாதம் எழுவதை தவிர்க்க முடியாது. நீதியரசர் (ஓய்வுநிலை) சித்திரசிறி குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த 17 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். அவரது அறிவிப்பில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கான இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 1448 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இந்த நிதி யாருடைய உழைப்பு ?

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி செலவழிக்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இந்த மாதம் (டிசம்பர்) 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு இராணுவம் 328 மில்லியன் ரூபாய், பொலிஸ் 327 மில்லியன் ரூபா, ஜனாதிபதி செயலகம் 55 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 710 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் பாதுகாப்புக்கு இராணுவம் 6 மில்லியன் ரூபா, பொலிஸ் 185 மில்லியன் ரூபா, ஜனாதிபதி செயலகம் 16 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 207 மில்லியன் ரூபாவும், கோட்டபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக இராணுவம் 258 மில்லியன் ரூபா, பொலிஸ் 39 மில்லியன் ரூபா, ஜனாதிபதி செயலகம் 10 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 307 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓய்வுப் பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவரது பாதுகாப்புக்கு இராணுவம் 60 மில்லியன் ரூபாவையும், பொலிஸ் 19 மில்லியன் ரூபாவையும், ஜனாதிபதி செயலகம் 3 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளது. ஆகவே மொத்தமாக 82 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் பாதுகாப்புக்கு இராணுவம் செலவு செய்யவில்லை. பொலிஸ் திணைக்களம் 99 மில்லியன் ரூபா, ஜனாதிபதி செயலகம் 12 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 111 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான எதிர்க்கட்சி தலைவர் சஜித்தின் தாயார் ஹேமா பிரேமதாசவின் பாதுகாப்புக்காக பொலிஸ் 30 மில்லியன் ரூபாவையும், ஜனாதிபதி செயலகம் 3 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 33 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆண்டு 11 மாதமும் 15 நாட்களுக்கு மாத்திரம் 1448 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார். மட்டுமின்றி இந்த வீணான நிதிகளை கட்டுப்படுத்திய முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பினை மறுசீரமைத்தால் வருடாந்தம்



1200 மில்லியன் ரூபாவை சேமிக்க முடியும் என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கிறது.

ஆனாலும் யுத்த வெற்றி நாயகனாக நோக்கப்படும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பாதுகாப்பு பலமாக இருக்க வேண்டும் என்ற அவரது ஆதரவாளர்களின் கருத்தும் இங்கு தட்டிக்கழிக்க முடியாத ஒன்றாகும். இது விடயமாக பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர். அரசியல் பழிவாங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது என்று குறிப்பிடுவது அடிப்படையற்றது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் இருந்த இராணுவத்தினர் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்து, ஆறு மாதத்துக்கொரு முறை பாதுகாப்பு விடயங்கள் மீள் பரிசீலனை செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ள கருத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

நாடு அமைதியாக, எவ்வித பயங்கரவாத அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பு பலமானதாக உள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசியல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் முறையான காரணிகளை குறிப்பிட வேண்டும். ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அரசாங்கத்தின் பக்கமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் இதர சலுகைகள் குறித்து எதிர்வரும் காலங்களில் உறுதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டியுள்ளது. அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகளை உண்மைப்படுத்தி முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதுடன் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு போதுமான அளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் சலுகைகள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகளை மறுபரிசீலனை செய்வதற்கு நீதியரசர் (ஓய்வுநிலை) கே.டி .சித்திரசிறி தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டது. இந்த குழு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அண்மையில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது. இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு கடந்த 23ம் திகதி (திங்கட்கிழமை) முதல் குறைக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும் 01 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 3 வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 22 பொல ஸாரும் 01 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 03 வாகனங்களும் வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 60 பொலிஸ ாரும், 01 பொலிஸ் வாகனமும்,3 ஜனாதிபதி செயலக வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸ ாரும், 01 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 03 வாகனங்களும் வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும், 01 பொலிஸ் வாகனமும், 03 ஜனாதிபதி செயலக வாகனங்களும் வழங்கப்படும். அதேபோல் ஹேமா பிரேமதாசவின் பாதுகாப்புக்கு 10 பொலிஸாரும், 01 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 03 வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது போதுமா? இதன் பின்னணியில் அரசியல் ஆதாயங்கள் அல்லது பழிவாங்கல் இருக்கிறது? என விமர்சனங்கள் இருந்தாலும் இவை நாட்டு நலனுக்காக அந்த முன்னாள் ஜனாதிபதிகள் பொருந்திக்கொள்ள வேண்டியதே. நாடு தள்ளாடும் போது நாம் உல்லாசம் அனுபவிக்க கூடாது என்பதை அறிந்தவர்களே இலங்கையின் ஜனாதிபதிகள்.

# வங்கி மோசடி
## 8 மடங்கு அதிகரிப்பு

மும்பையில் நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் வங்கி மோசடி தொடர்பாக, 18,461 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மோசடி தொகை எட்டு மடங்கு அதிகரித்து 21,367 கோடி இந்திய ரூபாயாக உயர்ந்துள்ளது என, ரிசவ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2023 - 2024 நிதியாண்டில், இந்தியாவின் வங்கித் துறையின் போக்கு மற்றும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ரிசவ் வங்கி வெளியிட்டது. கடந்த நிதியாண்டு மற்றும் நடப்பு நிதியாண்டில் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்திறன் விபரங்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டின், ஏப்ரல் – செப்டெம்பர் மாதங்களில், 2,623 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான 14,480 வங்கி மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

நடப்பு நிதியாண்டில், இந்த காலக்கட்டத்தில் 18,461 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 21,367 கோடி இந்திய ரூபாய் மோசடி நடந்துள்ளது. கடந்த நிதியாண்டை ஒப்பிடும்போது, மோசடி தொகையின் மதிப்பு எட்டு மடங்கு அதிகமாகும் என வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களுக்கெதிரான வன்முறையை தடுக்க கவன ஈர்ப்பு போராட்டத்தில் அண்ணாமலை



முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மறைவு காரணமாக தமிழகம் முழுவதும் நடைபெறவிருந்த பா.ஜ.க.வினரின் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் மாநில தலைவர் அண்ணாமலை மட்டும் திட்டமிட்டபடி தனது கவன ஈர்ப்பு போராட்டத்தை நடத்தினார்.

கோவை சிட்ரா–காளப்பட்டி வீதியில் உள்ள தனது வீட்டின் முன்பு அண்ணாமலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். வீட்டில் இருந்து உடலில் மேல்சட்டை அணியாமல் வெளியே வந்த அவர் தேங்காய் நாரால் பின்னப்பட்ட சாட்டையை கையில் வைத்திருந்தார். வீட்டு வாசலில் அந்த சாட்டையால் சட்டை அணியாத உடலில் தனக்கு தானே அடித்துக் கொண்டார். இவ்வாறு 6 முறை தன்னை சாட்டையால் அடித்து தனது எதிர்ப்பை பதிவு செய்தார். மேலும் அண்ணாமலை தான் கூறியபடி காலணி அணியாமல் இருந்தார். அண்ணாமலை சாட்டையால் அடித்தபோது நிர்வாகிகள் அவரை தடுக்க முயன்றனர். ஆனால் அதனை கண்டுகொள்ளாமல் தொடர்ந்து சாட்டையால் அடித்துக்கொண்டார்.

இதையடுத்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், தி.மு.க.வின் மீதான வெறுப்புக்கோ, தனிமனிதன் மீதான வெறுப்புக்கோ சாட்டையால் அடித்துக்கொள்ளவில்லை, கிடைக்கும் அனைத்து மேடையிலும் தி.மு.க.வை தோலுரிப்பதற்கான காரணத்தை வெளிப்படுத்தவே 6 சாட்டை அடிகள், தி.மு.க. ஆட்சியில் பல்வேறு தவறான சம்பவங்கள் நடைபெறுகிறது, பெண்கள் மீதான வன்முறை நாளுக்கு நாள் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது, தமிழகத்தில் கல்வியின் தரம் குறைந்து வருகிறது. பொருளாதாரம் பின்னடைவை சந்தித்துள்ளது, கண் முன்னால் அடுத்த தலைமுறை அழிந்து கொண்டிருப்பதை பார்க்க முடியவில்லை என தெரிவித்தார்.






# அரிசியில் 3 அங்குல திருவள்ளுவர் சிலை



தனியார் பாடசாலை ஆசிரியர் தனது ஓவிய திறமை மூலமாகவும் அரிசிகளை கொண்டு சுமார் 3 அங்குலம் உயரத்தில் திருவள்ளுவர் சிலையை உருவாக்கியுள்ளார்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை தந்த திருவள்ளுவருக்கு தமிழகத்தின் கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரி கடலில் 133 அடி உயரத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை வடிவமைத்து 25 ஆண்டுகள் ஆகின்றன. இதனை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா கொண்டாடப்பட உள்ளது. இந்த நிலையில் நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி பகுதியை சேர்ந்த தனியார் பாடசாலையில் பணியாற்றி வரும் ஓவிய ஆசிரியர் சரவணன் என்பவர் திருவள்ளுவருக்கு அரிசியில் சிலை செய்து அசத்தியுள்ளார். அதாவது, திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு அவரை பெருமைப்படுத்தும் விதமாகவும், தனது ஓவிய திறமை மூலமாகவும் அரிசிகளை கொண்டு சுமார் 3 அங்குலம் உயரத்தில் திருவள்ளுவர் சிலையை உருவாக்கியுள்ளார்.

# தலைசிறந்த தலைவர்களில் ஒருவரை இந்தியா இழந்துள்ளது
## பிரதமர் மோடி இரங்கல்



முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் (92), உடல்நலக் குறைவு மற்றும் வயது மூப்பு பாதிப்பால் டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலையில் வியாழக்கிழமை இரவு காலமானார். அவருடைய மறைவிற்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

மன்மோகன் சிங் 2004 முதல் 2014 வரை இந்தியாவின் 13 ஆவது பிரதமராக பதவி வகித்தவர். அவருடைய மறைவிற்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் இந்தியா தனது தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான மன்மோகன் சிங்கின் இழப்பிற்காக துக்கம் அனுசரிக்கிறது. அவர் எளிமையான இடத்தில் இருந்து மதிப்பிற்குரிய பொருளாதார நிபுணராக உயர்ந்தார். நிதி அமைச்சர் உட்பட பல்வேறு அரசாங்க பதவிகளிலும் பணியாற்றிய அவர், பல ஆண்டுகளாக நமது பொருளாதாரக் கொள்கையில் வலுவான முத்திரையை பதித்தார். நாடாளுமன்றத்தில் அவர் செய்த தலையீடுகளும் புத்திசாலித்தனமாக இருந்தன. நமது பிரதமராக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த விரிவான முயற்சிகளை மேற்கொண்டார். மன்மோகன் சிங் பிரதமராகவும், நான் குஜராத்தின் முதல்வராகவும் இருந்தபோது நானும் அவரும் அடிக்கடி உரையாடினோம். ஆளுகை தொடர்பான பல்வேறு விடயங்களில் நாங்கள் விரிவான விவாதங்களை நடத்துவோம். அவருடைய ஞானமும் பணிவும் எப்பொழுதும் தெரியும். துக்கமான இந்த நேரத்தில், எனது எண்ணங்கள் மன்மோகன் சிங்கின் குடும்பத்தினர், அவரது நண்பர்கள் மற்றும் எண்ணற்ற அபிமானிகளுடன் உள்ளன என இரங்கல் செய்தியினைப் பதிவிட்டுள்ளார்.

# கடற்கொள்ளை சம்பவங்களை தடுத்த இந்திய கடற்படை



இந்திய கடற்படை நடவடிக்கைகளால் மேற்கு அரபி கடலில் ரூ.34,117 கோடி இந்திய மதிப்பிலான 90 இலட்சம் மெட்ரிக் தொன் சரக்குகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேற்கு அரபிக்கடலில் செல்ல கூடிய வணிக மற்றும் பயணிகள் கப்பல்கள் மீது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மற்றும் கடற்கொள்ளையர்கள் அவ்வப்போது தாக்குதல்களை நடத்துவது வழக்கம். சரக்குகளை கொள்ளையடிப்பதும், பயணிகளை சிறை பிடித்து செல்வதும் நடந்து வந்த சூழலில், அதனை எதிர்கொள்ளும் பணியில் இந்திய கடற்படை ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், கடந்த ஓராண்டில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் மற்றும் கடற்கொள்ளை என 25 இற்கும் மேற்பட்ட சம்பவங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மேற்கு அரபிக்கடலில் 30 இற்கும் மேற்பட்ட கப்பல்களை இந்திய கடற்படை குவித்துள்ளது.

நம்பத்தக்க மற்றும் விரைவான நடவடிக்கைகளால், அவர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்களாக இருந்தபோதும், 400 இற்கும் மேற்பட்டோரின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. 230 இற்கும் மேற்பட்ட வணிக கப்பல்கள் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதனால் 90 இலட்சம் மெட்ரிக் தொன் சரக்குகள் பாதுகாக் கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு 34,117 கோடி இந்திய ரூபாய் (400 கோடி அமெரிக்க டொலர்கள்) ஆகும் என தெரிவித்துள்ளது.

# உலகின் மிகநீளமாக அணையை இந்திய எல்லையில் கட்ட சீனா ஒப்புதல்

இந்தியாவின் எல்லையில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே உலகின் மிகப்பெரிய அணையைக் கட்ட சீனா ஒப்புதல் அளித்துள்ளது.


2015ஆம் ஆண்டில் திபெத்தில் உள்ள மிகப்பெரிய ஜாம் நீர்மின் நிலையத்தை சீனா ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் பிரம்மபுத்திராவின் குறுக்கே இந்தியாவும் அணை கட்டுகிறது. இந்தியாவின் எல்லையில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே உலகின் மிகப்பெரிய அணையைக் கட்ட சீனா ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.11 இலட்சம் கோடி இந்திய ரூபாய் மதிப்பில் திபெத்தில் கட்டப்படும் இந்த அணையால் பிரம்மபுத்திரா நதி பாய்ந்தோடும் இந்தியா மற்றும் வங்கதேசத்துக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

ஆசியாவின் பெரிய வற்றாத ஜீவநதிகளில் ஒன்று பிரம்மபுத்திரா. இந்த நதி திபெத்திலுள்ள கைலாய மலையில் 'ஸாங்–போ' என்ற பெயரில் புறப்பட்டு திபெத்திலுள்ள உலகின் ஆழமான பள்ளத்தாக்கான 'யர்லுங் இட்சாங்போ' வழியாக அருணாசலபிரதேசத்தில் நுழைந்து, அசாம் மாநிலத்தில் ஓடுகிறது. பின்னர் தெற்கு நோக்கி பாய்ந்து வங்கதேசம் வழியாக வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றது. மொத்தம் 2800 கி.மீ நீளமுள்ள இந்த நதியின் சராசரியான நீர் வெளியேற்றம் விநாடிக்கு 19,800 கன மீட்டர். திபெத் பகுதியில் பெரும்பாலும் பாயும் இந்த பிரம்மபுத்திரா ஆற்றின் கீழ் பகுதியில் நீர்மின்சாரத் திட்டத்திற்காக உலகிலேயே மிகப்பெரிய அணை கட்ட சீன அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று சீன அரசு நடத்தும் சின்ஹவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இமயமலைப் பகுதியில் உள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கில் இந்த அணை கட்டப்பட உள்ளது. இதற்காக ரூ.11 இலட்சம் கோடி இந்திய ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சீனாவின் த்ரீ கோர்ஜஸ் அணை உட்பட ஹொங்காங்கை தளமாகக் கொண்ட தென் சீனா அணை உட்பட உலகில் உள்ள அனைத்து அணைகளையும் விட மிகப்பெரியதாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது 2021 முதல் 2025 வரையிலான ஐந்தாண்டு திட்டத்தில் பிரம்மபுத்திரா அணையை கட்ட சீனா முடிவு செய்துள்ளது. சீனா அணை கட்டிவிட்டால் பிரம்மபுத்திரா நதி மீது சீனாவுக்கு அதிகாரம் வந்துவிடும். மேலும் எல்லைப் பகுதிகளில் இருந்து பெரிய அளவில் தண்ணீரை திறந்து இந்தியாவுக்குள் விடவும் வாய்ப்பு உள்ளது என்பதால் இந்த அணை கட்டுவதால் இந்தியா அதிக கவலை கொண்டுள்ளது. அதே சமயம் அருணாச்சல பிரதேசத்தில் பிரம்மபுத்திராவின் குறுக்கே இந்தியாவும் அணை கட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குஜராத்தில் அசைவ உணவிற்கு தடை

குஜராத்தின் பாவ்நகர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரம், அசைவ உணவை அதிகாரப்பூர்வமாக தடை செய்த உலகின் முதல் நகரமாக பாலிதானா வரலாற்றில் இடம் பிடித்துள்ளது. இது ஒரு முக்கிய ஜைன புனித யாத்திரை ஸ்தலமாக அறியப்படுகிறது. ஜெயின் சமூகத்தின் மதக் கொள்கைகளை மதிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக தடையை அமுல்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக அகிம்சை மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் இரக்கத்திற்கான அர்ப்பணிப்பாக கருதி தடை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நகரத்தில் உள்ள சுமார் 250 இறைச்சிக் கடைகளை மூடக் கோரி 200 இற்கும் மேற்பட்ட ஜெயின் துறவிகளின் சக்திவாய்ந்த எதிர்ப்பைத் தொடர்ந்து இறைச்சி விற்பனை மற்றும் நுகர்வு ஆகியவற்றைத் தடை செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இந்த அழைப்பை ஏற்று, உணவுக்காக விலங்குகளை கொல்வதையும், பாலிதானாவில் இறைச்சி மற்றும் முட்டை விற்பனையை தடை செய்யும் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியது.



# மேன்மை வாய்ந்த சமூக சேவையாளன் ‘ உபாலியை ’ இழந்த கரவெட்டி



வீரகத்தி தனபாலசிங்கம்

பொன்னம்பலம் என்று சொன்னால் அவரைத் தான் என்று எவரும் உடனே நினைக்கமாட்டார்கள். பல பொன்னம்பலங்கள் கரவெட்டியில் இருந்தார்கள், இருக்கிறார்கள். உபாலி பொன்னம்பலம் என்று சொன்னால்தான் அவரை தெரியும். பொன்னம்பலம் என்று கூறாமல் உபாலி என்று மாத்திரம் கூறினாலும் போதும். கொழும்பில் பணியாற்றிய மிகப்பெரிய தனியார் நிறுவனத்தின் பெயருடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர் இந்த சின்னத்தம்பி பொன்னம்பலம்.

காலஞ்சென்ற கீர்த்திமிகு தொழிலதிபர் உபாலி விஜேவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட உபாலி குழுமத்தில் உயர் பதவிகளை வகித்த பொன்னம்பலத்தை அடையாளப்படுத்தவும் உபாலி என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் உபாலி விஜேவர்தனவுக்கு மிகவும் வேண்டியவராகவும் பொன்னம்பலம் விளங்கினார்.

விஜேவர்தன 1983 பெப்ரவரியில் தனது சொந்த விமானத்தில் தனது நிறுவனங்களின் சில முக்கிய அதிகாரிகளுடன் மலேசியாவுக்கு சென்றபோது தன்னையும் கூட வருமாறு அழைத்ததாக கூறிய பொன்னம்பலம் அவருடன் போயிருந்தால் இன்று உங்களுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டேன் என்று தனது கரவெட்டி இல்லத்தில் ஒரு தடவை நண்பர்களுடன் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சொன்னது நன்றாக நினைவிருக்கிறது.

உபாலி விஜேவர்தனவும் அவரது அதிகாரிகளும் மலேசியாவில் இருந்து நாடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் விமானம் மாயமானதற்கு பிறகு 41 வருடங்கள் உபாலி பொன்னம்பலம் உயிர்வாழ்ந்து இரு மாதங்களுக்கு முன்னர் தனது 82 வது வயதில் எம்மை விட்டுப் பிரிந்தார்.

அவரது மரணம் வடமராட்சியின் கரவெட்டியில் ஒரு மேன்மைவாய்ந்த சமூக சேவகனை எம்மிடமிருந்து அபகரித்துச் சென்று விட்டது. அவர் விட்டுச் சென்ற வெற்றிடம் நிரப்பப்பட முடியாதது என்று கூறுவதையும் விட நிரப்பப்பட வேண்டியது என்று கூறுவதே பொருத்தமானதாகும். ஏனென்றால் உபாலி பொன்னம்பலத்தை போன்ற ஒருவர் எம்மத்தியில் அவசியம்.

> **கரவெட்டி வைத்தியசாலையும் அதன் பௌதீ கக்கட்டமைப்பும் உபாலி பொனன்ம்பலத்தின் அயரா உழைப்புக்கான சான்றுகள்**

தனது உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் வேண்டுமானால் அவர் கொழும்பில் வாழ்ந்திருக்கலாம் அல்லது வெளிநாட்டுக்கு சென்று பிள்ளைகளுடன் வாழ்ந்திருக்கலாம். அவ்வாறு தனது ஓய்வுகாலத்தில் பலரையும் போன்று ஒரு சாதாரண வாழ்வைத் தெரிவு செய்யாமல் தான் பிறந்த மண்ணுக்கு சேவை செய்யவேண்டும் என்று அவர் இறுதிவரை கரவெட்டியிலேயே வாழ்ந்தார்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் என்பது அவரின் சிந்தனையில் உதித்த ஒரு சமூகசேவை அமைப்பு. 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதன் தலைவராக உபாலி பொன்னம்பலம் இறுதிவரை சேவையாற்றினார். உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கின் கிராமங்கள் எல்லாமே இத்தகைய ஒரு சமூகசேவை அமைப்பை வேண்டி நின்றன. கரவெட்டியை போருக்கு பிறகு மீளக்கட்டியெழுப்பும் பணிகளில் பொன்னம்பலமும் அவர் அணிதிரட்டியவர்களும் செய்த பங்களிப்பு அளப்பரியது. உண்மையில் சொல்வதானால் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் முன்னெடுத்த அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் பகுதிகள் சிலவற்றின் நிலக்காட்சியையே மாற்றியமைத்துவிட்டன.

அரசாங்கத்தின் உதவியில் மாத்திரம் தங்கியிராமல் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் உள்ள கரவெட்டி மக்களிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்று கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் பெருமளவு பணிகளை முன்னெடுத்தது. பிரத்தியேகமாக கரவெட்டி பிரதேச வைத்தியசாலை இன்று கண்டிருக்கும் அபிவிருத்தியை பலரும் சில வருடங்களுக்கு முன்னர் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள்.

கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் கிளை அமைப்புக்களை திறக்கவைத்து புலம்பெயர்ந்த கரவெட்டிச் சமூகத்தையும் தங்களது சொந்த மண்ணின் மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்ய வைத்தவர் உபாலி பொனன்ம்பலம்.

கரவெட்டி வைத்தியசாலையும் அதன் இன்றைய பௌதீகக்கட்டமைப்பும் அவரின் தொடர்பாடல் திறனுக்கும் அயரா உழைப்புக்கும் சான்றுகள். சில அபிவிருத்தி பணிகளுக்காக ஆரம்பக்கட்டத்தில் வீடுவீடாகச் சென்று பொன்னம்பலமும் ஒன்றியத்தின் உறுப்பினர்களும் பணம் சேர்த்தனர். அவர் கொடுத்த ஊக்கம் மற்றையவர்களை அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்படவைத்தது என்றால் மிகையில்லை. அனேகமாக அவரின் வீட்டின் முன்றல் எப்போதும் ஆட்கள் சந்தடி நிறைந்ததாகவே இருக்கும். பொன்னம்பலம் அவர்கள் மிகுந்த நகைச்சுவை உணர்வும் கொண்டவர். ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்று அவர் கேட்கின்ற பாணி எவரையும் மறுப்புக்கூற வைக்காது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல வருடங்களாக புமைப்பரிசில் வழங்கிவருகிறது. வீட்டுக்கு வீடு குளாய்நீர் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக அபிவிருத்தி ஒன்றியம் நிறைவேற்றியது. இவ்வாறாக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டு போகலாம்.

கரவெட்டியின் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்கிய தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் உருவச்சிலை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் முயற்சியில் புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் நெல்லியடி நகரின் மத்தியில் சில வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. சிவசிதம்பரம் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் 2023 ஜுலையில் ஒன்றியம் விமரிசையாக நடத்தியது.

கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் எந்த துறையில் என்றாலும் சாதனை புரிந்தால் அவர்களை பாராட்டிக் கௌரவிப்பதற்கு விமரிசையாக விழா எடுப்பதற்கு முன்னின்று செயற்படுவது உபாலி பொன்னம்பலத்தின் நற்பண்புகளில் ஒன்றாகும்.

அவரின் தலைமையில் இதுகாலவரை அளப்பரிய சேவைகளைச் செய்த கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் தொடர்ந்து ஊருக்கும் மக்களுக்கும் பயனுறுதியுடைய சேவைகளை முன்னரை விடவும் சிறப்பாக முன்னெடுப்பதே உபாலி பொன்னம்பலம் அவர்களுக்கு செய்கின்ற பொருத்தமான அஞ்சலியாக இருக்கும். இது விடயத்தில் அவருடன் தோளோடு தோள் நின்ற முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவன் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரசேவை பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் போன்றவர்களுக்கு தலையாய பொறுப்பு இருக்கிறது.

பொன்னம்பலம் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். ஒரு வளமான சமூகசேவை மரபை அவர் விட்டுச் சென்றிருப்பது குறித்து குடும்பத்தவர்கள் என்றென்றைக்கும் பெருமைப்பட்டலாம்.

உபாலி பொன்னம்பலம் அண்ணன் இல்லாமல் புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கும் தறுவாயில் நெஞ்சு கனக்கிறது.

# எஸ். ரபீக் : பல்துறை ஆளுமைக்கு கிழக்கில் ஊடக வித்தகர் விருது

99 வது அகவையை நிறைவு செய்து நூற்றாண்டில் கால் பதிக்கும் இலங்கை வானொலி தெற்காசியாவிலேயே முதன்முதலில் ஒலிபரப்பைத் தொடங்கியது என்பது எமக்கெல்லாம் பெருமை தருகின்றது. 1945 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி ஒலித்தட்டொன்றை சுழலவிட்டு தனது ஒலிபரப்பைத் தொடங்கியது.

அச்சு ஊடகங்களுக்கு எப்படி ஆசிரியர்களும், நிருபர்களும் அவசியமோ அது போன்று மின்மவியல் ஊடகமான வானொலிக்கு அறிவிப்பாளர்களும், தயாரிப்பாளர்களும் இன்றியமையாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். அந்த வகையில் இலங்கை வானொலி அதன் தமிழ் ஒலிபரப்பின் ஊடாக ஒலிபரப்பு ஆளுமைகளை உருவாக்கியுள்ளது. நல்ல குரல்வளம் மட்டுமே ஓர் அறிவிப்பாளனை சிறந்த ஒலிபரப்பாளனாக உருவாக்கிவிடாது.

அறிவிப்பாளன் என்பவன் அனைத்தும் அறிந்த அறிஞனாக இல்லாவிட்டாலும் அனைத்தையும் அறியத்துடிக்கும் ஆர்வலனாக இருத்தல் வேண்டும். அவ்வாறான ஒலிபரப்பாளர் பலர் எமது வானொலியில் பணியாற்றியிருக்கிறார்கள் இன்றும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் எஸ். ரபீக் குறிப்பிடத்தக்கவர். அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், தயாரிப்பாளர், வர்ணனையாளர் என ஒலிபரப்புத் துறையில் பல்வேறு நுணுக்கங்களையும் நன்கறிந்தவர். அவற்றில் தனது முத்திரையை சிறப்பாக பதித்தவர் என்றால் அது மிகையல்ல. குரல் வளமும் உடல் மொழியும் அவரை தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியிலும் நல்ல முறையில் செயலாற்ற வைத்தது.

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக, நிகழ்ச்சி அளிக்கையாளராக, நாடக நடிகராக இவரது பங்களிப்பு அமைந்துள்ளது.

எஸ்.ரபீக் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். கவிதை எழுதுதல், நாடகம் நடித்தல், மாணவர்கள் மத்தியில் பொது அறிவை வளர்க்கும் வகையில் பாடசாலையில் காலை ஆராதனை கூட்டத்தில் செய்திகளை வாசித்தல் என இவரது கலை, இலக்கியப்பணி பதின்ம வயதிலேயே ஆரம்பமாகிவிட்டது.



> **2022 ஆம் ஆண்டு நடை பெற்ற வானொலி அரச விழாவில் தங்கக்குரல் சிறந்த அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்**

பாடசாலை நாட்களிலேயே தேசிய பத்திரிகைகளுக்கு கவிதைகளை எழுத ஆரம்பித்தார். இவரது கவிதைகள் வாசகர்களை பெரிதும் கவர்ந்தன.

இவர் எழுதிய எழுத மறந்த கவிதைகள் நூலுக்கு அணிந்துரை வழங்கிய கவிஞர் மு. மேத்தா S. ரபீக்கின் கவிதைகளை விதந்து பாராட்டியுள்ளார்.

நினைவுகள்
குழந்தைகள் மாதிரி
அழுத பின்புதான்
உறங்குகின்றன
என்ற கவிதை தன்னை ஓர் இரவு முழுவதும் உறங்கவிடவில்லை என மு. மேத்தா குறிப்பிட்டுள்ளார்.

நண்பன் எஸ். ரபீக் என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரியவர்.

நகைச்சுவை உணர்வுமிக்கவர் எப்போதும் எல்லோரிடமும் இனிமையாக பழகுபவர். தனக்குப் பிடிக்காதவர்களோடும் முரண்படாது அவர்களிடமிருந்து விலகி தனது சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நேரிய முறையில் வாழும் ஒரு நேர்மையாளனாக நண்பன் ரபீக்கை நான் பார்க்கிறேன்.

1999 ஆம் ஆண்டு நண்பன் ரபீக்கும் நானும் ஒன்றாக செய்தி வாசிப்பாளராக தேர்ந்தெடுக்கப் பட்டோம்.

அவளில்லாத குடியிருப்பு எழுத மறந்த கவிதைகள் உனக்கான பாடல் நட்சத்திரக் கனவுகள் ஆகிய நான்கு கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

இலக்கிய நிகழ்வுகளில் பேச்சாளராகவும், திறனாய்வாளராகவும் பங்குபற்றி வருவதோடு, ஊடகத்துறை, இலக்கியத்துறை போன்றவற்றில் வளவாளராகவும், பயிற்றுவிப்பாளராகவும் பங்குபற்றி வருகிறார்.

எஸ். ரபீக் விருதுகள், சான்றிதழ்கள் என்பவற்றின் சொந்தக்காரராகவும் உள்ளார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 1989 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடத்திய இளைஞர் கலாசாரப் போட்டியில் அறிவிப்பாளர் பிரிவில் இவருக்கு முதலாமிடம் கிடைத்தது.

2022 ஆம் ஆண்டு நடை பெற்ற வானொலி அரச விழாவில் தங்கக்குரல் சிறந்த அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அதே ஆண்டு அரச ஊழியர்களுக்கிடையே அகில இலங்கை ரீதியாக நடந்த கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.



2019 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட விருது வழங்கல் விழாவில் ஊடகத்துறைக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்வாண்டு (2024) கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஊடகத்துறை வித்தகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஊடக வித்தகர் விருதைப் பெற்றுள்ள நண்பன் எஸ். ரபீக் இன்னும் பல விருதுகளையும் சிறப்புகளையும் பெற்று ஊடகத்துறைக்கும் இலக்கியத்துறைக்கும் தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

**முருகேசு ரவீந்திரன்.**
**கட்டுப்பாட்டாளர் - யாழ் FM**
**இலங்கை வானொலி**

# சண்டைக் 'கோலி'

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி அவசியமில்லாத விரோதத்தை வளர்த்துக் கொண்டார். இதன் காரணமாக இந்திய கிரிக்கெட் வரலாற்றில் யாருக்குமே கிடைக்காத ஒரு விடயம் விராட் கோலிக்கு நடந்திருக்கிறது.

இந்திய கிரிக்கெட் வீரர்கள் என்றாலே களத்தில் மிகவும் நாகரிகமாக நடக்கும் ரசிகர்களுக்குப் பிடித்த வீரர்களாக இருப்பார்கள். இந்தியாவில் மட்டுமல்லாமல் இந்திய வீரர்கள் உலகில் எங்குச் சென்றாலும் அவர்களுக்கு நல்ல மரியாதை கிடைக்கும்.

உதாரணத்திற்கு நியூசிலாந்தில் தனது மகனுக்கு அந்நாட்டு ரசிகர் ஒருவர், சச்சின் டெண்டுல்கர் எனப் பெயர் வைக்கும் அளவுக்கு அந்த மரியாதை இருந்தது. உலக கிரிக்கெட்டில் ஜாம்பவான்கள் எனப் போற்றப்படும் கவாஸ்கர், சச்சின், தோனி, ஷேவாக், ட்ராவிட் போன்ற வீரர்கள் எல்லாம் களத்திற்கு வந்தாலே வெளிநாட்டு ரசிகர்கள் எழுந்து நின்று மரியாதை கொடுப்பார்கள்.


ஏனென்றால் உண்மையான திறமைக்கு எப்போதுமே வெளிநாட்டினர் வரவேற்பும் மரியாதையும் தருவார்கள். இந்த சூழலில் விராட் கோலிக்கும் இந்த மரியாதை முன்பு கிடைத்திருக்கிறது. ஆனால் விராட் கோலி நான்காவது டெஸ்ட் போட்டியில் 19 வயது வீரர் கோன்ஸ்டாசிடம் மோதலில் ஈடுபட்டது அவுஸ்திரேலிய ரசிகர்களை வெறுப்படைய செய்திருக்கிறது.

அது மட்டுமில்லாமல் விமான நிலையத்தில் பெண் பத்திரிகையாளர்களைப் புகைப்படம் எடுக்காதீர்கள் எனக் கோலியாக கூறிய விதமும், அந்நாட்டு ரசிகர்களிடையே வரவேற்பு பெறவில்லை. இதனால் விராட் கோலி துடுப்பெடுத்தாட வந்தபோது ஒட்டுமொத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் ரசிகர்கள் கூக்குரல் எழுப்பினர். இதனைப் பார்த்துக் கடுப்பான இந்திய ரசிகர்கள் அவுஸ்திரேலியாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவருக்கு வரவேற்பு குரல் கொடுத்தனர்.






# கிறிஸ்டியானோவின் கிறிஸ்மஸ்



கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது கிறிஸ்மஸ் விடுமுறையைப் பின்லாந்து நாட்டில் கொண்டாடி வருகிறார். ரொனால்டோ அங்கு தன் குடும்பத்தினருடன் தங்கியுள்ளார். அங்கு ரொனால்டோ ஒரு சாகசத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றார்.

கால்பந்து ஆடுகளத்தில் பல சாகசங்களை நிகழ்த்தி வரும் ரொனால்டோவின் இந்த புதிய சாகசம் பல மில்லியன் பார்வையாளர்களைக் கடந்து சாதனை படைத்து வருகின்றது. தற்போது வரை ரொனால்டோவின் சாகச வீடியோ 200 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்துள்ளது. 20 டிகிரி செல்சியஸ் உறைபனியைத் தாங்கிக்கொண்ட ரொனால்டோ பனியால் சூழப்பட்ட ஒரு சிறிய குளத்தில் குளித்தார். இதை ரொனால்டோ அவர் இன்ஸ்டாகிராமில் வீடியோவாக வெளியிட்டிருந்தார்.

அந்த வீடியோ 213 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்துள்ளது. கிறிஸ்டியானோ ரொனால்டோ நீச்சல் உடையில் நின்றுகொண்டு, நண்பர்களே, இது ஒரு புதுவிதமான அனுபவம், உறைபனி, -20 டிகிரி என்பதைப் பதிவிட்டார். பின்னர் ரொனால்டோ மெதுவாக ஏணியில் இறங்கி பனிக்கட்டி நீரில் மூழ்கி அனைவரையும் திகைக்க வைத்தார்.

ஒரு சிலரை இந்த வீடியோ அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது என்றுதான் சொல்லவேண்டும். இந்நிலையில் உதைப்பந்தாட்ட ஆடுகளத்தில் மிகவும் ஆக்ரோஷமாக இருக்கும் ரொனால்டோவின் மறுபக்கத்தை ரசிகர்களைப் பார்த்து ரசித்தனர்.





# கறுப்புப் பட்டி அணிந்து விளையாடிய இந்திய அணி




முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவையொட்டி, கையில் கறுப்புப் பட்டை அணிந்து இந்திய வீரர்கள் விளையாடினர்.

மெல்போர்னில் நடைபெற்று வரும் நான்காவது போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் களத்தடுப்புக்காக மைதானத்துக்கு வந்த இந்திய அணியினர் அனைவரும் கையில் கறுப்புப் பட்டை அணிந்திருந்தனர்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வீரர்கள் தங்களின் கைகளில் கறுப்புப் பட்டி அணிந்துள்ளதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

# 3000 மீற்றரைக் காலணியின்றி ஓடிய முல்லை மாணவன்




வாழ்க்கையில் சாதிக்க எதுவும் தேவையில்லை மன வலிமையும் உற்சாகமும் இருந்தால் போதும் எனச் சாதனைத் தமிழன் விதுஷன் வெளிக்காட்டியுள்ளார்.

ஓட்டப் போட்டியில் சாதிக்கக் கால்களுக்குக் கவசமாய் காலணி அவசியயில்லை மனதில் உறுதி இருந்தால் போதும் என்று ஆசிய விளையாட்டுப் போட்டியில் 3000 மீற்றர் தூரத்தைக் காலணி இன்றி ஓடி வெற்றி கொண்டுள்ளார் முல்லை மாணவன்.

முல்லைத்தீவை பிறப்பிடமாகக் கொண்ட ஜெயக்காந்த் விதுஷன் இலங்கையில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இலங்கையில் விளையாட்டுத் துறையில் தமிழர்கள் புறக்கணிப்பு என்பது மிகவும் வேதனைக்குரியது, அதையும் கடந்து விதுஷன் ஆசியப் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

# ஒரு சதத்தில் பல சாதனைகள்

அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்டில் ஒரு சதத்தில பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

இந்திய -அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் ஸ்மித் 140 ஓட்டங்களை எடுத்தார். எதிர்பாராத விதமாக பந்து ஸ்டம்பில் பட்டு ஆட்டமிழந்தார்.

இந்த சதத்தின் மூலம் ஸ்டீவ் ஸ்மித் இந்தியாவுக்கு எதிராக அதிக சதங்கள் (11) அடித்த ஜோ ரூட்டை (10) பின்தள்ளி முதலிடம் பிடித்துள்ளார்.



### டெஸ்ட்டில் இந்தியாவுக்கு எதிராக அதிக சதங்கள்

ஸ்டீவ் ஸ்மித் – 11
ஜோ ரூட் – 10
கேரி சோபஸ் – 8
விவி ரிச்சர்ட்ஸ் – 8
ரிக்கி பாண்டிங் – 8

ஸ்மித் டெஸ்ட்டில் தனது 34ஆவது சதத்தினை நிறைவு செய்துள்ளார். இதன்மூலம் கவாஸ்கர், லாரா, யூனிஸ்கான் ஆகியோரின் ஓட்டங்களை சமன் செய்துள்ளார். உலக அளவில் டெஸ்ட்டில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் 7ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

### டெஸ்ட்டில் உலக அளவில் அதிக சதங்கள்

1. சச்சின் டெண்டுல்கர் – 51
2. ஜெக் கலிஸ் – 45
3. ரிக்கி பொன்டிங் – 41
4. குமார சங்கக்கார – 38
5. ஜோ ரூட் – 36
6. ராகுல் திராவிட் – 36
7. ஸ்டீவ் ஸ்மித் – 34

மேலும், பார்டர் கவாஸ்கர் தொடரில் அதிக சதமடித்த வீரர் என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பார்டர் கவாஸ்கர் தொடரில் அதிக சதங்கள்

1. ஸ்டீவ் ஸ்மித் –10
2. விராட் கோலி –9
3. சச்சின் டெண்டுல்கர் – 9
4. ரிக்கி பொன்டிங் –8
5. மைக்கல் கிளார்க் –7

# சர்வதேச பட்மின்டன் போட்டியில் தங்கம் - இரு வெண்கலப் பதக்கங்கள்



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற சர்வதேச தரவரிசை பெட்மிட்டன் சம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்ற இலங்கை வீர வீராங்கனைகள் மூவர் வியாழக்கிழமை பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

உலகின் 20 நாடுகளைச் சேர்ந்த பெட்மிட்டன் வீர, வீராங்கனைகள் பங்கேற்ற இந்தப் போட்டி பங்களாதேஷ் டாக்காவில் கடந்த 17 முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கை வீரர் வீரேன் நெத்தசிங்க தங்கப் பதக்கம் வென்றார்.

அத்தோடு சிதுமி டி சில்வா மற்றும் இசுரி அத்தநாயக்க ஆகியோர் 02 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினர்.

இவர்களை வரவேற்க இலங்கை பெட்மிட்டன் கழக அதிகாரிகள் மற்றும் வீரர்களின் பெற்றோர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 29 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 12 குரோதி வருடம் மார்கழி மாதம்
14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 28 (29.12.2024)








## பாடசாலை செலவுகள் குறைந்தால் நல்லது

நாங்கள் ஒரு நடுத்தர குடும்பம். எங்கள் வீட்டில் நான்கு பேர். வாழ்க்கை செலவு கூடிக்கொண்டே உள்ளது. மிக மிக சிக்கனமாகவே குடும்பத்தை நடத்துகின்றோம். எனது கணவர் கடையொன்றில் விற்பனையாளராக தொழில் செய்கின்றார். கிடைக்கின்ற சம்பளம் குடும்ப செலவுக்கு போதுமானதாக இல்லை. பிள்ளைகள் இரண்டு பேரும் பாடசாலை செல்கின்றனர். அவர்களுக்கான பாடசாலை செலவும் உள்ளது. இப்படியான நிலையில் புதிய வருடம் ஒன்று பிறக்கின்றது. இந்த புது வருடத்தில் எங்கள் எதிர்பார்ப்பு என்னவென்றால், விலைவாசிகள் குறைய வேண்டும் என்பது தான். அதிலும் எங்களைப் போன்ற சாதாரண தொழில் பார்க்கின்றவர்களுக்கு சம்பள அதிகரிப்பு பெரிதாக கிடைப்பதில்லை. கிடைப்பதைக் கொண்டே சமாளிக்க வேண்டியுள்ளது. ஆகையால், முக்கியமாக பாடசாலை செலவுகள் குறையும் வகையில் விலைவாசிகள் குறைந்தால் மிகவும் நல்லது.

**- வளர்மதி கணேசன்,**
**கொட்டாஞ்சேனை**




## வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்க வேண்டும்

வெளிநாடு செல்வதற்காக நான் நீண்ட காலமாக முயற்சித்து வருகின்றேன். “அதோ விசா வருகின்றது இதோ விசா வருகின்றது.. “என கூறுவார்களே தவிர எந்தவொரு விசாவும் வந்தபாடில்லை. எத்தனையோ கோயில்களுக்கும் சென்று விட்டேன், எத்தனையோ சோதிடப் பலன்களையும் பார்த்து விட்டேன்.. வெளிநாடு செல்லும் பலன் உள்ளது என கூறுகிறார்களே தவிர, அது எப்போது கைகூடும் என கூறுவதில்லை. இப்படித்தான் பல வருடங்களாக காத்திருந்து ஏமாந்து வருகின்றேன். பிறக்கின்ற 2025 ஆம் புதிய வருடத்திலாவது எனக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

**ரகுநாதன்,**
**யாழ்ப்பாணம்**




## பிள்ளை குட்டிகளோடு நேரத்தை கழிக்க வேண்டும்

ஓட்டோ ரிக்ஷா ஓட்டுகின்ற எங்களைப் போன்றவர்கள் எப்போதும் மக்களோடு இருப்பவர்கள். எங்கள் பொழுது எப்போதும் வீதியிலேயே கழிகின்றது. பிள்ளை குட்டிகளோடு நேரத்தை கழிப்பதென்பது எங்களுக்கு எப்போதுமே சாத்தியப்படாதது.

எங்களுக்கென்று சரியான ஒரு வாழ்க்கை முறை கிடையாது. சமூகத்திலும் சிலர் எம்மை சந்தேகக்கண் கொண்டே பார்க்கின்றனர். வாடிக்கையாளர்களை நாங்கள் ஏமாற்றிப் பிழைக்கின்றோம் என்றவோர் தப்பான கண்ணோட்டமே இதற்கு காரணம். இந்த கருத்தை இல்லாமல் செய்ய வேண்டும். பிறக்கின்ற வருடத்திலாவது எம்மீதான அந்த தவறான பார்வை நீங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அதோடு பிள்ளை குட்டிகளுடன் பொழுதை செலவிடக்கூடிய வகையில் நமது வாழ்க்கை அமைய வேண்டும் என விரும்புகின்றேன்.

**கணேந்திரன்,**
**பொரளை**



## புதிய வீடொன்றை கட்ட வேண்டும்

சொந்தமாக காணியொன்றை வாங்கி மூன்று வருடங்கள் ஆகின்றன. ஆனால், அதில் இன்னமும் வீடொன்றை கட்டிக்கொள்ள முடியாமல் உள்ளேன். அதற்கான போதிய பணம் இல்லை. வங்கியில் கடன் பெற்று வீட்டைக் கட்டுவோம் என முயற்சித்தால், எனக்கு சம்பளம் குறைவாக உள்ளதாகவும்,கடன் தர முடியாது என வங்கிகள் கூறுகின்றன. பிறகு நான் எப்படி இந்த காணியில் வீட்டைக் கட்டமுடியும்..? வெளிநாட்டிலுள்ள எனது நண்பரொருவர் கடனாக கொஞ்சம் பணம் தருவதாக கூறியுள்ளார். பிறக்கின்ற புது வருடத்திலாவது அவர் அந்த கடனுதவியை எனக்கு செய்ய வேண்டும் என்பதும் அதன் மூலம் வீட்டைக் கட்ட வேண்டும் என்பதுமே எனது புதுவருட எதிர்பார்ப்பாக உள்ளது.

**நடராஜன்,**
**அவிசாவளை**





## புதிய வருடத்திலாவது நல்லதொரு தொழில் கிடைக்க வேண்டும்

பட்டதாரியாகிய நான் கடந்த இரண்டு வருடங்களாக தொழில் தேடி வருகின்றேன். ஏராளமான நேர்முகத் தேர்வுகளுக்கு சென்று வந்து விட்டேன். நம்பிக்கையூட்டும் விதமாக பேசுவார்கள். பின்னர் அறிவிப்பதாக கூறுவார்கள், ஆனால், எந்தவொரு நிறுவனமும் எனக்கு தொழில் தரவில்லை. வீட்டுக்கு பாரமாக இருக்கக்கூடாது என நினைக்கின்றேன், எனினும் எனது ஆசை நிறைவேறுவதாக இல்லை. எனக்கும் எத்தனையோ ஆசைகள் உள்ளன. தொழிலொன்று இருந்தால் தான் இந்த சமூகத்தில் நமக்கு கௌரவமாக வாழ முடியும். ஆனாலும், நீண்ட காலமாகியும் தொழில் தேடும் முயற்சியில் எனக்கு ஏமாற்றமே மிச்சமாகியுள்ளது. இப்படியான நிலையில் தான் தற்போது இன்னுமொரு வருடமும் பிறக்கின்றது. பிறக்கவுள்ள புதிய வருடத்திலாவது நல்லதொரு தொழில் கிடைக்க வேண்டும் என்பது தான் எனது எதிர்பார்ப்பும் பிரார்த்தனையுமாகும்.

**சனூான்,**
**மட்டக்களப்பு**

**தொகுப்பு: ரிஷபன்**



## சுற்றுலா பயணங்கள் செல்ல ஆசைப்படுகின்றேன்

நான் ஒரு வங்கியில் வேலை பார்க்கின்றேன். புது வருட பிறப்பென்று வரும் போது மகிழ்ச்சியான ஒரு உணர்வே வருகின்றது. சக ஊழியர்களுடன் ஒன்றாக புது வருடத்தை கொண்டாடுவதும் நல்லதொரு அனுபவமே. பிறக்கின்ற புது வருடத்தில் நிறைய சுற்றுலா பயணங்கள் செல்ல ஆசைப்படுகின்றேன். என்றாலும், வேலை செய்யும் இடத்தில் விடுமுறை கிடைப்பது கஷ்டமாக இருப்பதால் எப்போதுமே அந்த ஆசை நிறைவேறாமலேயே உள்ளது. பிறக்கின்ற புது வருடத்திலாவது அந்த ஆசை நிறைவேற வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

**- விஜய பாஸ்கர்,**
**கண்டி**



## சொந்தமாக செலூன் ஒன்றை திறக்க வேண்டும்

நான் கடந்த பத்து வருடங்களாக செலூனில் வேலை செய்கின்றேன். இத்தனை வருடமும் ஒரே இடத்தில்தான் வேலை பார்த்து வருகின்றேன். என்றாலும், எனது நீண்ட நாள் ஆசை என்னவென்றால் நானும் சொந்தமாக செலூன் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். அதற்காக சிறிதளவு பணமும் சேர்த்து வைத்துள்ளேன். இந்த வருடம் நடுப்பகுதியில் கடையொன்றை வாடகைக்கு எடுக்க பார்த்திருந்தேன், ஆனால் சில காரணங்களால் அந்த கடையினை எடுக்க முடியாமல் போய்விட்டது. ஆகையால், சொந்தமாக செலூனொன்றை திறக்க வேண்டும் என்ற எனது ஆசை பிறக்கவுள்ள இந்த புது வருடத்திலாவது நிறைவேற வேண்டும் என்பதே எனது ஆவலாக உள்ளது.

**- முகுந்தன், சிலாபம்**

**இவர்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்களும் பிரார்த்தனைகளும் பிறக்கவுள்ள புது வருடத்தில் நிறைவேற நாமும் வாழ்த்துவோமாக**




# புது வருட களேபரம்..!

✱ புது வருடம் பிறக்கவுள்ளது. ஷொப்பிங் செய்வதற்கென்று ஒரு கூட்டம் திரளாக செல்கின்றது.. இன்னொரு கூட்டமோ ஷொப்பிங் மோல்களை ரசிப்பதெற்கென்று செல்கின்றது. அலை என மக்கள் திரண்டாலும் விலை கண்டு பொருட்களை வாங்குவதோ ஒரு சிலபேர் தான். ஆக! ஷொப்பிங் செல்வது கூட கண்காட்சிக்கு செல்வது போல் ஆகிவிட்டது ..

✱ பெருநாள் நாட்களில் பட்டாசு விபத்துக்கள் குறைவு என்றே இப்போதெல்லாம் செய்திகள் வருவதுண்டு.. காரணம் எதுவாக இருக்கும்.. ? நமது மக்கள் அவதானமாக இருப்பதாலா..? இல்லையில்லை.. பட்டாசு போன்றவற்றின் விலை அதிகரிப்பானது பட்டாசுக் கடை பக்கமே போகாமல் தடுப்பதே காரணம்.. ஆக! பாவனையும் குறைவு விபத்துக்களும் குறைவு.. !

✱ இப்போது தான் தபால்காரர்கள் பெருநாள் நாட்களில் ஓய்வாக உள்ளனர். காரணம், முன்னரெல்லாம் பெருநாள் வந்தாலே வீடு வீடாக வாழ்த்து அட்டைகளை விநியோகிப்பதிலேயே அவர்களின் நாட்கள் கழிந்து விடும்.. இப்போது தான் எல்லாமே சோஷல் மீடியா வசமாகிவிட்டதே.. ஆக! அன்றைய தபால்காரர் இன்று மக்களுக்கு தூரம் ஆகிவிட்டார்.

✱ குடும்பமாய் போவதுண்டு ஷொப்பிங் என்று.. பிடித்தமான ஆடைகளை தேர்ந்தெடுத்து விலை என்ன என ஆராய்வதுண்டு .. விலை பார்த்து தொட்ட கை சுட்ட கை என உடையை விட்டு விடும்.. தனக்கென உடை வேண்டாம் பிள்ளைகளுக்கு இருந்தாலே போதுமென்று பெற்ற மனங்கள் திருப்தி காணும்.. பிள்ளைகளின் மகிழ்ச்சியிலேயே அவர்களுக்கு திருப்தி நாளும்.

✱ பழைய விலை ரூபா 7,000/=, கழிவு விலை ரூபா 5,000/= இது சேல்.. சேல்.. இப்படித்தான் கடைகளில் அறிவித்தல் காணப்படும்.. "ஆஹா.. ரொம்பவும் மலிவாக உள்ளதே என்றே வாடிக்கையாளர்கள் நினைப்பதுண்டு.. "உண்மையில் கழிவு என கூறும் விலையே முன்னைய விலையாகும்.. மொத்தத்தில் கழிவு என எதுவுமே அதில் இருக்காது.. இதுவும் கூட வியாபார தந்திரம் தான்..

✱ புது வருடம் வரும் போது.. அநேகம் பேர் ஒவ்வொரு விதமான சபதங்களை எடுப்பதுண்டு.. இதில் வழக்கமாக எடுக்கின்ற ஒரு சபதம் தான் இந்த வருடத்தோடு மது அருந்துவதை நிறுத்தி விடுவேன், புகைப்பிடிப்பதை நிறுத்தி விடுவேன் என்பதாகும்.. இதில் வினோதம் என்ன தெரியுமா ..? அப்படி கூறியவர்கள் இப்போதும் அதனை தான் கூறிக்கொண்டிருக்கின்றனர்.. தொட்ட கை விட்டதாக தெரியவில்லை ..

✱ வருட ஆரம்பத்தில் கைராசிக்காரரிடம் பணம் எடுப்பதும் ஒரு விசேடம் தான்.. சிலரின் கை ராசியானது என்றெண்ணி அவர் கையால் பணம் வாங்க சிலர் முனைவதுண்டு.. இன்னும் சிலரது கையோ ராவசி இல்லாதது என விலகிச் செல்வதுண்டு.. ராசி எல்லாம் எப்படியோ, அவரவர் நல்லபடி உழைத்தால் எந்நாளும் இராசியான நாட்கள் தான்.

-ரிஷா





# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒதுக்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்கள்

கடந்த அரசாங்கங்களின் போது முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ சொகுசு வீடுகள், இனிமேல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்படி பழங்கால வடிவமைப்புகளைக் கொண்ட மேற்படி சொகுசு வீடுகள் இவ்வாறு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்காக ஒதுக்கப்படுவதால் அதிக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர்களின் பங்களாக்கள் தொடர்பில் விசேட கணக்கெடுப்பொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. மேலும், அரச ஊழியர்களுக்காக வழங்கப்படுகின்ற பங்களாக்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.



# அநுரவின் இந்தியப் பயணம்?

ஜனாதிபதியின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் தேர்தலில் தோல்வியுற்ற சில தரப்பினர் பல்வேறு தவறான பிரச்சாரங்களை முன்னெடுத்த போதிலும், இந்த விஜயம் ஒரு வரலாற்று சந்தர்ப்பம் என இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவை தெரிவு செய்தமை மற்றும் அந்த விஜயத்தின் போது இரு நாடுகளும் மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பில் பலரது கவனம் குவிந்துள்ளதாக தெரிகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் உருவாக்கப்பட்ட அரசாங்கம் சில நடைமுறை தாராளவாத சித்தாந்தத்தின் பக்கம் சாய்ந்து அதை நடைமுறைப்படுத்த முனைப்புடன் செயற்படுவது தெளிவாகின்றது.

ஜேவிபி ஆரம்ப இடதுசாரி நோக்கு நிலையிலிருந்து வெகு தொலைவில், சில சமூக ஜனநாயக நவீன தாராளவாத வடிவத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

இந்தப் போக்கு தேசிய அளவிலும், பிராந்திய அளவிலும், உலக அளவிலும் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் சூழலுடன் இணைந்து செல்ல முக்கியமானது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



## அரசியல் அந்தப்புரம்

கனுஷியா புஷ்பகுமார்



# ஜனாதிபதி நிதியம் வழங்கப்பட்டமை தொடர்பில் சந்தேகம்?

பிரபல சினிமா நடிகையும் முன்னாள் எம்.பி. யுமான மாலனி பொன்சேகாவை சிக்கலில் சிக்க வைக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி நிதியத்திலிருந்து 55 இலட்சம் ரூபாய், அவருக்கு வழங்கப்பட்டுள்ளதா என பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாலினி பொன்சேகா 2010 ஆம் ஆண்டு போருக்குப் பின்னரான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், 2 வருடங்களிலேயே எம்.பி பதவியை இராஜினாமா செய்வதாக சபாநாயகரிடம் கடிதம் கொடுத்திருந்தார். இதன் மூலம், அவர் எம்.பி பதவியை இராஜினாமா செய்ததற்கும், ஜனாதிபதி நிதியத்திலிருந்து 55 இலட்சம் ரூபாய் பெற்றமைக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்ற பலத்த சந்தேகங்கள் தற்போது எழுந்துள்ளன. இதன் பின்னணியில் சில அரசியல் சூழ்ச்சிகள் இருக்கலாம் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# அமைச்சர்களின் வீடுகள் எரிக்கப்பட்டமை அரசியல் சதியா?

அரகலய காலத்தின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டமை தொடர்பில் நஷ்டஈடாக 105 கோடி ரூபாவை விட அதிக தொகை 41 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த வீடு எரிப்பு தாக்குதல்களுக்கு பின்னால் பிரபல அரசியல் சதி உள்ளதா என்ற சந்தேகங்களும் தற்போது எழுந்துள்ளன.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி ராஜபக்ஷர்களுக்கு எதிராக போராட்டம் நடத்திய பொதுமக்களின் ஆக்ரோஷம் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது. இது தொடர்பில் மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கொழும்பு கோட்டையில் அரிசி மாஃபியா



கொழும்பு கோட்டையில் அரிசிக்கு அரசாங்கம் நிர்ணயித்த விலையை புறக்கணிக்கும் விதமாக வர்த்தக மாஃபியா இயங்கி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், ஏனைய அரிசி சந்தைகளான தம்புள்ளை, நாராஹேன்பிட்டி மற்றும் மரந்தகஹமுல ஆகியவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்து வருகின்ற நிலையில், கொழும்பு கோட்டையில் உள்ள சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள் அரிசியை நிர்ணய விலைக்கு அப்பால் விற்பனை செய்து தேவையற்ற இலாபங்களை ஈட்டுவதாக கூறப்படுகிறது. கொழும்பு கோட்டையில் வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசியின் மொத்த விலை ஒரு கிலோ 228 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் 22 ரூபாய் மேலதிக இலாபத்தை இந்த கொழும்பு மாஃபியாக்கள் பெறுவதாக அறியவருகின்றது.

# கூலிக்கார அப்பா



உன வேர்வை வாசனை நுகராத
நாட்கள் இல்லை,
ஓய்வெடுப்பதற்கோ உனக்கு
நேரமும் இல்லை...
நீ பட்ட பாட்டை கண்ட போதே
உணர்ந்தேன் என் விழிகளிலும்
நீர் இருப்பதை...
உனது வயிற்றில்
கண்டதில்லை தொப்பை
எனது வயிற்றின்
தொப்பையை பார்த்து
ரசித்தாயே அப்பா...

நீ கருப்பாகி என்னை
வெள்ளை வடிவத்தில் பார்த்து
மகிழ்ந்த இவ்வுலகின் தெய்வமே நீ...
நீ விரும்பியதை எடுப்பதும் இல்லை
நான் விரும்பியதை
தடுப்பதும் இல்லை...
நீ விழிகள் மூடிய போதே
கண்டு கொண்டேன்
உனது பாதத்தின் வலிமையை...!

**- அப்துல் முனாப் மு.கியாஸ்,**
**இறக்காமம்**

# வாசகர் உலா

# நடத்தையைக் கொண்டு தகுதியை அறியலாம்



விக்கிரமாதித்தனிடம் வேதாளம் ஒரு கேள்வி கேட்டது. ஒருவர் நடத்தையை அல்லது செய்கையை வைத்து அவரின் தகுதியை கூற முடியுமா? என்று. அதற்கு ஆம் என்று விக்ரமாதித்தன் கூறினான்.

அழகான மூன்று பெண்கள். மூவரும் அச்சில் வார்த்து எடுத்தது போல் ஒரே தோற்றம் நடை. இதில் ஒருத்தி இளவரசி. இன்னொருத்தி அவள் தோழி, மற்றும் ஒருத்தி பணிப்பெண். இவர்களில் யார் இளவரசி. யார் தோழி யார் பணிப்பெண் என அடையாளம் காணவேண்டும்.

போட்டி துவங்கியது. அலங்கரிக்கப்-பட்ட ஒரு அறை. அதில் ஒரு குத்து விளக்கு ஏற்றப்பட்டு இருக்கிறது. மன்னர் இருக்கும் அறையில் முதலாவதாக ஒரு பெண் வருகிறார். இது யாராய் இருக்கும், எப்படி இனம் காண்பது? முதலாம் பெண் வரும் போது, விக்ரமாதித்தன் விளக்கின் அருகில் வைக்கப்பட்ட எண்ணைப் பாத்திரத்தில் சிறிதை கீழே சிந்தினார். அந்த பெண் கீழே எண்ணெய் சிந்தி இருந்ததைப் பார்த்து அருகில் இருந்த துணியில் வழித்து துடைத்தார். பின்னர் இன்னொரு பெண் வந்தாள். அவள் வரும்போதும் இந்த தவறு நடந்தது. அவள் அந்த சிதறிய எண்ணெய்யை வழித்து தன் தலையில் தடவிக் கொண்டாள். மூன்றாவதாக வந்தவள் கீழே சிதறி இருந்த எண்ணெய்யை பார்த்து தன் கையை தட்டி பணிப் பெண்களை அழைத்து அந்த சிதறிய எண்ணெய்யை துடைக்க ஆணையிட்டாள். ஆகவே கீழே சிந்திய எண்ணெய்யை தலையில் தடவியவள் வேலைக்காரி. கீழே சிந்திய எண்ணெயை துணியால் துடைத்தவள் தோழி. பணிப்பெண்களை விழித்து அந்த சிந்திய எண்ணெய்யை துடைக்க கூறியவள் தான் இளவரசி என்றாராம்.

ஒரே காட்சி. மூன்று பெண்கள். அவர்கள் செயல், நடத்தை அவர்களை ஏதோ ஒரு விதத்தில் இனம் காட்டும் என்பது தான் இதன் சிறப்பு.

**கே.நிவேதா,**
**மன்னார்.**

# அநுரவின் இந்திய – சீன விஜயங்கள்: பொருளாதார இலக்கு சாத்தியமாகுமா?





எம்.எஸ்.அமீர் ஹுசைன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க டிசம்பர் 15ஆம் திகதி இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அடுத்த விஜயமாக ஜனவரி மாதம் சீனாவுக்கு செல்ல இருக்கின்றார். 2005ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் முக்கிய விவகாரங்களில் சீனாவும் இந்தியாவும் கூடுதலான பங்களிப்பை செய்து வருகின்றன. அத்துடன், 2022ஆம் ஆண்டிலிருந்து 2024 ரணிலின் ஆட்சியிலும் இந்தியா இலங்கைக்கு பலவிதமான உதவிகளை செய்த நாடாகும். தொடர்ந்தும் இந்த நாடுகள் எவ்வாறான நிலையிலும் இலங்கையை கைவிடவில்லை. அதற்கான பல பின்னணி காரணங்கள் உள்ளன. அவ்வாறே இலங்கை தற்போது உள்ள நிலையில் இந்தியா – சீனா போன்ற பிராந்திய வல்லரசுகள் போன்று இருக்கின்ற இரண்டு நாடுகளையும் உதாசீனம் செய்துவிட்டு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப முடியாத நிர்ப்பந்த நிலையில் இருந்து வருகின்றமை உலகிற்கு வெளிப்படையாக தெரிகின்றது.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகியவுடன் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் இந்தியாவுக்கானது என்ற வகையில் பல கோணங்களில் இந்த விஜயம் நோக்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள முடியாமல் தவித்த சந்தர்ப்பத்தில் அப்போதைய ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு கடன் கொடுத்து கைகொடுத்த நாடு இந்தியாவாகும். அத்துடன், எந்த வகையில் பார்த்தாலும் இந்தியா இலங்கையின் முதலாவது அயல் நாடு என்ற வகையிலும் பல தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே பல வருடங்களாக இலங்கையில் திருகோணமலை எண்ணெய் குதங்களின் பராமரிப்பு உட்பட பல துறைகளில் முதலீடுகளையும் மேற்கொண்டுவருகின்ற ஒரு நாடு என்ற வகையிலும் இந்தியா இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

இவ்வாறான நிலைமைகளை கருத்தில் கொண்டே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமைச்சர்கள் சிலர் உள்ளடங்கலாக 10 பேரைக் கொண்ட தூதுக் குழுவுடன் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உயர்மட்ட முதலீட்டாளர்கள் பலரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு இன்னும் சில விடயங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளையும் செய்து கொண்டுள்ளார்.

ஆனாலும், இன்றைய தேசிய மக்கள் சக்தியாக இருந்து வருகின்ற ஜே.வி.பி. ஒரு காலத்தில் இந்தியாவின் பரம எதிரியாக காட்டிக்கொண்ட ஒரு அரசியல் கட்சியாகும். அக்கட்சியின் கொள்கை இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கத்தை கடுமையாக எதிர்ப்பதாக இருந்தது. அக்காலப்பகுதியில் இலங்கையில் இந்திய பொருட்களைக் கூட பகிஷ்கரிக்க பகிரங்க அழைப்பு விடுத்து இந்திய எதிரியாக செயல்பட்டாலும் இன்று காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள், தேவைகள் காரணமாக அதே இந்தியாவை கைவிட முடியாத நிலைக்கு அநுர அரசாங்கம் தள்ளப்பட்டமைக்கு அவரது இந்திய விஜயம் சான்றாக அமைகின்றது.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் பின்னணியில் என்ன இரகசியங்கள் உள்ளன என்பதே அரசியல் அரங்கில் எழுகின்ற பிரதான கேள்விகளாகும். முன்னைய ஆட்சி காலங்களில் ஜே.வி.பி. எதிரணியில் இருந்த காலப்பகுதியில் இந்தியாவின் நடவடிக்கைகள் பலவற்றிற்கு கடுமையான எதிர்ப்புக்களை தெரிவித்து வந்த ஜே.வி.பி., இலங்கை போன்ற சிறிய நாடு பிராந்திய வல்லரசான இந்தியாவின் பிடியில் சிக்கி அதன் வர்த்தக வாணிப ஏகாதிபத்திய அடிமையாக மாறக்கூடாது என்பதையே தனது பிரதான கொள்கையாகவும் கோரிக்கையாகவும் கொண்டிருந்தது. அந்த வகையில் கடந்த காலங்களில் இந்தியா இலங்கையுடன் பல ஒப்பந்தங்களை செய்து கொண்டு படிப்படியாக இலங்கையின் உள் விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தும் அளவிற்கு ஆதிக்கமும் செல்வாக்கும் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளமை தவிர்க்க முடியாததாகி உள்ளது.

அதேவேளை, மறுபுறத்தில் இலங்கை தொடர்பாக மேலாதிக்க ஆர்வத்தை செலுத்தி வருகின்ற நாடுகளில் சீனாவும் அமெரிக்காவும் பிரதான இடங்களை பெறுகின்றன. மஹிந்த ஆட்சி காலப்பகுதியில் இலங்கையில் அதிகமாக அக்கறை செலுத்திய இரு நாடுகள் என்றால் இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீனாவையே குறிப்பிட முடியும். ஆனாலும், புதிய ஆட்சி மாற்றத்துடன் சீனா இலங்கையில் கால் ஊன்றுவதற்கு முன்னர் இந்தியா காலூன்ற வேண்டும் என்பது இந்தியாவின் ஒரே திட்டமாகும். அதன் காரணமாகவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவுடன் நேசக் கரம் நீட்டுவதற்கு முன்னர் இந்திய விஜயம் இடம் பெற்றிருக்கின்றது. அதே நேரம் அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் எதிர்பார்ப்பது இலங்கையின் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கம் வலுவடையக் கூடாது என்பதாகும்.

பிராந்தியத்தின் பாதுகாப்பு என்று வருகின்ற போது திருகோணமலை துறைமுகம் இந்த நாடுகளுக்கு பிரதான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாக மாறி இருக்கின்றது. மறுபுறமாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றம் என்று பார்க்கின்ற போது தற்போதைக்கு அரசியல் மாற்றம் நிகழ்ந்து ஸ்திரமான ஆட்சி நிலவினாலும் இலங்கையில் மின் சக்தி எரிபொருள் துறையிலான இந்திய முதலீடுகள், திருகோணமலையில் அமைந்துள்ள 101 எண்ணெய் குதங்களில் 61 குதங்களை மறுசீரமைத்தல், இருநாடுகளுக்கும் இடையிலான எட்கா உடன்படிக்கையின் கீழான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அரசியல் அமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழ்ப் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பரவலாக்கத்தை முழுமையாக அமுல்படுத்தல், இந்திய இலங்கை பிரயாணிகள் கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல், இலங்கையின் 1500 அரச அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சியளித்தல், கூட்டு இராணுவ மற்றும் கடற்படை பயிற்சிகளை முன்னெடுத்தல், இந்திய நிதி உதவியுடனான வீடமைப்பு மற்றும் புகையிரத ஒத்துழைப்பு, இருநாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லை பாதுகாப்பு மற்றும் இலங்கைக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் மீனவர்களால் ஏற்படும் முறண்பாடுகள் உட்பட பல விடயங்கள் அயல் நாடான இந்தியாவுடன் இலங்கைக்கு இருந்து வரும்வருகின்ற பலமான உறவின் அடிப்படையிலான சாதக மற்றும் பாதகமான விடயங்களாக உள்ளன.



**ஒரு காலத்தில் இந்திய பொருட்களை பகிஷ்கரிக்குமாறு மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்து இந்திய எதிரியாக செயல்பட்டிருந்த ஜே.வி.பி காலப் போக்கில் இன்று அதே இந்தியாவை கைவிட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி அநுரவின் இந்திய விஜயம் சான்றாக அமைந்துள்ளது**

இவ்விவகாரங்களில் ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்கவின் இந்திய விஜயத்தில் 'எட்கா' உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்களை அவசரப்படுத்தி அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து உடன்படிக்கையில் கைச்சாத்திடல், தமிழர் பிரச்சினைக்கு தீர்வான 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வை உரிய முறையில் இலங்கையை நிறைவேற்றச்செய்தல் போன்ற விடயங்களை விரைவுபடுத்துமாறு மோடி ஜனாதிபதி அநுரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனாலும், அரசாங்கத்தின் நிலைப்பாடு எந்தக் காரணம் கொண்டும் 'எட்கா' உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடமாட்டாது என்பதாகும். ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாகவும் அந்த கலந்துரையாடலில் எட்காவில் இலங்கை அரசாங்கம் கையொப்பம் இட்டால் அதனால் பலவிதமான பாதகமான விளைவுகள் இலங்கைக்கு ஏற்பட இடம் இருக்கின்றன. அதனால், அந்த உடன்படிக்கை தொடர்பான எந்தவிதமான முன்நோக்கிய நகர்வுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது என்ற திட்டவட்டமான தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் டிசம்பர் 20ஆம் திகதி வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில், தற்போதைக்கு "எட்கா" தொடர்பாக எந்தவிதமான அவசரமும் இல்லை, அந்த உடன்படிக்கையை செய்து கொள்வதால் ஏற்பட இருக்கின்ற எதிர் விளைவுகள் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது என்று தெரிவித்துள்ளார்.

இந்த 'எட்கா' என்ற உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டால் இலங்கைக்கு 07 விடயங்களில் நன்மை பயக்கின்றது. ஆனாலும், இந்தியாவுக்கு 16 விடயங்களில் நன்மை கிடைக்க இருக்கின்றது. அதனால், இலங்கை அடையும் அனுகூலங்களை விட இந்தியாவே உச்சகட்ட கூடுதல் நன்மைகளை அடைய இருக்கின்றது.

ஆனாலும், ஏனைய விவகாரங்களில் இலங்கைக்கு நன்மையாக அமையும் விடயங்களில் இலங்கை இந்தியாவுக்கு பொறுப்புக் கூறும் வகையில் ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கின்றது. ஏனெனில் பிரதான விடயமாக அமைவது கடன் மீளமைப்பில் இந்தியா இலங்கைக்கு ஒத்துழைத்து வருவதால் இலங்கையும் இந்தியாவுக்கு செஞ்சோற்றுக் கடன் நிறைவேற்ற வேண்டி இருப்பதால் ஒத்துழைக்க வேண்டி இருக்கின்றது. ஆனாலும், அதற்கான ஏற்கனவே இலங்கையில் மூக்கை நுழைத்து ஏகாதிபத்திய அதிகாரம் செலுத்தி வரும் அமெரிக்காவையும் சீனாவையும் இலங்கை அரசாங்கம் பகைத்துக் கொள்ள மாட்டாது என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றன.

எனவே, ஜனாதிபதி இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் டிசம்பர் 18ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்த சீனாவின் தூதுக் குழுவொன்றுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அந்த கலந்துரையாடல்களின் பின்னர் ஜனாதிபதி அநுர திசாநாயக்க 2025 ஜனவரி இரண்டாம் வாரத்தில் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளார் என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றன.

இலங்கையில் சீன முதலீட்டு ஒத்துழைப்புக்களை புதுப்பித்தல், கடன் மீளமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள், இலங்கையில் சீன முதலீடுகளை அதிகரித்தல் என்று சீனாவுடனும் பேசுவதற்கு பல விடயங்கள் இருக்கின்றன. எதுவானாலும் ஜே.வி.பி. யாக இருந்து பெயர் மாற்றம் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அதன் சோஷலிச சமூக உடமைவாத சிந்தனையில் எந்தவிதமான மாற்றங்களையும் அல்லது கொள்கை அடிப்படையிலான மாற்றங்களையும் கொண்டிருக்கும் என்று கருத முடியாது. அந்த வகையில் சீனாவும் இந்தியாவும் இந்த ஆசிய பிராந்தியத்தில் சோஷலிச சமூக உடமைவாத கொள்கைகளை கடைபிடிக்கும் இரண்டு பிரதான பலம் பொருந்திய நாடுகளாக அமைந்துள்ளன. அதில் இந்தியா சோஷலிசம் மற்றும் முதலாளித்துவம் சார்ந்த கலப்புக் கொள்கைகளை கடைபிடித்தாலும் சீனா பூரணமாக



சோஷலிச கொள்கையில் நிலைத்து நிற்கும் ஒரு நாடாகும். அதனால், இந்த இரண்டு நாடுகளையும் பகைத்துக் கொண்டு இலங்கைக்கு அதன் ஸ்திரத்தன்மையை உறுதி செய்து கொள்ள முடியாது.

ஏதாவதொரு வகையில் இரண்டு நாடுகளதும் பிடிகள் இலங்கைக்குள் இருப்பதற்கு எப்படியும் அரசாங்கம் அநுசரணை வழங்கியாகத்தான் வேண்டும். அதேவேளை, இவ்விரு நாடுகளுக்கும் இலங்கை எல்லாவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளை கைவிட நினைத்தாலும் இந்த நாடுகள் இலங்கையை கைவிட போவதில்லை. குறிப்பாக, இவர்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை வழங்கும் பிரதான நாடாக இலங்கை இருந்து வருகின்றது. அத்துடன் முதலீடு என்ற விடயத்திலும் இந்த இரண்டு நாடுகளும் பாரிய முதலீடுகளால் பெருத்த இலாபம் ஈட்டி வருவதால் இலங்கை எப்போதும் இந்தியா மற்றும் சீனாவின் பிடிக்குள் இருந்து விடுபட முடியாது. அதனால், மேலும் பிடி இறுகுமா அல்லது தளருமா? எதிர்காலம் இலங்கைக்கு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# ஐந்து நிமிட சிகிச்சையில் மாணவனின் உயிரைப் பறித்த மருத்துவர்களின் அசமந்தம்



ஒரு சத்திர சிகிச்சையின் பின்னர் சுயநினைவு வராமல் மாணவனொருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மருத்துவமனை ஊழியர்களே காரணம் என உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். ஹல்தோட்டை, பெத்திகமுவ எனும் பிரதேசத்தைச் சேர்ந்த, நான்காம் தரத்தில் கல்வி கற்கும் தனுஜ விக்ரம ஆராச்சி எனும் மாணவனே இவ்வாறு துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மாணவனின் பெற்றோர், அந்த மாணவனுக்கு சிறுநீர் பாதையில் ஏற்பட்ட பாதிப்பொன்றிற்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக பிலியந்தலையிலுள்ள மருத்துவர் ஒருவரிடம் அவரை அழைத்துச் சென்றதாகவும், குறித்த மருத்துவரின் ஆலோசனையின் பேரிலேயே அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

17ஆம் திகதியன்று அந்த மருத்துவர் கடமையாற்றுகின்ற ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் மாணவனை அனுமதித்ததுடன் மறுநாள் (18) மதியம் 01.30 மணியளவில் மாணவனுக்கு மயக்க ஊசி ஏற்றி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், சத்திரசிகிச்சை நிறைவடைந்த போதிலும் அவருக்கு சுயநினைவு திரும்பவில்லை.

இதனையடுத்து பெற்றோர் மற்றும் உறவினர்களின் வேண்டுகோளின் பேரில், வைத்தியசாலை அதிகாரிகள் மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினம் மாலை 6.45 மணியளவில் அவரை பொரளை சிறுவர் மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றியுள்ளனர். இருப்பினும் கடந்த 22ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் குறித்த மாணவன் உயிரிழந்ததாக உறவினர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பொரளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையிலேயே இந்த மாணவனின் மரணம் இடம்பெற்றுள்ளதால், அவரது உறவினர்கள் மிரிஹான பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரதிகள் பொரளை பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை விடுமுறை காலம் என்பதாலேயே தனியார் மருத்துவரிடம் மாணவனை அவரது பெற்றோர் அழைத்துச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது. இதுவொரு சிறிய ஐந்து நிமிட அறுவை சிகிச்சை பயப்படத் தேவையில்லை எனக் கூறியே அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்காக சுயநினைவை இழக்கச் செய்யப்பட்ட சிறுவன் சிகிச்சையின் பின்னர் சுயநினைவிற்கு திரும்பவில்லை. மயக்க ஊசி ஏற்றுவோரே இதற்கு பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் இந்த விடயத்தில் அசமந்தமாக இருந்துள்ளனர் என மாணவனின் பெற்றோர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவனை லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு அனுப்பும் போது அவர் சுய நினைவின்றி ஆபத்தான நிலையிலேயே இருந்துள்ளார். மாணவனை சுமார் நான்கு நாட்கள் இயந்திரத்தின் ஆதாரத்துடன் வைத்திருந்துள்ளனர். அதன் பின்னர் கடந்த 22ம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் அவர் மரணமடைந்தார்.

இது குறித்து உரிய விசாரணைகள் நடைபெற வேண்டும் என மாணவனின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அத்தியாயம் 7**

பூங்குழலியை நெருங்கி வந்த தீபனின் முகம் வெறி பிடித்தது போல் அவளுக்குத் தோன்றியது.

"இவன் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தான்?" என்று அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே அவன் அவளை நோக்கி நெருங்கினான்.

"இவன் ஏதோ ஒரு தீய நோக்கத்துடன் தான் இங்கு வந்திருக்கிறான்" என்று புரிந்துகொண்ட பூங்குழலி,

"தீபன் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு தீபன் "உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்" என்றான்.

**"தீபன் கடைசியாகச் சொல்கிறேன். உடனே வெளியே செல்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டே அருகில் இருந்த போத்தலை எடுத்து தயாராக வைத்துக் கொண்டாள். அவனோ எவ்வித தயக்கமும் இல்லாமல் அவளை நெருங்கினான். அவளுக்குக் கடும் ஆத்திரம் ஏற்பட்டு என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கையில் தயாராக வைத்திருந்த போத்தலால் அவனை தாக்குவதற்குத் தயாரானாள்!**

ஆர். ராஜலிங்கம்



# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

"என்னோடு என்ன பேச வேண்டும்? அதற்கு ஏன் இந்த நேரத்தில் வர வேண்டும்?"

"அது வந்து உங்களுக்கு தெரிந்திருக்குமே"

"என்ன சொல்கிறீர்கள்?"

"சும்மா நடிக்காதீர்கள். உங்கள் உள்ளத்தை நான் அறிவேன். அதுபோல நீங்களும் என் உள்ளத்தை அறிவீர்கள்தானே?"

"தீபன் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"அதுதான் சொன்னேனே. சும்மா நடிக்காதீர்கள். நீங்கள் என்னை எதிர்பார்த்திருந்தது எனக்குத் தெரியும்"

"தீபன் உங்களை நல்லவன் என்று நினைத்து உங்களுக்கு இந்த வீட்டில் இடம் கொடுத்தாரே அவர். அதற்கு நீங்கள் செய்யும் கைம்மாறு இதுதானா?"

"நான் ஒரு தவறும் செய்யவில்லையே! உங்களை சந்திக்கவேண்டும் என்று வந்தேன். அது தவறா?"

"தவறுதான். இப்படி தனிமையில் இருக்கும் ஒரு குடும்பப்பெண்ணிடம் திருடன்போல வருகிறீர்களே. அது தவறு இல்லையா?"

"உங்களை சந்தித்துப்பேசவேண்டும் என்று வந்தேன். அது எப்படி தவறாகும்?"

"அதற்கு இதுதான் நேரமா? பகலில் தாராளமாப்பேசலாமே"

"பகலில் மற்றவர்கள் பார்த்தால் தவறாக நினைக்கமாட்டார்களா?"

"நெஞ்சில் வஞ்சனை இல்லாவிட்டால் மற்றவர்கள் முன்னால் தாராளமாகப் பேசலாமே"

"அதெப்படி முடியும்? நாம் பேசவேண்டியது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாத விஷயங்கள் அல்லவா?"

"தீபன் உங்கள் பேச்சு எனக்குப்பிடிக்கவில்லை. உடனே இங்கிருந்து போகப்போகிறீர்களா? இல்லை சத்தம்போட்டு அவரைக் கூப்பிடட்டுமா?"

"உங்களுடைய இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். உங்கள் உள்ளத்தை நான் நன்கு அறிவேன். அதனால்தான் கொஞ்சமும் பயம் இல்லாமல் உங்களை சந்திக்க வந்தேன். உங்களுடைய ஏக்கம் எனக்குப் புரிகிறது" என்று அவன் கூறும்போதே அவளுக்கு மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது.

"தீபன், உங்களை ஓர் அநாதை என்று அவர் கூறினார். அதனால்தான் உங்கள்மீது மிக இரக்கப்பட்டேன். ஆனால் அதுவே பெரும் தவறாகிவிட்டது"

"நான் நீங்கள் காட்டும் அன்பை கொச்சைப்படுத்தவில்லையே. நானும் அதற்கு நன்றியோடுதானே இருக்கிறேன்."

"ஆமாம் அதனால்தான் இந்த நேரத்தில் இங்கு வந்தீர்களா?"

"ஏன் அதில் என்ன தவறு இருக்கிறது?"

"யாராவது பார்த்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்"

"யார் என்ன நினைத்தால் நமக்கென்ன? நாம் ஏன் அதைப்பற்றி கவலைப்படவேண்டும்?"

"தீபன், முட்டாள்தனமாகப் பேசாதீர்கள். உங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. நீங்கள் நாளைக்கே இங்கிருந்து போய்விடுவீர்கள். ஆனால் நான் இந்த வீட்டில் வாழ்பவள். தயவுசெய்து உடனே இங்கிருந்து போய்விடுங்கள். இல்லாவிட்டால் நடப்பதே வேறு" என்று அவள் கூறிக்கொண்டிருக்கும்போதே அவன் அதைப் பொருட்படுத்தாமல் அவளை நெருங்கினான்.

"தீபன் கடைசியாகச் சொல்கிறேன். உடனே இங்கிருந்து போய்விடுங்கள்"

"அப்படி போவதற்காக நான் இங்கு வரவில்லை"

"அப்படியானால் நீங்கள் ஏதோ கெட்ட எண்ணத்தில் இங்கு வந்திருக்கிறீர்கள். அப்படித்தானே?"

"நீங்கள் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி" என்றபடி அவன் அவளை நெருங்கினான்.

"தீபன், கடைசியாகச் சொல்கிறேன். இல்லாவிட்டால் கத்தி கூச்சல் போடுவேன்"

"என்ன நடந்தாலும் அதற்கெல்லாம் நான் பயப்படப் போவதில்லை. ஏனென்றால் எனக்குத் தெரியும் நீங்களும் என்னை சந்திக்க வேண்டும் என்று நினைப்பது" என்று கூறிக்கொண்டே அவன் அவளை நெருங்கினான்.

அவளுக்குப் புரிந்தது. இவனுடன் இனி பேசிப் பயனில்லை. இவ்வளவு காலமும் தூய்மையாகக் கட்டிக் காத்த என் கற்புக்கு எந்த களங்கமும் ஏற்பட்டுவிடக் கூடாது" என்று தீர்மானித்துக் கொண்டவள்,

"தீபன் கடைசியாகச் சொல்கிறேன். உடனே வெளியே செல்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டே அருகில் இருந்த போத்தலை எடுத்து தயாராக வைத்துக் கொண்டாள். அவனோ எவ்வித தயக்கமும் இல்லாமல் அவளை நெருங்கினான்.

அவளுக்குக் கடும் ஆத்திரம் ஏற்பட்டு என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கையில் தயாராக வைத்திருந்த போத்தலால் அவனை தாக்குவதற்குத் தயாரானாள்.

"தீபன் அருகில் வராதீர்கள் வெளியில் சென்று விடுங்கள், இல்லாவிட்டால் உங்களை அடித்துக் கொல்லவும் தயங்க மாட்டேன்" என்று அவள் கூறவே அவன்,

"பரவாயில்லை உங்கள் கையால் சாவதற்கும் நான் தயராகவே இருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே அவளை இன்னும் நெருங்கினான்.

அவள் தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அந்த போத்தலை எடுத்து ஓங்கி அவன் தலையில் அடித்தாள். தீபனின் மண்டை பிளந்து இரத்தம் பீறிட அவன் கீழே சாய்வதைக் கண்டு அவள் "ஐயோ!" என்று அலறினாள்.

**(தொடரும்...)**

## குறுக்கெழுத்துப் போட்டி - 08

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | ■ | 4 | 5 |
| 6 | | ■ | | ■ | 7 | | |
| | ■ | ■ | | ■ | 8 | | ■ |
| 9 | 10 | 11 | | | ■ | ■ | 12 |
| 13 | | | | ■ | 14 | ■ | |
| | ■ | | ■ | 15 | | | |
| ■ | 16 | | 17 | ■ | | ■ | ■ |
| 18 | | ■ | 19 | | | | |

**இடமிருந்து வலம்**

1. இது வரும்போது நகைக்க வேண்டும் என்கிறது திருக்குறள்.
4. ஒலி என்றும் பொருள்படும்.
6. விருப்பத்தையும் குறிக்கும். திரும்பி.
7. இதன் சொல் பலன் உண்டு என்று நம்புகிறார்கள். திரும்பி.
8. காதல் பார்வையை இது வீசுவதாக கூறுவார்கள்.
9. இருள் சூழ்ந்த நேரத்தை குறிக்கும்.
13. பறவைகளின் அரசன் என்று இதனை கூறுகிறார்கள். குழம்பி.
15. அபாயத்தை குறிக்கும் நிறமும் இதுதான்.
16. துன்பங்களால் மனதில் ஏற்படுவது.
18. வெயில் காலத்தை குறிக்கும்.
19. மாடத்தில் வாழும் சமாதானப் பறவை.

**மேலிருந்து கீழ்**

1. பாடல்களை இரசிக்க பல்வேறு ஒலிகளை வழங்குவது.
2. இதுவும் பால் தரும் விலங்குதான். தலைகீழ்.
3. சில ஆடவர்கள் அணியும் காதணி ஒன்று.
4. துன்பம் ஏற்படுத்துதல் என்னும் பொருளைத் தரும்.
5. குளிரை இப்படியும் சொல்வார்கள். தலைகீழ்.
7. உபாதையை குறிக்கும். தலைகீழ்.
10. முட்டையிலும் காணப்படும். தலைகீழ்.
11. திசை ஒன்றைக் குறிக்கும். குழம்பி.
12. படையையும் நடுங்க வைப்பது.
14. சட்டியில் இருந்தால்தான் இதில் வருமென்பர். குழம்பி.
16. பல்வேறு பொருட்களையும் வாங்குமிடம்.
17. மயக்கும் பொழுது என்பர் இதனை. தலைகீழ்.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு - 09

## குறுக்கெழுத்துப் போட்டி 06 இற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | ன் | னி | ப் | 2 பு | ■ | 3 தே | ள் |
| த் | ■ | ■ | ■ | 4 தி | 5 கு | க் | ■ |
| 6 தா | ர | கை | ■ | 7 ர் | தி | கு | ■ |
| ப் | ■ | ■ | 8 கா | ■ | ரை | ■ | 9 கு |
| 10 பு | 11 ல | ர் | த | 12 ல் | ■ | 13 ஆ | ழி |
| ■ | ட் | ■ | 14 ல் | த | 15 ப | ந் | ■ |
| 16 கு | டு | வை | ■ | 17 வி | ந் | தை | ■ |
| டை | ■ | ■ | 18 த் | பு | தி | ■ | ■ |

## பாராட்டுப் பெறுவோர்

1. எம்.டி.மிக்காட் அஹமட், துல்ஹிரிய.
2. எம்.ஜே.பெர்ணான்டோ, கொழும்பு 13.
3. எம்.எம்.ஷபான், யாழ்ப்பாணம்.
4. கே.சுகன்யா, பண்டாரவளை.
5. தி.சிந்துஜன், வவுனியா.
6. என்.சுரேஷ், கல்முனை.

# மாற்றம் ஒன்றே மாறாதது...!



**மனமே**

சுபா

உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது. அதாவது மாற்றம் என்ற சொல்லைத் தவிர அனைத்தும் மாறக்கூடியது என்பதே இதன் பொருள்.

உருவாக்குவதற்கும் விதைப்பதற்கும் அதிக வித்தியாசம் ஒன்றும் இல்லை. இயற்கை மாற்றம் தானாக நிகழ்வது. இயற்கையை தவிர மிகுதி எல்லாமே உருவாக்கப்படுகின்றன. அல்லது விதைக்கப்படுகின்றன.

இயற்கை என்றும் மாறுவதில்லை. அது தன் பாட்டில் இயங்கிக் கொண்டே இருக்கும். இரவு பகலாகவும், பகல் இரவாகவும், கோடை போய் குளிராகவும், வறட்சி போய் வெள்ளமாகவும் மாறுகின்றன. பூ காயாகிறது.. காய் கனியாகிறது.. கனி செடியாகிறது. குழந்தை பெண்ணாகிறாள். பெண் தாயாகிறாள். இளமை மாறி முதுமை ஆட்சி செய்கிறது. மகன், சகோதரன், நண்பன், தந்தை, தாத்தா என நிலை மாறுகின்றது. இத்தகைய மாற்றங்கள் நம் வாழ்வில் ஒவ்வொன்றை கற்றுக் கொடுக்கின்றன.

குறிப்பாக, நம் வாழ்வில் ஏற்படும் சூழ் நிலைகள்தான் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு என்னவெனில், நல்ல சூழ் நிலைகள் நமக்குள் நல்ல மாற்றங்களையும், தீய சூழ் நிலைகள் நமக்குள் தீய மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன.

ஆக... இந்த உலகில் மாற்றம் மட்டுமே நிரந்தரமாக உள்ளது. அதுவே அனுபவரீதியாகப் பார்த்தால், அன்பு வெறுப்பாகிறது. வெறுப்பு பாசமாகிறது. கோபம், சாந்தமாகிறது. சாந்தத்தை கோபம் இல்லாமல் செய்கிறது. அதாவது மனிதனின் குணம் மாறிக் கொண்டே இருக்கிறது.

ஏன்? தேவை, வசதி, வாய்ப்பு, சூழ்நிலைக்கு ஏற்ப, ஆபத்தை தவிர்த்து, நன்மை கருதி, குணம் மாறுபடுகிறது. மாற வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்படுகிறது. இதைத்தான் மாற்றம் ஒன்றே மாறாதது. மாற்றம் மட்டும்தான் நிலைத்திருக்கும் என்கிறோம்.

அடுத்தது, இன்று நடக்கும் ஒன்று, நாளையும் நடக்கும் என்று எண்ணக் கூடாது. இன்றைய சூழல் எம்மை விரக்தியின் உச்சிக்கே கூட கொண்டு சென்றிருக்கலாம். என்னடா வாழ்க்கை இது என்று நம்மை நாமே நொந்து கொள்ளவும் கூடும். நமது நேர்மையும், உழைப்பும் அர்த்தமற்றது என்று கூட நமக்குள் தோன்றலாம். ஆனால் அந்த நிலை நிச்சயம் மாறும். இப்போது வெறுப்பாக தோன்றுவது ஒருநாள் விருப்பாக மாறலாம்.

நேற்றைய தினம் இன்று இருப்பதில்லை. கடந்த நொடியினை மீண்டும் பெற முடியாது. மாற்றம் என்பது காலநிலையில் மட்டுமல்ல. மனிதனின் மனத்திலும் மாற்றம் வேண்டும்.

அந்தவகையில், ஏதோ ஒரு காரணத்திற்காக நெருங்கிய உறவுகளோடு, கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருக்கலாம். ஆனால், மனதில் மாற்றம் ஏற்பட்டு மீண்டும் அவர்களிடம் மனம் விட்டுப் பேசுகின்ற மனோநிலை ஏற்பட வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் மாறிக் கொண்டே தான் இருக்கிறோம் சில நேரம் நமக்குப் பிடித்த விடயங்களுக்காக மாற வேண்டி இருக்கிறது.. சில நேரம் மற்றவர்களுக்காக மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் போது மாற வேண்டி உள்ளது. சில மாற்றம் தான் நம்மை இன்னும் நல்ல நபராக காட்டும்..

ஆக, மாற்றம் ஆரோக்கியமானதே. மாற்றம் வரும்போது, அதை மனிதன் ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். இதை புரிந்து கொண்டால், மாற்றத்தை சந்திக்கும் போது, ஏமாற்றம் அடைய வேண்டி இருக்காது.

# நலமாக விடியும்



கு. குணறுபேஸ்
மட்டக்களப்பு

சிறுகதை

புதிய வருடம் பிறந்தால் வாழ்விலே எல்லோரும் போடுகின்ற திட்டங்களைப்போன்றே தெய்வானையும் பல திட்டங்களைப் போட்டாள். இந்தப் புதிய வருடத்திலாவது அந்நினைவுகள் தனது வாழ்வில் நிறைவேறவேண்டும் என்பது தெய்வானையின் எதிர்பார்ப்பாயிருந்தது. நடந்துமுடிந்த யுத்தம் தெய்வானையின் வாழ்விலும் உரசிச் சென்றிருந்தது. விடிகாலைப் பொழுதில் எழுந்து கடவுளை வணங்கிவிட்டு தனது ஈருறுளியை எடுத்துக்கொண்டு தொழிலுக்காய் சென்ற கணவர் தங்கராசா 'குரெஸ் பயரிங்' இல் சிக்கிக்கொண்டதால் சடலமாகத்தான் அன்றுமாலை சடமாக வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்.

கணவனை இழந்த விதவையாக, தந்தையை இழந்த பிள்ளைகளாக, வருமானமின்றித் தவித்தது குடும்பம். தங்கராசாவிற்கு மூன்றும் பெண் பிள்ளைகளாக கடவுள் கொடுத்திருந்தார். பிள்ளைகளை வளர்க்கவேண்டிய பொறுப்பு தெய்வானையையே சார்ந்திருந்தது. அதுமாத்திரமல்ல பெண்தலைமைத்துவக் குடும்பமாக பிள்ளைகள் மூவருக்கும் பாதுகாப்பாயிருக்கவேண்டியதும் தெய்வானையின் பொறுப்பாகவே இருந்தது. தங்கராசா இறந்தபின்னர் சில நாட்களுக்கு அயலகத்தவர்கள் உதவி செய்துவந்தனர். நாளடைவில் அவர்களும் கைவிட்டுவிட்டனர். சுயதொழிலாக காலை உணவு தயார் செய்து விற்றுவந்த பணத்திலே தனது குடும்பத்தினை நடத்திக் கொண்டு வந்தாள் தெய்வானை. வாழ்வில் அவ்வப்போது சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்து வந்த தெய்வானை இப்போது வாழ்வில் வருகின்ற சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் பழக்கப்பட்டவளாக அவற்றை எல்லாம் ஒரு சவாலாகவே ஏற்று வாழப் பழகியிருந்தாள். பிள்ளைகள் மூன்றுபேரும் மகளிர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்ற காலம் அது. பிள்ளைகளின் கல்விக்கான தேவைகளையும், ஏனைய தேவைகளையும் தெய்வானையே நிறைவு செய்யவேண்டிய மற்றுமொரு பொறுப்பும் அவளுக்கிருந்தது. வருடங்கள் ஆரம்பிக்கின்றபோது தெய்வானை போடுகின்ற திட்டங்கள் அத்தனையும் நிறைவேறுவதில்லை. சில திட்டங்கள் நனவாகாத கனவுகளாக நிறைவேறாத நினைவுகளாகக் காணப்படுவதே அவளின் வாழ்வின் அனுபவமாயிருந்தது.

காலத்தின் ஓட்டத்தில் ஒருவாறாக பிள்ளைகள் வளர்ந்து வந்தனர். உயர்தரத்தை நிறைவு செய்திருந்த மூத்தவள் சங்கவிக்கு பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்திருந்தது. தெய்வானையின் அயராத உழைப்பினாலும் குடும்பநிலை அறிந்து சங்கவி கல்வியில் ஆர்வம் காட்டியதனாலும் அவளுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. சங்கவியின் பிரயாசத்தையும் தெய்வானையின் முயற்சியையும் அயலவர்கள் பாராட்டியதுடன், பல்கலைக்கழகம் செல்லவிருக்கின்ற சங்கவிக்கு சில உதவிகளையும் செய்தனர்.
பேராதனைப் பல்கலைக்கழகம் சங்கவிக்குக் கிடைத்தது. தங்கைகள் இருவரும் சங்கவியின் கல்வி வாழ்வில் கிடைத்த வெற்றியைப் பார்த்து தாங்களும் படிப்பில் ஆர்வம்காட்டி வந்தனர். சங்கவி பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்வாளானால் அவளுக்குக் கிடைக்கின்ற தொழில் தெய்வானையின் குடும்பத்திற்கு துணையாக அமையும். அதனூடாக மூத்தவளை திருமணம் செய்து கொடுத்து வாழ்விக்கலாம் என்பது தெய்வானையின் எதிர்பார்பாயிருந்தது.

காலை உணவு தயார் செய்து விற்கும் செயற்பாட்டை தெய்வானை நிறுத்தி விடவில்லை. காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒருவாறாக சங்கவியின் பல்கலைக்கழகக் கல்வி வாழ்வும் நிறைவுக்கு வந்தது. தொழிலுக்காய் விண்ணப்பித்துவிட்டுக் காத்திருந்தாள். பட்டதாரிகளுக்காகக் கோரப்படும் தொழில்களுக்காய் விண்ணப்பித்துவிட்டு தொழிலுக்காய் காத்திருந்தாள். இந்நாட்களில் தாய் தெய்வானையுடன் சேர்ந்து காலை உணவு தயாரிப்பதிலும் ஈடுபட்டுவந்தாள். அந்நாட்களில்தான் அவளுக்கு இந்த வாய்ப்புத் தேடிவந்தது. பல்கலைக்கழகக் கல்வியை முதல் வகுப்பிலே சித்தியெய்து நிறைவு செய்தவள் என்பதனால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் டெமொன்ஸ்ரேட்டராகப் பணியாற்றும் வாய்ப்பும் அவளுக்குக் கிடைத்தது. இப்போது சங்கவி ஓர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டதுடன், தெய்வானையின் குடும்பத்திற்கு அதுவொரு சுமைக் குறைப்பாகவும் அமைந்திருந்தது. தங்கைகள் இருவருக்குமான பாடசாலைத் தேவைகளை இன்னும் நிறைவு செய்வதற்கு சங்கவியின் வருமானம் உதவியாகவும் இருந்தது.

சில வெற்றிகளையும் பல தோல்விகளையும் சந்தித்து வந்த தெய்வானைக்கு இப்போது மற்றுமொரு சவால் காத்திருந்தது. சங்கவியுடன் பல்கலைக்கழகத்தில் படித்த பிள்ளைகள் ஒவ்வொருவராய் திருமண வாழ்வில் இணையத் தொடங்கினர். சங்கவியும் திருமணம் செய்தாகவேண்டுமல்லவா?, ஆனால், சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைப்பதுதான் தெய்வானைக்குப் பிரச்சினையாய் அமைந்திருந்தது. குடும்பநிலையறிந்து படிப்பிலே ஆர்வம் காட்டியதனால் காதல் செய்து கொள்வதைப் பற்றிய சிந்தனை சங்கவிக்கு ஏற்படவில்லை. தான் படித்து நல்ல நிலைக்கு வருவதுடன் தனது இரு தங்கைகளுக்கும் தேவையான அத்தனை விடயங்களையும் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுவே சங்கவியின் நோக்கமாயிருந்தது. ஆனால், கடவுள் தனது மூத்த பிள்ளைக்கு ஓர் வாழ்வை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது தொய்வானையின் வேண்டுதலாயிருந்தது.

அறிந்தவர்கள் தெரிந்தவர்களிடம் தனது பிள்ளை சங்கவிக்கு ஓர் வாழ்க்கைத் துணையை பார்க்கும் படியும் தெய்வானை சொல்லி வைத்ததுடன், தெய்வானை பல முயற்சிகளும் செய்திருந்தாள். சங்கவிக்கு ஓர் மாமன் மகன் இருக்கின்றான். அவுஸ்திரேலியாவில் நல்ல தொழில் செய்து வருவதுடன் அங்கு அவனுக்குக் குடியுரிமையும் இருக்கின்றது. அவன் பெயர் சங்கர். தனது தந்தை தங்கராசாவின் தங்கையின் மகன். சங்கவிக்கு சங்கர்தான் முறை மச்சான். ஆனால், சங்கரின் தாய் மிகவும் இறுக்கமானவள் என்பதனால் முறை மச்சானை சங்கவிக்குத் திருமணம் செய்து வைப்பதென்பது எட்டாக்கனி என்பது தெய்வானைக்குத் தெரிந்த விடயம்தான். தங்கராசா வாழ்ந்தபோது கூட, வசதியாய் வாழ்ந்த அவரின் தங்கை குடும்பம் தங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை என்பது ஊர் அறிந்த உண்மை.

இறைவன் நினைப்பதனை யாராலும் தடுக்கவே முடியாது. சங்கர் அவுஸ்திரேலியாவில் நல்ல தொழில் செய்து நல்ல நிலையில் இருக்கின்றான். அவனையும் ஓர் திருமணவாழ்விற்குள் இணைத்துவிட்டு பேரக்குழந்தைகளைக் காணவேண்டும் என்பது அவனின் தாய் தந்தையர்களின் ஆவலாயிருந்துது. சங்கருக்கான திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமானது. பல்வேறு இடங்களிலே திருமண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வந்த நல்ல பல சம்பந்தங்களையெல்லாம் சங்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. சங்கரின் தாய் தந்தையருக்கு அவனின் எதிர்பார்ப்பு என்னவென்று புரியவில்லை. சங்கரின் எதிர்பார்ப்பு சங்கவிதான் தனது வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என்பதாகவே இருந்தது. தனது எதிர்பார்ப்பினை பெற்றோருக்குத் தெரியப்படுத்தினான் சங்கர்.
வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதுபோல சங்கவியின் வாழ்வில், தெய்வானையின் குடும்பத்தில் ஒரு நல்ல மகிழ்வான காரியம் நடைபெறுவதற்கு கடவுள் தீர்மானித்துவிட்டார்.

இந்த வருடத்தில் தெய்வானையின் குடும்பம் சந்தித்த அத்தனை துன்பங்கங்களின் மத்தியிலும் ஓர் நல்லகாரியம் நடைபெறப்போகின்றது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்பதுபோல் பிறக்கவிருக்கின்ற புதிய வருடம் தெய்வானையின் குடம்பத்திற்கு நல்ல ஆசிர்வாதங்களைக் கொண்டுவரும் என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகின்றது. ■

# இவற்றை யாரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்



- உங்களுடைய வாழ்க்கையில் உங்களுக்கு சில நேரங்களில் ஆழ்ந்த குழப்பங்கள் அல்லது நெருக்கடியான சூழ்நிலைகள் வரலாம். இது உங்களுடைய தனிப்பட்ட விவகாரம். உங்கள் சோதனைகளை பற்றி யாரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். யாருக்கும் உங்கள் மேல் முழு அக்கறை கிடையாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் கஷ்டங்களை பகிர்ந்து கொள்வதால் உங்களுக்கு எந்தவித தீர்வும் கிடைக்காது. உங்கள் கஷ்டங்கள் என்றும் உங்களோடு இருப்பது தான் உங்கள் சுயமரியாதைக்கு நல்லது.
- உங்கள் சம்பளம், வங்கிக் கணக்கு விபரங்கள், கடன் நிலை போன்றவை நீங்கள் நெருங்கியவர்களுடன் கூட பகிரக்கூடாது. பண விடயங்களை அதிகம் பகிர்வது சில சமயங்களில் மற்றவர்களின் கண்திருஷ்டிக்கு உள்ளாக்க நேரிடும். உங்கள் பணவிடயத்தை பற்றி வெளிப்படையாக பேசாதீர்கள்.
- உங்கள் குடும்பத்திற்குள் நடைபெறும் சிக்கல்களை வெளியில் கூறுவது, குடும்ப உறவுகளை மேலும் கேள்விக்குறியாக்கலாம். உங்கள் குடும்பத்தில் ஏற்படும் தகராறுகளை பற்றி மற்றவர்களிடம் பேசுவது உங்கள் குடும்பத்தை தாழ்வுபடுத்தும் அபாயம் உள்ளதால், இத்தகைய விடயங்களை உங்களுடனேயே வைத்திருக்க வேண்டும்.
- உங்கள் தொழில் யோசனைகள் மற்றவர்களிடம் பகிரப்பட்டால், உங்களின் யோசனையை களவாடி உங்கள் முன்னேற்றத்தை தடுத்துவிடலாம். உங்கள் கனவுகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டால், உங்கள் முயற்சி வீண் என்று சொல்லி உங்கள் செயலாற்றலை முடக்கி விடவும் கூடும்.
- உங்கள் சொந்தங்களை பற்றி நீங்கள் மனதில் வைத்துள்ள எதிர்மறை எண்ணங்களை அல்லது குறைகளை அவர்கள் அல்லது மற்றவர்களுடன் பகிர்வதை தவிர்க்கவும். இல்லையென்றால், நீங்கள் சொன்னதை திரித்து உங்கள் மேல் தப்பபிப்ராயம் வருமாறு செய்யவும் கூடும்.

# வாழ்க்கையை துரிதப்படுத்தும் ஆன்மீக செயல்முறைகள்

-சத்குரு



அடிப்படையில் எல்லா ஆன்மீக செயல்முறைகளும் உங்கள் வாழ்க்கையை துரிதப்படுத்துவதற்காக அமைந்தனவே ஆகும். சாதாரணப் போக்கில் சென்றால், அது நீண்ட காலம் எடுக்கலாம். அதனால், ஆன்மீக செயல்முறை என்பது அவசரப்படுகிற மக்களுக்கானது. அவர்கள் மிகக் குறைந்த நேரத்தில் இலக்கை அடைய விரும்புகிறார்கள். ஆனால், விஷயங்கள் மிக விரைவாக நகரும்போது, நீங்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் தெருவில் நடந்து செல்லும்போதோ அல்லது வனப்பாதையில் நடக்கும்போதோ, புளியமரத்தைப் பார்த்தால், உங்கள் வாயில் எச்சில் ஊறும். நீங்கள் புளியைப் பறிக்கலாம், பூக்கள் கூட நல்லதுதான். நீங்கள் சிறிது புளியம்பூக்களைச் சாப்பிடலாம். அதற்கு நீங்கள் நடந்து செல்வது நல்லது. நீங்கள் மரத்தில் ஏறி, விரும்பிய அளவு புளியை சாப்பிட்டுவிட்டு போகலாம். நீங்கள் மாட்டு வண்டியில் செல்கிறீர்கள் என்றால், சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் – கிடைப்பதை விரைவாக பறித்துக்கொள்ள வேண்டும், தேர்ந்தெடுத்து பறிக்க முடியாது. நீங்கள் காரில் செல்கிறீர்கள் என்றால், பறிப்பது சற்று ஆபத்தானதாக இருக்கும். நீங்கள் பறித்தால், அது உங்கள் கையை துண்டித்துவிடக்கூடும். நீங்கள் வேறு ஏதாவது செய்கிறீர்கள் என்றால், அதாவது, விமானத்தில் பறக்கிறீர்கள் என்றால், அத்தகைய விஷயங்களை நீங்கள் கற்பனை கூட செய்ய முடியாது. நீங்கள் கையை வெளியே நீட்டவே கூடாது.

எனவே, மக்கள் தங்கள் விருப்பப்படியே பயணத்தை தேர்ந்தெடுக்கிறார்கள். மக்கள் தங்கள் இலக்கை அடைய எவ்வளவு ஆவலாக உள்ளார்கள் அல்லது இலக்கைப் பற்றி அக்கறை கொள்ளாமல் பயணத்தை எவ்வளவு ரசித்து அனுபவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து பயணம் செய்யும் முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் இலக்கை அடைய அக்கறை கொள்வதில்லை என கூறுவதை விட நேரம் செல்லும்போது அவர்கள் அக்கறை கொள்வார்கள் என்றே கூற முடியும். எல்லோரும் இலக்கை அடைய விரும்புகிறார்கள். ஆனால், எவ்வளவு நேரம் காத்திருக்க தயாராக உள்ளார்கள் என்பது தான் கேள்வியாகும்.

அதற்கு முதலில் செயல்பாட்டில் சரியான ஒழுக்கமும் கவனமும் இருக்க வேண்டும். பஸ்ஸில் செல்லும் போதுகூட, நீங்கள் புளியமரத்தை பிடித்துக் கொண்டிருந்தால், ஒன்றில் பஸ் நிற்க வேண்டும் இல்லையென்றால் உங்கள் கையை அங்கேயே விட்டுவிட்டு போக வேண்டும். இதில் ஏதாவது ஒன்று நடக்கத்தான் வேண்டும். இல்லையென்றால் நீங்கள் கையை வெளியே நீட்டக்கூடாது. நீங்கள் வெறுமனே உலகம் கடந்து செல்வதை பார்க்க வேண்டும். நீங்கள் நடந்து செல்லும்போது அப்படி அல்ல, ஆனால் அதற்கு நீண்ட நேரம் எடுக்கும்.

நீங்கள் ஒரு சிறந்த வாழ்க்கையை மட்டுமே எதிர்பார்க்கிறீர்கள் என்றால் எதிலும் நிதானத்தை, ஆன்மீகத்தை கடைபிடித்து பயணிப்போமாயின் இலக்குகளை அடைவது இலகுவாகும் . ■

**எல்லோரும் இலக்கை அடைய விரும்புகிறார்கள். ஆனால், எவ்வளவு நேரம் காத்திருக்க தயாராக உள்ளார்கள் என்பது தான் கேள்வியாகும்...**




# மனித நேயம்



ஒரு அரசரிடம் பத்து காட்டு நாய்கள் இருந்தன. தவறு செய்த தனது ஊழியர்களை அந்த காட்டுநாய்களுக்கு இரையாக்குவார் அவர். ஒரு நாள் வேலைக்காரர்களில் ஒருவர் தவறான ஒரு கருத்தை சொன்னார், அரசருக்கு கோபம் வந்துவிட்டது.
"இவனை நாய்களுக்கு தூக்கி எறியுங்கள்" என்று கட்டளையிட்டார்.
"வேலைக்காரன் கெஞ்சினான், நான் உங்களுக்கு பத்து வருடங்களாக சேவை செய்தேன், நீங்கள் இப்படி ஒரு தண்டனையை எனக்குத் தரலாமா? தயவுசெய்து என்னை அந்த நாய்களுக்கு தூக்கி எறிவதற்கு முன் பத்து நாட்கள் அவகாசம் ஒன்று தாருங்கள்!" என்றான்.
அரசர் ஒப்புக் கொண்டார்.
அந்த பத்து நாட்களில், வேலைக்காரன் நாய்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் காவலரிடம் சென்று, அடுத்த பத்து நாட்களுக்கும் தான் அந்த நாய்களுக்கு சேவை செய்ய விரும்புவதாகக் கூறினான். காவலர் குழப்பமடைந்தார், ஆனாலும் ஒப்புக் கொண்டார்.
அந்த வேலைக்காரன் அந்த நாய்களுக்கு உணவளித்தான், அவற்றைச் சுத்தம் செய்தான், குளிப்பாட்டவும் தொடங்கினான். அவற்றிற்கு அனைத்து விதமான வசதிகளையும் வழங்கி அன்பு காட்டினான்.
பத்து நாட்கள் முடிந்தது.
வேலைக்காரனைத் தண்டிப்பதற்காக நாய்களிடம் தூக்கி எறியும்படி அரசர் உத்தரவிட்டார்.
அவன் தூக்கி எறியப்பட்ட போது, அவை ஓடி வந்து அவனின் கால்களை நக்கத் தொடங்கின. இதைக் கண்டு அனைவரும் வியந்தனர்! இதைப் பார்த்து திகைத்த அரசன், "என் நாய்களுக்கு என்ன நேர்ந்தது?" என்றான்.
வேலைக்காரன் பதிலளித்தான், "நான் பத்து நாட்களுக்கு மட்டுமே இந்த நாய்களுக்கு சேவை செய்தேன், அவை என் சேவையை மறக்கவில்லை. நான் உங்களுக்கு பத்து வருடங்கள் சேவை செய்தும் என் முதல் தவறைக் கூட மன்னிக்காமல் நான் உங்களுக்கு செய்த அனைத்தையும் மறந்து என்னை தண்டிக்க உத்தரவிட்டீர்கள்!" என்றான்.
அரசர் தனது தவறை உணர்ந்து வெட்கித் தலைகுனிந்தார். அவனை விடுவிக்கும்படி உத்தரவு பிறப்பித்தார்.




# அவளைவிட இவள்...?



ரமணன் ஒரு கட்டை பிரம்மச்சாரி. பெற்றோர் ஏற்கனவே காலமாகிவிட்டனர். உறவினர்களுடனும் தொடர்பில்லை. நெருங்கிய நண்பர்கள் சிலர் மட்டும்தான் அவனுடைய சுகத்துக்கங்களில் பங்குகொண்டு அவனுக்கு உதவியாக இருந்தனர். நல்ல உத்தியோகம்.

கை நிறைய சம்பளம். ஆனாலும் ஹோட்டல் உணவு பிடிக்காததால் அவனே சமைத்து சாப்பிட்டு வந்தான். அவனுடைய நிலைமை நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியது. சமைப்பது, உடைகளைக் கழுவுவது, வீட்டை சுத்தப்படுத்துவது போன்ற வேலைகளை அவனே செய்து சிரமப்படுவது நண்பர்களுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது.

அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைத்துவிட்டால் துணைக்கு துணையாகவும் இருக்கும். அவனுடைய வேலைகளும் முக்கால்வாசி குறைந்துவிடும் என்று நினைத்தார்கள். தங்களுடைய யோசனையை அவனிடம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், அவனுக்கோ அது பிடிக்கவில்லை. திருமணம் செய்துகொண்டால் மேலும் பிரச்சினைகள் வந்துவிடுமோ என்று பயந்தான். ஆனாலும் நண்பர்களின் வார்த்தை அவனுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது.

"ரமணா திருமணம் செய்து கொண்டால் மனைவி உனக்கு வாய்க்கு உருசியாக சமைத்துத் தருவாள். உன் வேலைகள் முக்கால்வாசி குறைந்துவிடும். சந்தோஷமாக வேலைக்கு போய்விட்டு வரலாம்" என்று கூறினார்கள்.

நண்பர்களின் வற்புறுத்தலுக்கு அவன் இணங்கினான். நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பெண்ணைப் பார்த்து அவனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

அதோடு வந்தது அவனுக்கு சோதனை. அந்தப் பெண்ணுக்கு சமைக்கவோ தேநீர் தயாரிக்கவோ கூடத் தெரியாது. எந்நேரமும் படுத்து உறங்கிக் கொண்டுதான் இருப்பாள். ரமணன்தான் சமைத்து, சாப்பாட்டை தட்டில் போட்டு அவள் அருகில் கொண்டுபோய் கொடுக்க வேண்டும். கை கழுவக்கூட தண்ணீரை அருகில் கொண்டு போய் கொடுக்க வேண்டும். தேநீரையும் தயாரித்து அருகில் கொண்டு போய் கொடுக்க வேண்டும்.

இது அவனுக்கு ஏற்கனவே இருந்த வேலையை இரண்டு மடங்காக அதிகரித்துவிட்டது. இது நண்பர்களுக்குத் தெரிந்ததும் மிகுந்த கவலைப்பட்டார்கள். ரமணனுக்கும் இந்த வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது. காலப்போக்கில் திருமண வாழ்க்கை உடைந்துவிட்டது. மனைவி அவனை விட்டுப் பிரிந்து போய்விட்டாள்.

நாட்கள் நகர்ந்தன. ரமணன் பழையபடி தனிமையில் வாழ்ந்து வந்தான். அவனுடைய நிலை நண்பர்களுக்கு திரும்பவும் கவலையை ஏற்படுத்தியது. ரமணனுக்கு வேறு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்துவிட்டால் என்ன என்று நினைத்தார்கள்.

அவனிடம் பேசிப் பார்த்தார்கள். முன் போலவே அவன் இதனையும் விரும்பவில்லை. ஆனாலும் நண்பர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கினான். மீண்டும் வேறு பெண்ணுடன் அவனுக்கு திருமணம் நடந்தது.

இந்தப் பெண் சற்று வித்தியாசமானவள். இவளுக்கும் சமைக்கவோ, தேநீர் தயாரிக்கவோ தெரியாதுதான். எந்நேரமும் உறங்கிக் கொண்டுதான் இருப்பாள். ஆனால் முதல் மனைவி போல இவளுக்கு சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு போய் கொடுக்கத் தேவையில்லை. தேநீரை அருகில் கொண்டு போய் கொடுக்கத் தேவையில்லை. நேரத்திற்கு அவளே எழுந்து வந்து சாப்பாட்டைப் போட்டு சாப்பிட்டுக் கொள்வாள். தேநீரை எடுத்துக் குடித்துக் கொள்வாள்.

ரமணன் சாப்பாட்டை சமைத்து வைக்க வேண்டும். தேநீரை தயாரித்து வைக்க வேண்டும். இப்படி அவர்கள் வாழ்க்கை போய் கொண்டிருந்தது.

சில நாட்களுக்குப் பின் நண்பர்கள் வந்து, "ரமணா இந்தப் பெண் எப்படி?" என்று கேட்டார்கள். ரமணன் "அவளைவிட இவள் பரவாயில்லை" என்றான்.

அவள் பற்றிய விஷயத்தைக் கேட்ட நண்பர்கள் தம் இரண்டாவது முயற்சியும் வீணாகிவிட்டதே என்று தலையில் கை வைத்தனர்.

(படித்துச் சுவைத்தது)



# கவிச் சக்கரவர்த்தியை கவியால் தாக்கிய ஒவையார்

ஒருமுறை கம்பர் ஔவையாரைப் பார்த்து,

"ஒருகாலடீ நாலிலைப் பந்தலடீ"

என்று சிலேடையாகச் சொல்லிப் பொருள்கேட்கிறார்.

"டீ" போட்டு தன்னை ஒருமையில் சொல்லி அவமானம் செய்கிறார் கவிச்சக்கரவர்த்தி என்பதை அறிந்து கொண்டார் ஔவை. நாமும் நம் வேலையைக் காட்டிவிட வேண்டியதுதான் என்று உடனடியாக, அதிரடியாக, வெண்பா பாடி, தன்னை வம்பிழுத்த கம்பனைத் தம் தமிழ்த் திறத்தால் தெம்பிழக்க வைத்ததாக தமிழறிஞர்கள் கர்ண பரம்பரைக் கதையாக கூறுகிறார்கள்.

கம்பனுக்கு பதில் சொல்வதாக ஔவை பாடிய வெண்பா இதுதான்...



எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே மட்டில்
பெரியம்மை வாகனமே - முட்டமேற் கூரையில்லா வீடே,
குலராமன் தூதுவனே, ஆரையடா சொன்னாய் அது

என்பதாகும்.

அதாவது இதன் பொருள்,
எட்டைக் குறிக்கும் தமிழ்க்குறி 'அ'.
கால் என்பதன் தமிழ்க்குறி 'வ'.
இரண்டையும் சேர்த்தால் 'அவ'.
எனவே எட்டேகால் லட்சணமே என்பது

அவலட்சணம், எமனேறும் பரி (குதிரை)
எமனின் குதிரை அதாவது எருமை மாடு,
பெரியம்மையின் வாகனம் என்றால்
மூதேவியின் வாகனம். அதாவது கழுதை,
மேற்கூரை இல்லா வீடு... குட்டிச்சுவர்,
ராமன் தூதுவன் - குரங்கு., ஆரையடா ...
ஆரைக்கீரையடா.

அதாவது, அவலட்சணமே, எருமை மாடே. கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே, நீ சொல்வது ஆரைக்கீரை யடா என்கிறார்.

மகா கேவலமா திட்டிவிட்டு, டீ என்றதால் இவரும் டா என்று சொல்லி முடித்திருக்கிறார்.

கம்பர் கேட்ட கேள்வி இது தான்.

ஒரு காலடீ.. நாலிலைப் பந்தலடீ..

அதாவது ஒரு கால் என்பது 3 அங்குலம். அந்த அளவில் உள்ள தண்டின் மேல், பந்தல் போன்ற அமைப்பில் நான்கு இலைகள் இருக்கும். அதைத் தான் கேட்டுள்ளார் கம்பர்...

# குளியலை நாடாத 'ஹிம்பா' பெண்கள்

"ஹிம்பா" (Himba) என்ற இனத்தவர்கள் பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா? இவர்களுடைய மொழியில் இந்தச் சொல் "பிச்சைக்காரன்" என்று பொருள்படுகிறதாம். பயிர் பச்சைகளை விளைவிக்க நிலத்தையும், மேய்ப்பதற்கு கால்நடைகளையும் தேடி அலைந்த ஒரு நாடோடிக் கூட்டம் என்பதால், இவர்களுக்கு இப்படி ஒரு பெயர் கிடைத்தது என்கிறார்கள்.

இவர்கள் பற்றிய ஆச்சர்யமான தகவல் என்னவென்றால், இவர்கள் பல ரகக் கற்களைப் பொடிசெய்து களிமண், பட்டருடன் கலக்கிறார்கள். பின்பு புகையூட்டி, இதை இலேசாகச் சூடாக்குகிறார்கள். இதையே உடம்பில் பூசிக் கொள்கிறார்கள் இங்குள்ள பெண்கள்.

தம் உடலில் இவர்கள் பூசிக் கொள்ளும் செந்நிற களிமண் கலவை, சூரிய கதிர்களின் தாக்கத்தை தடுப்பதுடன், தோலை ஈரலிப்போடும், துப்பரவாகவும் வைத்திருக்கவும் உதவுகின்றது என்பதோடு, உடம்பில் உரோமம் வளராது தடுக்கவும் கைகொடுக்கின்கிறது என்கிறார்கள். நமீபியா என்ற தென் ஆபிரிக்க நாட்டில் வாழும் இவர்கள், பல விநோதமான பழக்கவழக்கங்களை கடைபிடிக்கிறார்கள். அதில், பெண்கள் முடிசூடிக் கொள்வதும் ஒன்று.

மேலும், தன் சுகாதாரத்தை தானே கவனித்துக் கொள்வேன் என்ற நிலை ஒரு பெண்ணுக்கு வந்ததும், களிமண் கலவையை இந்த இனப் பெண்கள் தம் உடம்பில் பூசிக் கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள்.

இவர்களது பிரதான உணவே சோளக் கஞ்சிதான். தண்ணீரை கொதிக்க வைப்பார்கள். அதற்குள் தேவைக்கேற்றவாறு சோள மாவைக் கொட்டுவார்கள். கம்பால் கிளறி விட்டால், சோளக் களி (கஞ்சி) தயார். பரிமாறும்போது இலேசாக எண்ணெய்



சேர்ப்பதுண்டு. மிக அரிதாக, திருமணம் போன்ற வைபவ நேரங்களில், இந்தக் களியுடன் மாமிசம் சேர்த்து உண்ணப்படுவதுண்டு. அந்தவகையில், காடு நிறைய விலங்குகள் இருந்தும், அரிதாகவே மாமிசத்தை உண்ணும் ஒரு அபூர்வ இனத்தவர் இவர்கள்.

மேலும், இந்த இனப் பெண்களின் உடம்பு தண்ணீரையே காண்பதில்லை என்பது ஒரு கலாசார விநோதம். பெண்கள் தங்கள் உடம்பை தண்ணீரால் கழுவிக் கொள்ள அனுமதியில்லை. ஆடைகளையும்தான். கடும் வறட்சியை சந்தித்ததால், இவர்களுக்கு சரித்திரம் கற்றுத் தந்த பாடம் இது.

தன் உடல் சுகாதாரத்தைப் பேண, தினமும் "புகையில் நீராடுவது" இவர்கள் வழமை. ஒரு கிண்ணத்தில் கனன்று கொண்டிருக்கும் கரித்துண்டுகளின் மீது சில மூலிகை இலைகளையும், சிறு சுள்ளிகளையும் இட்டு புகையை உருவாக்குவார்கள்.

பின்பு குனிந்து, தமது உடலை புகைக்கு நேரே பிடிப்பார்கள். உடல் வியர்க்கும். தமது உடலை ஒரு போர்வையால் மூடிக்கொண்டு இதைச் செய்யும்போது, உடல் நன்றாய் வியர்த்துக் கொட்டும். இந்த வியர்வைக் குளியல்தான் இவர்களது குளியல் என்பது ஆச்சர்யமான உண்மை.

# மூன்று மாதங்கள் மட்டும் மழைக்காடாக மாறும் அதிசய பாலைவனம்

ஓமானில் மூன்று மாதங்கள் மட்டும் மழைக்காடாக மாறும் பாலைவனம் ஒன்று உள்ளது பற்றி அறிவீர்களா?

மத்திய கிழக்கு நாடுகள் பெரும்பாலும் பாலைவனம் சூழ்ந்தவை என்பது பலரும் அறிந்த விடயம். ஓமானில் உள்ள சலாலா என்னும் பகுதி பாலைவனம் திடீரென பசுமையான மழைக்காடாக மாறிவிடுகிறது.

ஓர் ஆண்டுக்கு மூன்று மாதம் மட்டும் பாலைவனம் மழைக்காடாக மாறுகிறதென்றால் நம்ப முடியாமல்தான் இருக்கும். ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும். அங்கு ஏரிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் உருவாகின்றன. வெப்பநிலை குறைகிறது. இந்த நிகழ்வை "சலாலா கரீஃப்" (Salalah Khareef) அல்லது சலாலா பருவமழை என்று அழைக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜுன்

3 அடி தூரத்திலிருக்கும் பொருளைக் கூட பார்க்க முடியாமல் இருக்குமாம்.

ஒட்டகங்கள் மட்டுமின்றி பூச்சி இனங்கள், பாம்புகள், சிலந்திகள் மற்றும் பாலூட்டிகளுக்கும் இது இருப்பிடமாக திகழ்கிறது. கடற்கரையை ஒட்டி இருக்கும் இந்த மழைக்காடு கடலோரமாக 250 கிலோமீற்றர் வரை நீண்டிருக்கிறது. கடற்கரையில் இருந்து 5 முதல் 10 கிலோமீற்றர் வரை அகலமான நிலப்பரப்புகளைக் கொண்டிருக்கிறது.சலாலா பகுதியில் ஜிப்பாலி என்ற மக்கள் பல நூற்றாண்டு-களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தான் சலாலாவின் பூர்வகுடிகள்.

இந்த பூர்வக்குடி மக்கள் தங்களது வாழ்வாதாரத்துக்கு இங்கு வளரும் அனோஜெய்சஸ் என்ற மரத்தைத்தான் பெருமளவில் நம்பியிருக்கின்றனர். இந்த மரம் இவர்களுக்கு விறகு



முதல் செப்டம்பர் வரை பெய்யும் பருவமழையால் இந்த நிகழ்வு ஏற்படுகிறது. இங்கிருந்து 50 கிலோமீற்றர் கடந்து சென்றால் மழை இல்லாமல் பாலைவனம் 50 டிகிரி செல்சியஸில் சுட்டெரிக்கும். இந்த இரண்டு பகுதிகளும் ஒரே நாட்டில் இருக்கின்றன என்பதையே நம்பமுடியாமல் இருக்கும்.

இந்த மழைக்காட்டில் மரங்கள் புல்வெளிகள் எல்லாம் உருவாகிவிடும். ஒட்டகங்களுக்கு இங்கு உருவாகும் நீர்நிலைகள் சொர்க்கம் போல இருக்கும். அத்துடன் இங்கு நல்ல பனியும் சூழ்ந்துவிடும். சில நேரங்களில்

எரிக்கவும், பொருட்கள் செய்யவும் ஏன் மூலிகை மருந்தாகக் கூட பயன்படுகிறது.

சலாலாவில் தான் புகழ்பெற்ற சாம்பிராணி மரங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

உலகிலேயே ஆண்டில் 9 மாதங்கள் வறண்ட பாலைநிலமாகவும் 3 மாதங்கள் மட்டும் ஈரப்பதம் நிறைந்த பனி சூழ்ந்த பசுமையான வெப்பமண்டல காடாகவும் இருக்கும் இடம் இதுவேயாகும்.

# புகழின் நாயகன் 'எம்.ஜி.ஆர்'

எம்.ஜி.ஆர். முதல்வர் ஆன பின் ஒரு நாள், மலை என குவிந்திருந்த அவருக்கு வந்த கடிதங்களில் ஒன்றை எடுக்கிறார். காரில் போய் கொண்டே படிக்கிறார். அது ஒரு திருமண பத்திரிகை. அந்த திருமண பத்திரிகையில் எந்த ஒரு இடத்திலும் கொடுத்தவர் பற்றிய எந்த விபரமும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. உதவியும் கேட்டிருக்கவில்லை. கலந்து கொள்ளும்படி கோரிக்கையும் இல்லை.

மனதில் ஏதோ தோன்றிய எம்ஜியார் பிறகு தன் இரகசிய பொலிஸ் நண்பர் மற்றும் ஒரு கட்சிக்காரரை அழைத்து, இந்த பத்திரிகை அனுப்பியது யார், அவர் எங்கு இருக்கிறார் என்ற விபரங்களை சேகரிக்க சொல்கிறார். பத்திரிகையில் இருந்த முகவரி கொண்டு பார்த்ததில் அவர் ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளி என்று தெரியவருகின்றது.

அவர் செருப்பு தைக்கும் உபகரணங்களுடன் சாமி படங்கள் கூட இல்லாமல் அந்த பெட்டியின் மேல் எம்.ஜி.ஆரின் புகைப்படம் மட்டும் ஒட்டப்பட்டிருந்தது பற்றியும் எஜ்.ஜி.ஆருக்குத் தெரியவருகின்றது. அந்தத் தொழிலாளியின் மகள் திருமணம் பற்றி தனக்கு தெரிய வேண்டும். ஆனால் அதற்கு எந்த உதவியும் கேட்காத அந்த உண்மை தொண்டனை நினைத்து உருகுகிறார்.

திருமண நாளும் வந்தது. 9.00 மணிக்கு முகூர்த்தம். 8.45 மணி அளவில் பொலிஸார் அணிவகுப்பு அந்த ஏழை தொழிலாளி வீட்டு முன்னால்.. மணமகன் தாலியை கையில் எடுக்கும் நேரத்துக்கு சில நிமிடங்கள் முன்னால் வந்து இறங்குகிறார் எம்.ஜி.ஆர்.

கண்கள் கலங்கி இதயம் நொறுங்கி நின்ற தொண்டனுக்கு அள்ளி கொடுத்து விட்டு நீ மட்டும்தான் சொல்லாமல்



கொள்ளாமல் செய்வாயா நானும் கூட தான் என்று காலை உணவை அங்கே முடித்து கொண்டு புறப்படுகிறார் எம்.ஜி.ஆர். இந்த நிகழ்வு, அங்கிருந்தவர்கள் அனைவரையும் புல்லரிக்க செய்தது.

# பிரமாண்ட கை பெருவிரல்

இங்கு நாம் காண்பது லே பௌஸ் (Le Pouce) என்னும் ஓர் அதிசய பிரமாண்ட கை பெருவிரல். இது ஒரு வெண்கல சிற்பமாகும்.

'லே பௌஸ் என்றால்' பிரெஞ்சு மொழியில் கை பெருவிரல் என்று அர்த்தம். 40 அடி உயர மிக்க இந்தக் கை பெருவிரல் பிரான்ஸ் தலைநகர் பெரிஸின் மத்திய மற்றும் சறுசுறுப்பான பகுதியில் அமைந்துள்ளது.

இந்த பிரமாண்ட பெருவிரல் சிற்பத்தை கலைஞர் சேஸர் பல்தாச்சின் (César Baldaccin) என்பவர் 1965ஆம் ஆண்டில் வடிவமைத்தார்.

சிறு சிறு பொருட்களை பெரிய அளவில் அமைப்பதில் ஆர்வமிக்க இந்தக் கலைஞரின் திறமையை வெளிக்காட்டுவதில் இந்தக் கை பெருவிரல் வெண்கல சிற்பம் ஒரு சிறந்த அடையாளச் சின்னமாக விளங்குகிறது.

இவரின் கைவண்ணத்தில் உருவான இன்னும் பல விசித்திரமான சிற்பங்களை பிரான்ஸில் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றதாம்.

நல் அதிஷ்டத்தின் சைகை என்று வர்ணிக்கப்படும் இந்த சிற்பம் சர்வதேச அளவிலும் பெயர்பெற்ற ஒன்றாக இருப்பதால் இதனை பார்த்து இரசிக்க ஏராளமான மக்கள் வருகை தருகின்றனராம்.



# சுத்தமான சமையல் அறை வேண்டுமா?



● சமையல் அறையில் பாத்திரங்கள் கழுவும் எப்போதும் தண்ணீர் படும் இடம் என்பதால், பாசியும் அழுக்கும் படிந்திருக்கும். இதனால், ஒருவித நாற்றமும் கிளம்பும். இதைப் போக்க சிங்க் சுவர்களில், கிளீனரை ஊற்றி நன்றாகத் தேய்த்துக் கழுவவும். அதன் பின் ஒரு பஞ்சு உருண்டையை சிங்கினுள் போட்டு வைத்தால் கரப்பான் போன்ற பூச்சித் தொல்லையை தவிர்க்க முடியும்.

● சமையல் அறைக் குப்பைக் கூடையை சிங்கிற்கு கீழ் வைக்கலாம். மூடும் வசதியுடைய கூடை நல்லது. இந்தக் குப்பைக் கூடையில் இருந்து கிளம்பும் நாற்றத்தைத் தடுக்க ஒரு சிறிய கிண்ணத்தில் பேக்கிங் சோடாவைக் கொட்டி, கூடைக்குப் பக்கத்திலேயே வைப்பது பலன் தரும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பேக்கிங் சோடாவை மாற்றினால் போதும்.

● பாத்திரம் துலக்கப் பயன்படுத்தும் 'ஸ்பொன்ச்', கிருமிகள் தங்கும் இடம். அதன் ஒரு சதுர இன்ச் பரப்பிலேயே இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்டீரியாக்கள் குடியிருக்கும். ஸ்பொன்ச்சில் உள்ள ஈரப்பதத்தால் வயிற்றுப் போக்கு மற்றும் வயிற்று வலியை உருவாக்கும் கிருமிகள் அதில் உருவாகலாம். இதைத் தவிர்க்க வாரம் ஒருமுறை இந்த ஸ்பொன்ச்சை மாற்றிவிட வேண்டும். அல்லது ப்ளீச்சிங் தூள் கலந்த வெந்நீரில் 15 நிமிடங்கள் ஊற வைத்து அலசி எடுத்தால், கிருமிகள் ஒழிந்துவிடும்.

● கேஸ் அடுப்பை எண்ணெய்ப் பிசுக்கு இல்லாமல் சுத்தமாக வைத்திருக்க, அடுப்பிலும் சமையல் மேடையிலும் திரவ சோப்பை ஊற்றி நன்கு தேய்த்து ஊறவிட வேண்டும். அதன் பின் தண்ணீர் ஊற்றி சுத்தமாகத் துடைத்தால், அடுப்பு, மேடை இரண்டுமே பளிச் பளிச்.

● சமையல் மேடையின் எண்ணெய் பிசுக்கை போக்க கடலைமாவுடன் தண்ணீர் சேர்த்து சில நிமிடங்கள் ஊற வைத்து கழுவினால் பிசுபிசுப்பு போய்விடும்.

# செய்து பாருங்கள்

# தக்காளி பக்கோடா



**தேவையான பொருட்கள்:**

- தக்காளி – 2
- கடலை மா – 1 கோப்பை
- பச்சரிசி மா – 1/2 கோப்பை
- மஞ்சள் தூள்
- மிளகாய் தூள் – 1 தேக்கரண்டி
- ஓமம் – 1/2 தேக்கரண்டி
- பெருங்காயத் தூள் – 1/4 தேக்கரண்டி
- உப்பு – தேவையான அளவு
- எண்ணெய்

**செய்முறை:**

- முதலில் தக்காளியை, மென்மையாக அரைத்துக் கொள்ளவும்.
- பின் ஒரு பாத்திரத்தில் வடிகட்டியை வைத்து, அதில் அரைத்த தக்காளியை ஊற்றி வடிகட்டி சாறு எடுத்துக் கொள்ளவும்.
- பின்பு அதில் கடலை மா, பச்சரிசி மா, மஞ்சள் தூள், மிளகாய் தூள் சேர்த்து கொள்ளவும்.
- அடுத்து அதில் ஓமத்தை கையால் நசுக்கி சேர்த்து, அதனுடன் பெருங்காயத் தூள், உப்பு சேர்த்து, 2 மேசக்கரண்டி சூடான எண்ணெய் ஊற்றி, கரண்டியால் நன்கு கிளறும். பொறுக்கும் சூட்டிற்கு வந்ததும், கைகளால் மாவை நன்கு மென்மையாக பிசையவும்.
- இறுதியாக, எண்ணெய் சூடானதும், அதில் இந்த மாவை முறுக்கு அச்சில் பிழிந்து விட்டு, முன்னும், பின்னும் நன்கு வேக வைத்து எடுக்கவும்.
- இப்போது, சுவையான தக்காளி ரிப்பன் பக்கோடா தயார்.

மனிதி

# குத்துச்சண்டை நாயகி இந்துகாதேவி கணேஸ்

மனதை வென்ற மங்கையர்



குத்துச்சண்டை சர்வதேச போட்டியில், இலங்கை சார்பில் முதலிடம் பெற்ற தங்க மங்கையான இந்துகாதேவி கணேஸ் பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

வவுனியாவில் பிறந்து முல்லைத்தீவில் கரிப்பட்டமுறிப்பு எனும் கிராமத்திற்கு குடியேறிய இவர், கருவிலேயே தந்தையை இழந்தவர். தாயார் இவர் குழந்தையாக இருக்கும் போதே, வேலைக்காக வெளிநாட்டுக்குச் சென்றதால், தாத்தா, பாட்டியிடமே வளர்ந்துள்ளார். பெற்றோர் அருகில் இல்லாமல் வளர்ந்ததால், சிறுவயதிலிருந்தே பல சவால்களுக்கு முகங்கொடுத்த இவருக்கு, எப்படியும் பிறர் தன்னை திரும்பிப் பார்க்கும் சாதனையாளராக மாறவேண்டும் என்று ஆழமாக மனதில் பதிந்தது. அதனால், சிறுவயது முதலே வெற்றிக்காக கடுமையாக உழைத்தார். அந்தவகையில், அவரின் விடாமுயற்சி, அவரை இளம் வயதிலேயே சாதனையாளராகவும் மாற்றியது. பாடசாலையில் நெடுந்தூர ஓட்ட வீராங்கனையாக அறியப்பட்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே குத்துச்சண்டைப் போட்டிகளிலிலும் பங்குபற்றினார். நாளுக்கு நாள் குத்துச் சண்டையில் இவருக்கு ஆர்வம் அதிகரித்துக் கொண்டே போனது. இதனால், குத்துச்சண்டையில் முழுமூச்சாக ஈடுபட்ட இந்துகா தேவி, 2018ஆம் ஆண்டு "MAS Intimates - Linea Clothing" ஆடைத் தொழிற்சாலையினரின் அனுசரணையில் இரண்டு வருடங்கள் குத்துச்சண்டைப் பயிற்சி பெற்று, பல உள்நாட்டு போட்டிகளிலும் பங்குபற்றினார். அதன் பின்பு கொரோனாவால், ஒன்றரை வருடங்கள் முடங்கியிருந்த இவருக்கு, குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர் பிரசாத் விக்கிரமசிங்கவின் மூலம், சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு கிட்டியது.

இந்நிலையில், பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியொன்றில் (Kickboxing) இந்துகாதேவியுடன் சேர்த்து, மொத்தமாக பன்னிரண்டு பேர் இலங்கை சார்பில் சென்றிருந்தனர். இதில் இவருடன் சேர்த்து இருவர் மாத்திரமே பெண்கள் என்பதுடன், இந்துகாதேவி மாத்திரமே தமிழர் என்பது கூடுதல் சிறப்பு.



அங்கு நடைபெற்ற 'சவெட்' கைக்குத்துச் சண்டை போட்டியில் (பிரெஞ்சு தற்காப்புகலை வடிவம்) 50 – 55 கிலோகிராம் எடைப் போட்டியில் எதிர்த்து களமாடி சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கத்தை வென்ற இந்துகாதேவி, இந்த வெற்றிக்குப் பின்னர், தன்னை ஒரு பயிற்றுவிப்பாளராக தரமுயர்த்திக் கொண்டார். ஒரு குத்துச்சண்டைப் பயிற்சி நிலையத்தை அமைத்து நிறைய மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்பதே இவரின் மிகப்பெரிய கனவாகும். குறிப்பாக, விளையாட்டில் சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டுமென்பதே தன்னுடைய ஆதங்கமெனக் குறிப்பிடும் இந்துகாதேவி, ஒரு பெண்ணால் சாதிக்க முடியாத ஒன்று உலகில் இல்லை என மார்தட்டி சொல்கிறார். அந்தவகையில், மனதைவென்ற மங்கையருள் ஒருவரான இந்துகாதேவி கணேஸ், ஆண்களுக்கு மட்டுமே உரியது என்று பெண்கள் தயங்கக் கூடிய இதுபோன்ற துறைகளில் சாதிக்கத்துடிக்கும் பெண்களுக்கு ஓர் சிறந்த முன்னோடி என்றால் மிகையாகாது.

# அடடா!




உருளைக் கிழங்குத் தோலில் விட்டமின் 'சி' உள்ளது. இது கண்களுக்குக் கீழ் இருக்கும் கருவளையங்களை சீர் செய்யும். இத்தோலை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து குளிர்ந்தவுடன் கண்களைச் சுற்றி 15 நிமிடங்களுக்கு வைத்தால் கண்களுக்கு குளிச்சியை அளிப்பதுடன் கண்கள் பொலிவுடனும் காணப்படும்.



வாழைப்பழத்தோலை பற்களின் மீது தேய்த்து வந்தால் பற்கள் பளிச்சென்று வெண்மையாக மாறிவிடும்.



தோடம்பழம் மற்றும் எலுமிச்சைத் தோலை ஜன்னல்கள் மற்றும் கதவின் ஓரங்களில் வைக்க கரப்பான் மற்றும் பூச்சிகள் வராமல் தடுக்கலாம். இந்த பழத் தோலை குளிக்கும் நீரில் (வெதுவெதுப்பான) சிறிது நேரம் ஊறவைக்கவும். பிறகு அந்த நீரில் குளித்தால், சருமம் பொலிவுடனும் நறுமணத்துடனும் இருக்கும்.



பால் அல்லது கஞ்சி ஆறினால் மேலே ஆடை படியும். இதற்கு, இலேசாக தண்ணீர் தெளித்து வைத்தால் ஆடை படியாது.



தோசை மா புளித்துப் போனால், அதில் அதிக அளவு தண்ணீர் ஊற்ற வேண்டும். சிறிது நேரம் கழித்து தண்ணீர் மேலே நிற்கும். அதை வடித்துவிட்டு தோசை ஊற்றினால் சுவையாக இருக்கும்.

# பளபளப்பான கூந்தலுக்கு உதவும் தயிர்...!

கூந்தல் பராமரிப்பு





✱ புரோபயோடிக்குகள், விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்த தயிர், தலைமுடியை ஆரோக்கியமாகவும், பட்டு போலவும், பளபளப்பாகவும் மாற்றும்.

✱ கூந்தலில் தயிர் தடவுவதால் கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கவும், கூந்தலை ஈரப்பதமாக்கவும், எரிச்சலூட்டும் உச்சந்தலையை குணப்படுத்தவும் முடியும்.

✱ தயிரை கண்டிஷனராகவோ, மாஸ்க்காகவோ அல்லது சிகிச்சையாகவோ பயன்படுத்தினாலும், எந்தவொரு கூந்தல் பராமரிப்பு முறைக்கும் தயிர் ஒரு அருமையான மாற்றுப் பொருளாகும்.

✱ தயிர் விட்டமின் 'பி' 5 இன் அருமையான மூலமாகும், இது உரோமக் கால்களுக்கு ஊட்டமளிக்கவும், உச்சந்தலையில் இரத்த ஓட்டத்தை ஊக்குவிக்கவும் உதவுகிறது. மேலும், தயிரில் உள்ள புரதம் கூந்தல் இழைகளை வலுப்படுத்தவும், கூந்தல் உடைந்து உதிர்வதையும் தடுக்கிறது.

✱ தயிரில் உள்ள லொக்டிக் அமிலம், கூந்தலில் ஈரப்பதத்தைத் தக்கவைக்க உதவும், இதிலுள்ள இயற்கை ஈரப்பதம், இழைகளை ஈரப்பதமாக்குகிறது. இது முடியின் இயற்கையான பளபளப்பு மற்றும் மென்மையை மீட்டெடுக்க உதவும்.




# யார் அந்த ஆறு ஔவையர்கள் ?

நிரூபணங்களுடன், ஆகக்குறைந்தது ஆறு "ஔவையர்"– ஔவையார்களாக இருந்ததாகக் கூறப்படுகிறது. முதலாவது சங்ககால ஔவை, தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி காலத்தவள். கபிலர், பரணர் போன்ற பெரும் புலவர்களுடன் வெள்ளி வீதியார் எனும் புலவையும் (பெண் புலவர்) இவர் காலத்தவராம்.

பதினெண் மேல் கணக்கின், எட்டுத்தொகை யின்,– அகனூறு, புறநானாறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய பனுவல்களில் இந்த ஔவையின் பிரபந்தங்கள் உள்ளன .முழுச்சங்க இலக்கியங்களிலும் ஒன்பதாவதாக கூடிய பாடல்களை இயற்றியவர் இவரேயாவார்.

சங்க ஔவை கிழவிக்கோலத்தவள் அல்லள், இளமை ததும்பும் எழில் கோலத்தவளே”



அதுவும், கடைச்சங்க ஐங்குறுநூறு பிரபந்தங்களை ஆளுக்கு நூறாக ஐந்து புலவர்மார் பாடியதனால் அவர்கள் பாடல் எண்ணிக்கை கூடிய காரணத்தாலேதான். அதியமான் கொடுத்த சாஸ்வத ஔஷ தமான நீளாயுள் நெல்லிக்கனியை உண்ட புலவை, சங்க ஔவை என்றும் கூறப்படுகிறது.

அடுத்து மிக முக்கியமானது: சங்க ஔவை கிழவிக்கோலத்தவள் அல்லள் என்பது. இளமை ததும்பும் எழில் கோலத்தவளே, முதலாவது அதியமான் காலத்து ஔவை என்பதை பறை சாற்றும் சங்ககால பாடல்கள் உள்ளன. (முருகனிடம் சுட்ட சுடாத நாவற்பழம் வாங்கிய, மற்றும் கள் அருந்தும் ஔவை, "எந்த ஔவை" என்பது தெரியாது.)

பிற்பட்ட காலங்களில் வந்த எல்லா ஔவையார்களையும் முதுகோலத்தில் வெளியிட்டமை பிறகு வந்தவர்களின் கோளாறு என்றே கருதமுடிகிறது.. திருவள்ளுவர், தெய்வப்படங்கள் (பண்டைய சிற்ப– விக்கிரஹங்கள் அல்ல) உட்பட எல்லாமே பின் நாளில் வந்தவர்களால் தம் விருப்புக்கேற்ப மாற்றப்பட்டவையே. இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையே– நல்வழி, "மூதுரை", கொன்றை வேந்தன் ஆகியவற்றை இயற்றியவராவார். கடைசி ஔவை, 17ஆம் நூற்றாண்டு காலத்தவர் எனக் கூறப்படுகிறது.

"ஔவா" என்ற மூலத்திலிருந்து வந்த ஔவை என்றால் மூதாட்டி "என்றும்" பொருள்படும். தகடூர் அதியமான் (நெடுமான் அஞ்சியை) அவன் மகன் பொருட்டெழினி) படு உயர்வாய் புகழ்ந்து பாடிய ஔவையே,– தகடூர் எறிந்த சேரலாதன் இரும்பொறையையும் புகழ்ந்தவர். வாஸ்தவத்தில்,– சங்க ஔவை சேர, சோழ, பாண்டியராய மூவேந்தரையும் மேலுயர்த்தி பாடியுள்ளார். இக்காலத்தில். மூவேந்தரும் கொடூரமாக இரத்தக்களரிப் போரில் மாண்டு மாண்டு ஈடுபட்டமை யாண்டு நோக்கத்தக்கது.

"பரிசுக்கு புளுகல் மனித மரபு" சங்க ஔவை, "தேற்றா ஈகை" என்பது பற்றி பாடியுள்ளார். தேவையான, முக்கியமான ஒன்றைக்கேட்க, பகட்டுக்காக தேவையற்ற பெரு பொருளை ஈவது. (ஔவையார் கீரைக்கறியுடன் உண்ண, அரிசிக்கான நெல் கேட்க "பெருவள்ளல்" ஒருவன் தனது "தகுதிக்கேற்ப" யானை ஒன்றை பரிசளித்தானாம்.)

இடைக்கால ஔவையொருவர் பாடியதாகக்கூறப்படும் "அசதிக்கோவை" என்ற பாடல் தொகுப்பு துண்டு துண்டாகவே கிடைத்துள்ளதால், இதை எவரும் கணக்கிலெடு ப்பதில்லை. இது சரியன்று.

மிக முக்கிய இடத்தினை வகிக்கும் , சங்க ஔவை, "மெய்புகு அன்ன கைவர் முயக்கம்" என்றெல்லாம் பாடியிருந்தார். இது, முழுக்க முழுக்க "காமக்கலாம்" (உடலுறவு முயங்கல்/ SEXUAL INTERCOURSE) சம்பந்தப்பட்டது. "கூடி முயங்கப்பெறின்." என்று திருக்குறளை கடைசியாக முடித்த "ஒரு" வள்ளுவனின் காமத்துப்பால் விஷ யங்களையும் ஔவை பாடியுள்ளார். இது, சங்க ஔவை, லாவண்யம் பொருந்திய ஒரு வாலையாக இருந்தமையாலேயே இப்படி பாடியிருக்கக் கூடும் என்று கொள்ள முடிகிறது. ஆறில் எந்த ஔவையாகட்டும் ஔவையாரை விஞ்சிய பெண்ணியர்கள் (FEMINISTS) இல்லை என்பேன்.

- சிறீசு

# தமிழின் முதல் நாவலாசிரியர்: மாயூரம் வேதநாயகம் பிள்ளை

## (1826 - 1889)

தமிழ் புலவராகவும் நீதியரசராகவும் திகழ்ந்த மாயூரம் வேதநாயகம் தமிழ் உரைநடையை வளம் பெறச் செய்த முன்னோடிகளில் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். வள்ளலார் மற்றும் மீனாட்சி சுந்தரத்தின் நண்பர் என்பதுடன் கலைஞர் விஜய் அன்டனியின் பாட்டனாரும் ஆவார்.





இவர் மாயவரத் தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது தமிழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி. இவரது கட்டுரைகள், பெண் கல்வி, தாய்மொழிப் பற்று, ஒற்றுமை உணர்வு, புதிய சிந்தனைகள், நீதி நெறிகள் என பல கருப்பொருட்களை கொண்டவை. நீதிமன்றத் தீர்ப்புகளை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்து "சித்தாந்த சங்கிரகம்" எனும் நூலாக வெளியிட்டவர். 200 இசைப்பாடல்கள் அடங்கிய சர்வ சமயக் கீர்த்தனைகள் முதலான படைப்புகளையும் வெளியிட்டுள் ளார் . தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர் எனும் பெருமையும் இவருக்கு உண்டு.



1876-1878 இல் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது தமது சொத்துக்கள் அனைத்தையும் பாமர மக்களுக்கு கொடையாக அளித்ததால் "நீயே புருஷ மேரு" என்று கோபாலகிருஷ்ண பாரதியாரால் பாராட்டப் பெற்றவர் என்ற பெருமையையும் கொண்டவரே இந்த புலவர் மாயூரம் வேதநாயகம் ஆவார்.

# திக்குவல்லை கமால் எழுதிய 'பாதை தெரியாத பயணம்'

தென்னிலங்கையில் முகிழ்ந்த நாடறிந்த எழுத்தாளரே திக்குவல்லை கமால். இவர் இலக்கியத்தின் சகலதுறைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். திக்குவல்லை கமாலின் ஏனைய சிறுகதைத் தொகுதிகள் போலவே




அவரது நாவல்களும் என்னில் அதிக தாக்கம் செலுத்தியுள்ளன. திக்குவல்லை கமாலின் படைப்புகள் வாசகர்களினால் மிகவும் ஆர்வமாக வாசிக்கப்படுகின்றன என்பது மறுப்பதற்கில்லை. அதேபோல் அப்படைப்புகள் பற்றிய விமர்சனங்களையும் அவ்வப்போது காணக் கிடைப்பது இலக்கிய வாசகர்களுக்கு மிகுந்த ஆர்வத்தைத் தூண்டி அவரது படைப்புகளை வாசிக்க வேண்டும் என்கின்ற உந்துதலை ஏற்படுத்துகின்றன என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.

திக்குவல்லை கமால் தமது படைப்புகளின் கதாபாத்திரங்களோடு ஐக்கியமாகிய நிலையிலேயே படைப்புகளை முன்வைக்கின்றார். இதுவே இவரது படைப்புகளின் வெற்றிக்குக் காரணியாக அமைகின்றது. 'தை தெரியாத பயணம்' என்ற நாவலை வாசிக்கும் போது புதிதாக வாசிக்கின்ற ஒரு நாவல் போல் தோன்றவில்லை. பழைய ஞாபகத்தை மீட்டுகின்ற ஒரு இன்பமான அனுபவமே கிடைத்தது.

பாடசாலைக் காலத்தை ஞாபகப்படுத்தி இரசனையாக எழுதப்பட்டுள்ள இந்த நாவல் அந்தக் காலத்தில் தினகரன் நாளிதழில் தொடராக வெளிவந்துள்ளது. மட்டுமல்லாமல் அக்காலங்களில் உயர் வகுப்பில் படித்த மாணவர்களையும் பல்கலைக்கழகத்தில் படித்த மாணவர்களையும் இந்நாவல் பெரிதும் கவர்ந்துள்ளது. கால் நூற்றாண்டுக்கும் மேலான நூலாசிரியரின் ஆசிரிய வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமே இந்த நாவலை மிகவும் சிறப்பாக நகர்த்திச் செல்ல ஏதுவாக அமைந்துள்ளது. நாவலாசிரியர் இன்னும் பல நூல்களை வெளியிட்டு இலக்கிய உலகுக்கு சிறப்பான பங்களிப்புகளை செய்வார் என எதிர்பார்க்கலாம்.

- வெலிகம ரிம்ஸா முஹம்மத்


# வளையணிந்த என் கைகளைப் பற்றி நடந்து செல்வாயா?

(கடந்த வாரத் தொடர்ச்சி )

தலைவன் பகைவயிற் பிரிந்து போர் முடிந்தபின் திரும்பி வருகிறான், தலைவி வீட்டிலிருக்கிறாள். வருகின்ற போது முல்லை நிலத்தின் கார்கால இயற்கை காட்டப்படுகிறது. (அகம்:154) தலைவியிடம் திரும்பி வருகின்ற தலைவனின் மனநிலையும் காட்டுவழியின் வர்ணனையும் மனதை வசீகரிக்கின்றன. அடைமழை பொழிதலாற் பயன் பெற்ற முல்லை நிலத்திலே மழைநீர் தேங்கிய குட்டைகளில் பிளந்த வாயையுடைய தேரைகள் சிறுபல்லியம் போல் ஒலிக்கின்றன. குறும் பற்றைகளாக இருக்கின்ற பிடவஞ்செடிகளின் சிவந்த பூக்கள் நிலத்திலே உதிர்ந்து நிலத்தை அழகு செய்கின்றன.

சினங்கொண்ட அரவின் படம்போல் மேலெழுந்த கோடல் மொட்டுகள் மணங்கமழுமாறு மலர்ந்தன. முறுகிய கொம்பையுடைய ஆண்மான் தன் பெண்மானோடு மகிழ்ச்சியுடன் தங்கியது. இவ்வாறாக கவின்பெற்று அமைந்த பெருவழியிலே குதிரையிலே கட்டப்பட்ட மணிகள் ஒலிக்குமாறு தேரை விரைவாகச் செலுத்துமாறு கூறகிறான் தலைவன். பெண்மையின் சிறப்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும் நம்தலைவியை விரைவில் அடைவோமாக என்று தலைவன் கூறுவதைக் காண்கின்றோம்.இன்னொரு பாடலில் மனதைப்பிழியும் மற்றொரு காட்சி ஒன்று வருகிறது.

"ஐயோ எனின்யான் புலி
அஞ்சுவலே அணைத்தனன் கொளினே
அகன்மார்பு எடுக்கவல்லேன் என்போற்




பெருவிதிர்ப்புறுக நின்னை இன்னாது
உற்ற அறனில் கூற்றம் நிரைவளை
முன்கை பற்றி வரைநிழற்சேர்கம்
நடத்திசிற் சிறிதே."

போர்க்களத்திலே தலைவன் இறந்து விட்டான். மனைவி அவனுடலைக் காண்கிறாள். அங்கே யாருமில்லை. அவளுக்கு கணவன் இறந்ததை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விழுப்புண்ணோடு கிடக்கும் அவனோடு பேசுகிறாள். ஐயோ என்று என்னால் அலறி அழ முடியவில்லை.குரல்கேட்டு புலிகள் வந்துவிடும். உன்னை அணைத்துச் செல்லலாம் என்றால் உன் அகன்ற மார்பை என்னால் தூக்க முடியாது. உன்னை இன்னாது கொன்ற அறமற்ற கூற்றுவன் என்னைப்போல பெருங்கவலையுறட்டும். நீஷ என்னுடைய வளைகொண்ட முன்கையைப்பற்றி என்னோடு நடந்துவருவாயா மலையின் நிழலைச் சென்றடைவோம் (புறம் 255) எனப்பொருள் தருகின்ற வன்பரணர் பாடிய இப்பாடல் போரில் கணவனை இழந்த பெண்களின் துயரத்தை வெளிப்படுத்துகின்றது. பெண்கள் வீட்டில் இருக்க கணவன் வினைவயிற் பிரிந்து தன் ஊரைக் காப்பதற்காக போருக்குச் செல்லும்போது அவன் வரும் வரை மனைவி தன்னையும் காத்து தன்னோடிருக்கும் பிறரையும் காத்து தன் கற்பிலிருந்தும் வழுவாமலிருத்தல் ஒருபுறமிருக்க என்போற் பெருவிதிர்ப்புறுக உன்னை இன்னாது உற்ற அறனில் கூற்றம் என கூற்றுவனுக்குச் சாபமிடும் போரில் கணவனை இழந்த பெண்களின் துயரங்களும் இங்கே வெளிப்படுகின்றன.

அம்மன்கிளி முருகதாஸ்
தகைசால் பேராசிரியர்

# 106 ஆவது வகவக் கவியரங்கின் சிறப்பு நிகழ்வுகள்

வலம்புரி கவிதா வட்டத்தின் 106 ஆவது கவியரங்கு இம்மாதம் 14 ஆம் திகதி காலை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது. மறைந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் நினைவரங்கில் நடைபெற்ற கவியரங்கிற்கு கலாபூஷணம் கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் தலைமைத் தாங்கினார்.

வகவ ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். முஸ்லிம் சேவையின் நாடக உலக ஜாம்பவான் எம். அஷ்ரப்கான் சிறப்பதிதியாக நிகழ்வில் கலந்து கொண்டு வகவ நிகழ்வுகளை கௌரவப்படுத்தினார்.

வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என் நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். வரவேற்புரையை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீனும் நன்றியுரையை பொருளாளர் ஈழகணேஷும் வழங்கினர். அத்துடன் மறைந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் பற்றிய நினைவுகளை இருவரும் சிறப்பாகப் பதிவு செய்தனர்.

அண்மையில் நம்மை விட்டும் பிரிந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம், கவிஞர் வேதாந்தி சேகு இஸ்ஸதீன், கவிஞர் மௌலவி காத்தான்குடி பௌஸ், மீடியா போரம் தலைவர் என்.எம். அமீனின் தாயார், மறைந்த கலைஞர் ஶ்ரீதர் பிச்சையப்பாவின் தாயார் ஆகியோருக்கான மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

106 ஆவது கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்திய கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்ஸை வரவேற்று கவிஞர் பர்ஹத் சித்தீக் கவிதை பாடினார்.

கவியரங்கில் கவிஞர்கள் ஆர். தங்கமணி, இறைஞானக் கவி ரமீஸ், மஸீதா அன்ஸார், எம்.ஆர்.எப். சிபாயா, வாசுகி வாசு, கிண்ணியா அமீர் அலி, அருந்தவம் அருணா, அப்துல்லாஹ் ஷியாமிர், கலேவெல அமீன், ராஜன் நஸிருத்தீன், தாமரைச் செல்வி, சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், எம். எஸ். அப்துல் லதீப், மலாய்கவி டிவாங்ஸோ, பதுளை கபிலகன் ஒகஸ்டீன், தமிழ்த்



தென்றல் அலி அக்பர், தி. ஶ்ரீதரன், எச். பாத்திமா நிஹ்லா, ராஜா நித்திலன். வாழைத்தோட்டம் எம்.வஸீர், சிந்தனைப் பிரியன் முஸம்மில், தெஹியோவிற்ற இரா. சிவராசா, அருந்தவம் அருணா, ஆர். எஸ். ரஸ்மியா ஆகியோர் கவிதை பாடினர்.

எம்.எஸ்.எம். ஜின்னா, அஸீஸ் லக்ஹானா, எம்.ஐ.எஸ். ஹமீத், கலைநிலா சாதிகீன், எஸ்.எச்.எம். இத்ரீஸ், கம்மல்துறை இக்பால், கவிநேசன் நவாஸ், எம்.ஜே. எம். ஜப்ரான், எம்.பீ.எம். சித்தீக், எம். எப். பஸ்மி, எம்.ஐ.எப். ருக்ஷானா போன்றோர் சபையை அலங்கரித்தனர்.




## குறளும் பொருளும்

அதிகாரம் 03: நீத்தார் பெருமை

**குறள் 23: இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு**

பொருள்: நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்

**குறள் 24: உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

பொருள்: மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து யானைகளும் தத்தம் புலன்கள் ஆகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகியவற்றின் மேல் செல்லாமல், அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால் காப்பவன் எல்லாவற்றிலும் சிறந்ததாகிய வீட்டுலகிற்கு ஒருவிதை ஆவான்.

## ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534

# ஸ்பானிய போர்களில் முக்கிய அங்கம் பெற்ற கோட்டை



16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போர்த்துகல்லில் உள்ள எல்வாஸ் நகரில் கட்டப்பட்டது நோசா சென்ஹோரா டா க்ராசா கோட்டை (Nossa Senhora da Graa Castle) ஸ்பெயினின் இரண்டாம் பிலிப் மன்னரின் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட இது, புகழ்பெற்ற இராணுவப் பொறியியலாளரான ஃபிரான்சிஸ்கோ டி அர்ருடா என்பவரால் வடிவமைக்கப்பட்டு 1579ஆம் ஆண்டு தொடங்கி 1592ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது.

ஸ்பெயின் எல்லைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள அதன் அமைவிடம் எல்வாஸ் நகரத்தின் பாதுகாப்பில் ஒரு முக்கிய அங்கமாக அமைந்தது.

அந்தக் கோட்டை, நட்சத்திர வடிவிலான கட்டமைப்பையும், உறுதியான கோட்டைச் சுவர்களையும் கொத்தளங்களையும் கொண்டு வெகு அழகாகத் திகழ்ந்துள்ளது. அக்கால இராணுவக் கட்டடக் கலையைப் பிரதிபலிப்பதோடு, பீரங்கித் தாக்குதலைத் தாங்கக்கூடிய வகையிலும் கட்டப்பட்டுள்ளது. ஸ்பானிய வாரிசுரிமைப் போர் மற்றும் மூவலந்தீவுப் போர் (Penninsula War) உள்ளிட்ட பல்வேறு மோதல்களில் இந்தக் கோட்டை குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்ததைக் காணலாம். 20ஆம் நூற்றாண்டில், இந்தக் கோட்டை நீக்கப்படுவதற்கு முன்பு இராணுவச் சிறைச்சாலையாகச் செயல்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# நயவஞ்சக நரி



ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒரு முறை அது நிறைய உணவுகளை ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தில் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணிற்று நரி.

அதன் எண்ணம் வீண் போகவில்லை. அப்போது, இரண்டு கழுகுகள் அம்மரத்தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

“நரியாரே! நீ இம்மரப் பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?” என்று கேட்டது ஆண் கழுகு.

அதற்கு நரி, “கழுகாரே வாருங்கள். இம்மரப் பொந்தில் பல வருடங்களாக இருக்கிறேன்! ஏன் கேட்கிறீர்?” என்று கேட்டது நரி.

“என் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா என்று ஒரு ஆசை!” என்றது ஆண் கழுகு.

“ரொம்ப இராசியான மரம் இது. முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது! நான் வயதானவன் இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!” என்றது நரி.

ஆண் கழுகும், பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, அவற்றுக்கு நரி காவலாக இருந்தது.

நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு.


சில மாதங்களுக்கு பின்னர், பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. குஞ்சுகள், பெரிதானதும் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருந்தது. அதுபோல் ஒருநாள் நரி, குஞ்கள் அனைத்தையும் கொன்று தின்னது. தீயவர் என்று தெரிந்தும், நரியை நம்பிப் பழகிய கழுகுகள் தம் தவறை எண்ணி வேதனையுற்றன.

**நீதி: யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ள வேண்டும்.**

## வரைந்து பழகுவோம்



## சரியான வழியை கண்டுபிடியுங்கள்



**“எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது”**

**–ஜேம்ஸ் எலன் (James Allen)**



ஜேம்ஸ் எலன் மனதுக்கு ஊக்கம் அளிக்கும் புத்தகங்களையும் கவிதைகளையும் எழுதியமைக்காகவும் தன்னுதவி இயக்கத்தின் முன்னோடியாக இருந்தமைக்காகவும் அறியப்படும் ஓர் ஆங்கில மெய்யியல் எழுத்தாளர் ஆவார். அவருடைய சிறந்த படைப்பான “ஒரு மனிதனின் சிந்தனையின் படி” என்ற நூல் 1903ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது முதலே பெருமளவில் விற்பனையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புது உயிர்



# தேன் குட எறும்புகள் Honeypot ants

உலகின் பல பாகங்களில் எறும்புகளை உணவாகப் பயன்படுத்துகிறார்கள். அந்தவகையில், புவிசார் குறியீடு பெற்ற சிவப்பு எறும்புச் சட்னியில் புரதம், மெக்னீசியம், துத்தநாதம், இரும்புச்சத்து, பொட்டாசியம், கல்சியம், விட்டமின் B-12 ஆகியவை நிறைந்திருப்பதாகக் கூறப்படுகின்றன.

மேலும், மெக்சிகோ மற்றும் தென் கிழக்கு நாடுகளில் எறும்புகள் வறுத்து உண்ணப்படுகின்றன. ‘கேவியர்’ (CAVIAR) எனப்படும் ஒரு வகை மீன் முட்டைகள் தான் உலகிலேயே விலை உயர்ந்த உணவாகக் கருதப்படுகிறது. அது போலவே எறும்பு முட்டைகளும் ஓரளவுக்கு விலை உயர்ந்தவையாக இருக்கின்றன.

அந்தவகையில், ஓர் இனிப்பான இயற்கையின் உருவாக்கம் தான் தேன்குட எறும்புகள். இந்த எறும்புகள் ஐந்து வகைகளாகப் பிரிந்து செயல்படும். அவை ராணி, ராணியின் தனிப்பட்ட வேலையாட்கள், கூட்டைச் சுத்தம் செய்பவை, தேன் கூட்டுப் பையை உருவாக்கிச் சேமிப்பவை மற்றும் வெளியில் சென்று உணவு சேகரிப்பவை ஆகும். வேலையாள் எறும்புகள் தங்களின் வயிற்றில் ஒரு பை போன்ற அமைப்பை உருவாக்கி அதில் தேன் சேகரித்து வைக்கும். அந்தக் குடியிருப்பில் உள்ள மற்ற எறும்புகளும் இந்தத் தேன் குட எறும்புகளுக்கு ஊட்டிவிடுவதன் மூலம் அந்தப் பைகளில் உணவைச் சேகரித்து வைக்கும்.

தேன் கூட்டுப் பைகள் உடைந்து விடாமல் இருக்க நிலத்தில் 5.2 அடி ஆழம் வரை தோண்டப்பட்டு கூடுகள் அமைக்கப்படும். இதன் மூலம் தேன் கூட்டுப் பைகள் இயற்கையாகக் குளிரூட்டப்படுகின்றன. இதனால், வெப்பத்தால் பைகள் உடைந்து போகாமல் காப்பாற்றப்படும் என்பதுடன், உணவும் நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கப்படும்.

இந்தத் தேன் கூட்டுப் பைகள் மணத்தக்காளி அளவில் இருந்து ஒரு சிறிய திராட்சை அளவுக்கு விரிவடையும். ஒரு தேன் கூட்டு எறும்பின் பை உடைந்து விட்டால் கொலனியில் இருக்கும் மற்றொரு எறும்பு தேன் கூட்டுப் பையை உருவாக்கத் தயாராகி விடும். உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது, மாடுகள் அசைபோடுவதற்கு, உண்ட உணவை வயிற்றில் இருந்து வாய்க்குக் கொண்டு வருவது போன்ற முறையில் இந்தத் தேன் கூட்டு எறும்புகள் தேனை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து மற்ற எறும்புகளுக்கு ஊட்டுகின்றன.



எப்பொழுதும் உழைப்புக்கும் ஒற்றுமைக்கும் தான் எறும்புகளை உவமையாகக் கூறுவார்கள், ஆனால், தன் சமூகத்தை ஊட்டி வளர்ப்பதற்கும் எறும்புக்கு ஈடு இணை இல்லை என்றால் அது மிகையல்ல.



பிரணிஷா, தரம் 07, புனித நல்லாயன் மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை.



ம.நேஹனி, தரம் 04, புனித நல்லாயன் கல்லூரி, கொட்டாஞ்சேனை.



ம.ஷீஹா, தரம் 04, றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை.



தஷ்விகா, தரம் 07, புனித நல்லாயன் கல்லூரி, கொட்டாஞ்சேனை.



ஹஸ்வின், தரம் 04, றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை.



## ஹெல்த் டிப்ஸ்



வெந்நீர், நோய்க்கிருமிகளிடம் இருந்து மட்டும் நம்மை பாதுகாப்பதில்லை. இது உணவு செரிமானம், சீரான இரத்த ஓட்டம், மலச்சிக்கல் பிரச்சினை வரை தீர்வுகளைத் தருகிறது. தினமும் வெந்நீர் அருந்தினால் உடல் ஆரோக்கியத்திலும், சருமப் பொலிவிலும் நல்ல மாற்றங்களைக் காணலாம்.




குறட்டையுடன் தூக்கத்தில் மூச்சுத்திணறல், மூச்சு தடைபடுதல், சிரமப்பட்டு மூச்சு விடுதல், இரவு தூக்கம் தடைபட்டு அடிக்கடி விழித்துக் கொள்ளுதல், பகலில் தூக்கக் கலக்கத்திலேயே இருப்பது, உட்கார்ந்து இருக்கும்போதே தூங்குதல் உள்ளிட்ட பிரச்சினைகள் இருந்தால் அதை சாதாரண பிரச்சினையாகக் கடந்துவிடக் கூடாது. அதேபோல் அதிக எண்ணிக்கையில் தலையணை வைத்து உறங்குவதும் இயல்பானது கிடையாது. இவற்றுக்கெல்லாம், உடனே மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்று சிகிச்சை பெற வேண்டும்.



மீன் எண்ணெய்யில் **Eicosapentaenoic Acid (EPA) and Docosahexaenoic Acid (DHA)** என்கிற இரண்டு வகை ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இந்த இரண்டும் குழந்தைகளின் நரம்பியல் மண்டல ஆரோக்கியத்துக்கும், ஐக்யூ முன்னேற்றத்துக்கும் உதவும்.



பொட்டாசியம் குறைபாடு உள்ளவர்கள், ஒரு வேளை உணவுடன் ஒரு வாழைப்பழம் சாப்பிட வேண்டும். குறிப்பாக, உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் வாழைப்பழம் சாப்பிட்டுவந்தால், உடலில் போதுமான பொட்டாசியம் சேர்ந்து, இதயம் சீராக செயல்படும்.



குதிகால் வலி, கீழ் முதுகுவலி, கழுத்துவலி போன்றவை வந்தால் உடனே மருத்துவரிடம் செல்லாதீர்கள். இதற்கு, நாற்காலியும் செருப்பும் கூட காரணமாக இருக்கலாம். அணிந்திருப்பது தரமான செருப்புதானா நாற்காலியில் முதுகு நன்றாகப் படியும்படி அமர்கிறோமா என்பதையெல்லாம் கவனியுங்கள். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை, ஐந்து நிமிடம் சாய்ந்து அமர்ந்து ஓய்வெடுப்பதை வழக்கமாக்குங்கள். இவ்வளவுக்குப் பிறகும் தொல்லை இருந்தால், மருத்துவரிடம் செல்லலாம்.

# ஆயுளை நீட்டிக்கும் தேன்...!



உலகிலேயே அதிக வருடங்கள் கெடாமல் இருக்கின்ற பொருள் தேன் மட்டுமே. ஏறக்குறைய நான்காயிரம் வருடங்களுக்கு முந்தைய பிரமிடுகளில் கண்டெடுக்கப்பெற்ற தேன் கூட கெடாமல் இருந்திருக்கிறது.

- மலைத்தேன், கொம்புத்தேன், பொந்து தேன், புற்றுத் தேன் எனப் பல வகைகள் இருக்கின்றன. இவற்றில், மரப்பொந்திலிருந்து எடுப்பதுதான் சிறப்பான தேன். இதை கொசுவந்தேன் என்பார்கள். இந்தத் தேன்கூட்டைக் கட்டும் தேனீக்கள் மிகச் சிறியவையாக இருப்பதால் இந்தப் பெயர் வந்தது.
- உட்கொண்ட 96 நிமிடங்களில் தேன் உடம்புடன் கலந்துவிடும். நோயாளிகளின் உடலில் சித்த மருந்துகள் சீக்கிரம் உட்கிரகிக்கப்பட வேண்டுமென்றால், அதை தேனுடன் கலந்து தர வேண்டும்.
- வெந்நீரில் தேன் கலந்து அருந்தினால், உடல் எடை குறையும் என்கிறார்கள். குறைந்தபட்சமாக 50 மில்லி தேனுடன் 200 மில்லி வெந்நீர் கலந்து குடித்து வந்தால் மட்டுமே உடல் எடை படிப்படியாகக் குறையும். கூடவே உணவுக் கட்டுப்பாடும் முக்கியம்.
- தலா 30 மில்லி தேனும், எலுமிச்சைச்சாறும் கலந்து, 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு அவ்வப்போது கொடுத்து வந்தால், சளி இளகி வெளியேறும்.
- ஆஸ்துமா பிரச்சினை இருப்பவர்கள், 10 மில்லி தேனுடன் 20 மில்லி சிற்றாமணக்கு எண்ணெய் கலந்து மாலையில் சாப்பிட்டு வந்தால், வயிறு சுத்தமாகும். மூச்சிரைப்பு பிரச்சினையும் கட்டுக்குள் இருக்கும்.
- தேன் எல்லா நோயாளிகளுக்கும் ஏற்றது. நீரிழிவுக்காரர்கள் மட்டும் மருத்துவரைக் கேட்டு, நல்ல தேனை 10 மில்லி முதல் 20 மில்லி வரை சாப்பிடலாம்.
- முதல்நிலை தீப்புண்களுக்கு தேன் சிறந்த மருந்து.
- தொடர்ந்து மூன்று மாதங்களுக்குத் தேன் தடவி வந்தால், கருவளையமும் கரும்புள்ளிகளும் மங்க ஆரம்பிக்கும்.







# இரத்தத்தில் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் அதிகரிக்கப் போகும் 2 பிரச்சினைகள்

## எச்சரிக்கும் ஆய்வு!

தென் கொரியாவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், 36 நபர்களிடமிருந்து சேகரித்த இரத்த மாதிரிகளில் மிக நுண்ணிய பிளாஸ்டிக் துண்டுகள் இருப்பதாகவும், இது இரத்த உறையாமை, மற்றும் உடல் உறுப்புகளில் வீக்கத்தை ஏற்படுத்துவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இதய பிரச்சினைகள், பக்கவாதம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும் என்கிறது அந்த ஆராய்ச்சி.

5 மில்லி மீற்றருக்கும் குறைவாக உள்ள பிளாஸ்டிக் துகள்களே மைக்ரோ பிளாஸ்டிக் என்று அழைக்கப்படுகிறது. இது பொதுவாக பிளாஸ்டிக் கழிவுகள் சிதைவதால் உருவாகிறது. நமது அன்றாட வாழ்க்கையில் பிளாஸ்டிக் கோப்பைகள், மற்றும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படும் பொலித்தீன் பைகள் போன்றவற்றைப் பயன்படுத்தும்போது பிளாஸ்டிக் துகள்கள் நம் உணவில் கலக்கப்படுகிறதாம்.

மேலும், இரத்தம் உறைவதற்கு உதவி செய்யும் ஃபைப்ரினோஜன் (Fibrinogen) என்கிற புரதம், நமது உடலில் காயம்பட்ட இடங்களில் வீக்கம் ஏற்படாமல் இருப்பதற்கும் உதவுகிறது. ஆனால், இந்த ஆராய்ச்சியில், பரிசோதிக்கப்பட்டவர்கள் உடலில் அதிகப்படியான வீக்கம் ஏற்படுவதை கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, அடிபட்டால் இரத்தம் உறையாது, கூடவே இதய நோய்கள், பக்கவாதம் என வாழ்வியல் நோய்களையும் ஏற்படுத்தி விடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த பரிசோதனையின் முடிவுகள் எச்சரிக்கையை காட்டும் வகையில் இருந்தாலும் இன்னும் என்னென்ன உடல் உபாதைகள் ஏற்படும் என்பதற்கான ஆய்வுகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் நமது வாழ்வில் ஒவ்வொரு மூலையிலும் ஊடுருவி விட்டது. இரத்தத்தில் மட்டுமல்லாது, வருங்காலத்தில் உமிழ்நீர், சளி, நுரையீரல், கல்லீரல், தாய்ப்பால், கழிவு என அனைத்திலும் காணப்படும் என அந்த ஆய்வு கூறுகிறது. இதனால், பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து பூமியை மட்டுமல்ல, நம்மையும் பாதுகாக்க வேண்டுமென்றால், அதன் பயன்பாட்டை குறைப்பதுதான் ஒரே வழி என்கின்றனர் ஆய்வாளர்கள். ■

# கிருமிகளை கொல்லும் வெற்றிலை





⇨ வெற்றிலையில் உள்ள அத்தியாவசிய எண்ணெய் (Essential oil) பசியைத் தூண்டுவதுடன், செரிமானத்தையும் துரிதப்படுத்தும். கொலரா போன்ற நோய்களை உண்டாக்கும் கிருமிகளை அழிக்கும் ஆற்றலும் வெற்றிலைக்கு உண்டு.

⇨ குழந்தைகள் சரியாகப் பால் குடிக்காத நிலையில், பிரசவித்தப் பெண்களுக்கு மார்பில் பால் கட்டிக்கொண்டு வீக்கமும் வலியும் இருக்கும். வெற்றிலையைத் தணலில் வாட்டி மார்பில் வைத்துக் கட்டிவர வீக்கமும் வலியும் குறையும். அதே சமயம், வெற்றிலையை ஆமணக்கு எண்ணெய் தடவி வாட்டி, மார்பில் வைத்துக் கட்டினால் அதிக பால் சுரக்கும்.

⇨ சிறு குழந்தைகளுக்குப் பால் மற்றும் பால் பொருட்களால் செரிமானக்கோளாறு ஏற்படும். பத்து வெற்றிலைக் காம்பு, ஒரு வசம்பு, கால் மேசைக்கரண்டி சீரகம், கால் தேக்கரண்டி ஓமம், இரண்டு பூண்டு பல், இரண்டு கிராம்பு ஆகியவற்றை மண் சட்டியில் கருக வறுத்து, ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி ஒரு பாலாடை ஆகும் அளவுக்கு சுண்டக் காய்ச்சவும். இதனுடன் தேன் அல்லது கருப்பட்டி கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்க, செரிமானக்கோளாறு நீங்கும்.

⇨ பத்து வெற்றிலைகளைச் சிறிதாக நறுக்கி, ஒரு தேக்கரண்டி தூள் செய்த மிளகு சேர்த்து இரண்டு டம்ளர் தண்ணீர்விட்டு அரை டம்ளர் அளவுக்கு சுண்டக் காய்ச்சி இரண்டு அல்லது மூன்று முறை குடித்துவர உணவினால் ஏற்படும் நச்சுத்தன்மை நீங்கும்.

⇨ வெற்றிலையைத் தணலில் வாட்டிச் சாறு பிழிந்து அதனுடன் சம அளவு இஞ்சிச் சாறு கலந்து தினமும் குடித்துவர நாள்பட்ட நுரையீரல் நோய்கள் குணமாகும்.

⇨ அரை டம்ளர் தேங்காய் எண்ணெயில் ஐந்து வெற்றிலைகளைப் போட்டுக் கொதிக்கவிட்டு, வெற்றிலை நன்றாகச் சிவந்ததும் எண்ணெயை வடிகட்டி போத்திலில் பத்திரப்படுத்தி, சொறி, சிரங்கு, படைகளின் மீது தடவிவர நல்ல பலன் கிடைக்கும்.

⇨ இரவில் படுக்கப்போகும்போது வெற்றிலையில் சிறிதளவு ஆமணக்கு எண்ணெய் தடவி, தணலில் காட்டி கட்டிகளின்மீது வைத்துக் கட்டினால், கட்டி உடைந்து சீழ் வெளிவரும்.

# யார் யார் என்னென்ன சாப்பிடலாம்?





### 0 - 1 வயது வரை



- குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதங்களுக்கு, தாய்ப்பால் மூலமே அவர்களுக்குத் தேவையான அனைத்து சத்துகளும் கிடைத்துவிடும்.
- ஆறு மாதங்களுக்குப் பின், வேகவைத்து மசித்த காய்கறிகள், மசித்த சாதம், பழங்கள், சத்துமா கஞ்சி போன்றவற்றை அறிமுகம் செய்யலாம். அப்படி அறிமுகம் செய்யும்போது, குழந்தைக்கு ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
- ஒரு வயதுக்குப் பின் சத்துகளின் அடிப்படையில் உணவு தயாரித்து குழந்தைகளை தானாக சாப்பிடப் பழக்கலாம்.

### 1 - 3 வயது வரை



- புரதம், கார்போஹைட்ரேட் நிறைந்த சரிவிகித உணவுகளைக் கொடுப்பது அவசியம். அரிசி உணவுகள், காய்ந்த பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள்
- பழங்கள், தானியங்கள், சத்துமா
- போதுமான அளவு தண்ணீர்
- சீனி, உப்பு அதிகம் சேர்த்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

### 3 - 9 வயது வரை

- விட்டமின்கள், புரதம் போன்ற சத்துகள் நிறைந்த உணவுகள்
- சிவப்பரிசி, சிறுதானியங்கள், பருவ காலத்தில் கிடைக்கும் பழங்கள், வேக வைத்த காய்கறிகள், கோழி இறைச்சி, முட்டை பால், தயிர், பன்னீர், முருங்கைக் கீரை
- இனிப்பு உணவுகள், எண்ணெய்யில் பொரித்த உணவுகள், போத்தல்களில் அடைக்கப்படும் குளிர்பானங்களைத் தவிர்ப்பது நல்லது.



### 10 - 18 வயது வரை



- தசை வளர்ச்சிக்கு புரதம் நிறைந்த உணவுகள்
- பழங்கள் மற்றும் காய்கறிகள்
- நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் கனிமங்கள், நீடித்த ஆற்றலைத் தரக்கூடிய தானியங்கள் மற்றும் கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகள், கிழங்கு வகைகள்
- எலும்புகள் உறுதியடைய பால், முட்டை, கீரை வகைகள், மீன் வகைகள்
- தினமும் பால் குடிப்பது நல்லது.
- பேரீச்சம்பழம், முருங்கை, நெல்லிக்காய் போன்றவை

### 19 - 64 வயது வரை

- குறைந்தளவு புரதம் உள்ள உணவுகள், உடலில் நல்ல கொழுப்பை அதிகரிக்கும் உணவுகள்
- ஒமேகா - 3, ஃபோலிக் அசிட் நிறைந்த உணவுகளான மீன், நட்ஸ் வகைகள், விதை வகைகள், போன்றவை
- இரத்த அழுத்தத்தைத் தவிர்க்க சோடியம் நிறைந்த உணவுகளான ஊறுகாய், சிப்ஸ், உப்புக்கடலை போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- பெக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுகள், 'அல்கஹோல்' சேர்க்கப்பட்ட உணவுகள், இனிப்புச் சுவை நிறைந்த பானங்கள் போன்றவை
- போதுமான அளவு தண்ணீர்



### 65 வயதிற்கு மேல்

- விட்டமின்நிறைந்த முட்டையின் மஞ்சள் கரு, காளான்
- தசைகளின் உறுதித்தன்மைக்கு பருப்பு, மீன், அசைவ உணவுகள், முட்டை புரதம் நிறைந்த உணவுகள்
- நார்ச்சத்து நிறைந்த வாழைத்தண்டு, கீரைகள், பூசணிக்காய் , சுரைக்காய்
- கறிவேப்பிலை, முருங்கைக் கீரை, இஞ்சி, மஞ்சள், நெல்லி போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும்.
- விட்டமின் பி12 அளவை அவ்வப்போது கணக்கிட்டுக் கொள்வதும் நல்லது.



# வஸீம் தாஜுதீனின் உடல் எரிந்து முடியும் வரை அந்த முக்கிய நபர் பார்த்துக் கொண்டிருந்தார் ..




பொலிஸ் அதிகாரியின் வாக்குமூலத்தில் " நான் இரண்டு பிள்ளைகளின் தந்தை. எனக்கும் தாஜுதீனுக்கும் ஏற்பட்ட நிலை ஏற்பட்டு விடக்கூடாது. என் பிள்ளைகளுக்கு அப்பா இல்லாமல் போவதை நான் விரும்பவில்லை. அதனால் அவர் சொல்வதை கேட்டு நடக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைக்கு ஆளானேன்" என வாக்குமூலத்தில் கூறியிருந்தமையானது, இன்றும் செய்தியாக இருக்கின்றது.

அநுர சேனாநாயக்க தலைமையில் நடந்த குறித்த கூட்டத்தில் இன்னும் சில முக்கியமான நபர்களும் கலந்து கொண்டிருந்தனர். அதில் கிருலப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணவீரவும் குறிப்பிடத்தக்க ஒருவர் என வாக்கு மூலத்தின் மூலம் தெரிய வந்தது.

இதேவேளை , தாஜுதீனின் பணப்பை(பேர்ஸ்) யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என ஒரு குழப்பம் நிலவிவரும் நிலையில், அது தொடர்பில் எந்தவொரு விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும், அது தொடர்பில் இனி எந்தவொரு தேடலும் தேவையில்லை என நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அநுர சேனாநாயக்க அச்சுறுத்தியதாகவும் மேற்படி பொலிஸ் பொறுப்பதிகாரியின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் மிகவும் முக்கியமான மற்றுமொரு நபர் தான் நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி, திஸ்ஸ சரத்சந்திர. இவரும் ஒரு கட்டத்தில் கைது செய்யப்பட்டு பல விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இவர் மிகவும் முக்கியமான ஒரு தகவலை வெளிப்படுத்தினார் எனவும் தெரியவந்தது.

குறிப்பாக, வசீம் தாஜுதீனின் கார் தீ பற்றிக்கொண்டிருந்த வேளை அதாவது, அவர் கொலை செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி காலை 6.30 மணியளவில் டிபென்டர் ரக வாகனம் ஒன்றில் ஒருவர் வந்திறங்கியதாகவும் (அவர் வேறு யாருமல்ல அநுரசேனாநாயக்க தான்) அப்போது அவர் அந்த கார் எரிவதை பார்த்துக்கொண்டு இருந்தாரே தவிர அதனை தடுப்பதற்கு அவர் எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.



**தாஜுதனின் பணப்பை(பேர்ஸ்) தொடர்பில் எந்தவொரு விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும், அது தொடர்பான விசாரணையை கைவிடுமாறும் நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அநுர சேனாநாயக்க அச்சுறுத்தியதாகவும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டது..!**

மேலும், தாஜுதீனின் சடலம் முழுமையாக எரிந்து முடிவதை பார்த்துவிட்டு தான் அவர் அந்த இடத்தைவிட்டு சென்றார் எனவும் அவர் அந்த வாக்குமூலத்தில் பதிவு செய்திருந்தார்.

இதேவேளை, அநுர சேனாநாயக்க, இதனை கொலை என்பதன் அடிப்படையில் இல்லாமல் விபத்து என்பதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அனுர சேனநாயக்க அடிக்கடி அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் எந்தவொரு பகுதியிலும் வாகனங்கள் மோதுண்டாலோ அல்லது தீபற்றி எரிந்தாலோ அது முதலில் விபத்தாகத்தான் பதிவாகும். தொடர்ந்து போக்குவரத்து பிரிவுக்கு அது தொடர்பான விசாரணைகள் ஒப்படைக்கப்படும். தொடர்ந்து அதில் சந்தேகம் நிலவும் பட்சத்தில் குற்றப்பிரிவுக்கு மாற்றப்படும்.

ஆனால், தாஜுதீனின் கொலை வழக்கில் நடந்தது என்னவோ முற்றிலும் தலைகீழான ஒன்றே. ஆம். விபத்து நடந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தாலும், விசாரணைகள் அனைத்தும் குற்றப்பிரிவுக்கு தான் வழங்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க, வழக்கு பல கோணங்களில் விசாரணை நடந்த நிலையில், பொலிஸாரினால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலும் , பல குற்றச்சாட்டுக்கள் அநுர சேனாநாயக்க மீது சுமத்தப்பட்டிருந்த நிலையிலும் அவர் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.







கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு அதிகமான காலம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். தொடர்ந்து கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்பட்ட அநுரசேனாநாயக்க, வெளிநாடு செல்லவும் தடைவிதிக்கப்பட்டு கடவுச்சட்டும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேலும், முக்கியமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் எனவும் அனுர சேனநாயக்கவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதேவேளை, அநுரசேனாநாயக்க பிணையில் விடுதலையாவதற்கு முன்னர், நீதிமன்றில் வைத்து நீதவானிடம் ஒரு கோரிக்கையையும் முன்வைத்திருந்தார். அதாவது, இந்த சம்பவத்தின் உண்மையான குற்றவாளிகளையும் குற்றப்புலனாய்வு பிரிவினர் கண்டறிய வேண்டும் என தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்தே அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது. இது இவ்வாறிருக்க, 2021ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி அநுர சேனாநாயக்க கொழும்பு தனியார் மருத்துவமனையொன்றில் கடுமையான உடல் நல பாதிப்பு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார் என்ற செய்தி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இதனைதொடர்ந்து அவர் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கோப்புகள் அனைத்தும் மூடப்பட்டன. தொடர்ந்து நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியாக செயற்பட்டுவந்த சுமித் பெரேராவும் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் முடிவில் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

**தாஜுதீனின் கார் எரிந்துக் கொண்டிருந்த போது டிபென்டர் ரக அந்த நபர் கார் எரிவதை பார்த்துக்கொண்டு இருந்தாரே தவிர அதனை தடுப்பதற்கு எந்தவொரு உத்தரவையும் அவர் பிறப்பிக்கவில்லை என கூறப்படுகின்றது ...**

ஆனாலும், இந்த வழக்கில் இவர் தான் குற்றவாளி என கூறும் எந்தவிதமான சாட்சியங்களோ, ஆவணங்களோ இல்லாத நிலையில் அடுத்து என்னதான் நடந்தது என்பதை அறிய அடுத்த வாரம் வரை காத்திருங்கள்.

**(மிகுதி அடுத்த வாரம் )**

# தலிபான்களை பயன்படுத்தும் சீன உபாயம்



பாலகணேஷ் டிலுக்ஷா

ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பக்திகா பகுதியில் உள்ள ஏழு கிராமங்களில் தீவிரவாத பயிற்சி முகாம்களை இலக்கு வைத்து பாகிஸ்தான் மேற்கொண்ட தாக்குதலில் 46 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானைச் சேர்ந்த தெக்ரிக்–இ–தலிபான் அமைப்பின் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் பதுங்கியுள்ளதாக கருதப்படுகின்றது.

அவர்கள் அவ்வப்போது பாகிஸ்தான் எல்லையில் உள்ள இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். அதற்கு ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு முழு ஆதரவளித்து வருகின்றது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வரும் அதேவேளை, பல்வேறு கிளர்ச்சி அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன.

தலிபான் அமைப்பு தங்கள் நாட்டின் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்துவதாகவும், இது பயங்கரவாத அமைப்பு என்றும் பாகிஸ்தான் குற்றம் சுமத்தி வருகிறது. மேலும், இந்த அமைப்பை இலக்கு வைத்து அவ்வப்போது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கமைய கடந்த 24 ஆம் திகதி உளவுத் தகவல் அடிப்படையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் மேற்கொண்ட தாக்குதலை ஆப்கானிஸ்தான் வன்மையாகக் கண்டித்துள்ளது. தன்னிச்சையான நடவடிக்கைகள் மூலம் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது என்பதை பாகிஸ்தான் உணர வேண்டும் எனவும் தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு தங்களின் நிலத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்க உரிமை உள்ளதால்



பாகிஸ்தான் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.இந்நிலையில் பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பாகிஸ்தான் அதன் மேற்கு எல்லைப் பகுதிகளில் மீண்டும் தீவிரவாத வன்முறையை எதிர்த்துப் போராடி வருகிறது. பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் எல்லை மற்றும் வன்முறைகளே முக்கிய பிரச்சினைகளாக காணப்படுகின்றன.

பாகிஸ்தான் சுதந்திரமடைந்தது முதல், தற்போதைய தலிபான் தலைமை உட்பட எந்த ஆப்கானிய அரசாங்கமும் உத்தியோகப்பூர்வ எல்லையை ஏற்கவில்லை என்று வில்சன் மையத்தில் உள்ள தெற்காசிய கல்வி நிறுவனத்தின் இயக்குனர் மைக்கேல் குகல்மேன் தெரிவிக்கிறார்.

காலனித்துவ காலத்தில் வரையப்பட்ட துராந்து எல்லைக்கோடு, 2,640 கிலோ மீற்றர், பாகிஸ்தானை ஆப்கானிஸ்தானில் இருந்து உத்தியோகப்பூர்வமாக பிரிக்கிறது. இருப்பினும், இந்த எல்லையை ஆப்கானிஸ்தான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை, மேலும் தலிபான்கள் இந்த பிரச்சினையில் இன்னும் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இது தலிபான் போராளிகளுக்கும், எல்லையில் பணிபுரியும் பாகிஸ்தான் வீரர்களுக்கும் இடையே பல மோதல்களுக்கு வழிவகுத்தது, இதனால் முக்கிய எல்லைக் கடக்கும் இடங்கள் அடிக்கடி மூடப்படுகின்றன.



இந்த விவகாரத்தில் தலிபான்கள் மிகவும் வலிமையான நிலைப்பாட்டை எடுத்ததால் எல்லைப் பதற்றம் மோசமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இருபுறமும் வாழும் மிகப் பெரிய இனக்குழுவான பஷ்டூன்கள் பெரும்பாலும் வசிக்கும் பழங்குடிப் பகுதிகள் வழியாக எல்லை செல்கிறது.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையில் கம்பி வேலியை கட்டி முடிப்பதாக பாகிஸ்தான் உறுதியளித்துள்ளது, ஆனால், அது குடும்பங்களை பிளவுபடுத்துகிறது என்று தலிபான்கள் வாதிடுகின்றனர். ஆப்கானிஸ்தானில் போர் முடிந்துவிட்டதால், தலிபான்கள் பாதுகாப்பான புகலிடங்கள் அல்லது போர்க்கால உதவிகளுக்கு பாகிஸ்தானை நம்பியிருக்க மாட்டார்கள்.

மாறாக, ஆப்கானிஸ்தானுக்குள் அதிக ஆதரவைப் பெறுவதில் கவனம் செலுத்துவார்கள். அங்கு பலர் பாகிஸ்தானின் அரசாங்கத்தை சந்தேகிக்கின்றனர். பாகிஸ்தானை விமர்சிப்பதன் மூலம், ஆப்கானிஸ்தான் மக்கள் மத்தியில் ஆதரவைப் பெற முடியும் என தலிபான்கள் நம்புகின்றனர்.

### சீனாவின் அழுத்தம் காரணமா?

சீனாவின் அழுத்தம் காரணமாகவே நாட்டின் புதிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சீனத் தொழிலாளர்கள் பலர் சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (CPEC) 'பெல்ட் எண்ட் ரோடு' முன்முயற்சியின் கீழ் ஈடுபட்டுள்ளனர். பொருளாதாரத் தடைகளில் சிக்கித் தவிக்கும் ஆப்கானிஸ்தானில் சீனா முதலீடு செய்யலாம் என்பதால் தாலிபான்கள் மீது சீனாவுக்கு அதிக செல்வாக்கு உள்ளது.

ஆப்கானிஸ்தானுக்குள்ளும் பாகிஸ்தானின் எல்லையிலும் தீவிரவாத நடவடிக்கைகளை குறைப்பதற்கு தாலிபான்களை வற்புறுத்துவதற்கு, முதலீட்டு வாக்குறுதியை சீனா பயன்படுத்தினால், அது சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பயனளிக்கும் என அரசியல்துறை நிபுணர்கள் கூறுகின்றனர்.



# சினிமாவிலிருந்து விலகுகிறாரா புஷ்பா 2 இயக்குனர்?

அல்லு அர்ஜுனின் வழக்கால் வேதனை அடைந்திருப்பதாகவும் அதனால், சினிமாவை விட்டே விலகிவிட நினைப்பதாகவும் 'புஷ்பா 2' பட இயக்குனர் சுகுமார் தெரிவித்துள்ளார்.

'புஷ்பா 2' படம் கடந்த டிசம்பர் 5ஆம் திகதி வெளியானது. இதை முன்னிட்டு 4ஆம் திகதி இரவு நடந்த சிறப்பு படக்காட்சிக்காக அல்லு அர்ஜுன், ஐதராபாத் சந்தியா தியேட்டருக்கு சென்றுள்ளார். அப்போது கூட்ட நெரிசலில் சிக்கி ரேவதி என்ற பெண் பலியானார். இது தொடர்பாக அல்லு அர்ஜுன் மீது வழக்கு தொடரப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்தார்.

இந்நிலையில், இயக்குனர் சுகுமார், தான் சினிமாவை விட்டு விலக நினைக்கின்றேன் என்று சமீபத்திய பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். இது குறித்து அவரிடம் கேட்டபோது, "தியேட்டரில் ரேவதி என்ற பெண் பலியானது எனக்கும் அல்லு அர்ஜுனுக்கும் பெரும் மனவலியைத் தந்தது. அதைத் தொடர்ந்து நடக்கும் சம்பவங்கள் எனக்கு மிகுந்த மன உளைச்சலைத் தந்துள்ளது. அதனால்தான் சினிமாவிலிருந்து விலக நினைக்கிறேன்" என்றார்.



# "சமந்தா பட்டபாடு..." –சின்மயி

தென்னிந்திய சினிமாவில், மிகப்பெரிய இரசிகர் பட்டாளத்தை கையில் வைத்திருப்பவர் சமந்தா. சினிமாவில் சாதித்த இவர் தொடர்ந்து நிறைய தொழில்களையும் கவனித்து வருகிறார். நடிப்பு, தொழில் என பிஸியாக வலம் வந்தவருக்கு பெரிய தடையாக அமைந்தது 'மயோசிடிஸ்' என்ற நோய் பாதிப்பு. நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டவர், இப்போது தான் கொஞ்சம் அதில் இருந்து மீண்டுள்ளார்.

படங்களைத் தாண்டி வெப் தொடர்களிலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இறுதியாக சமந்தா நடிப்பில் 'சிடாடல் ஹனி பன்னி' என்ற வெப் தொடர் வெளியாகி இருந்தது.

இந்நிலையில், நடிகை சமந்தா குறித்து பேட்டி ஒன்றில் பின்னணி பாடகி சின்மயி கூறிய விடயம் இரசிகர்கள் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதில், "சமந்தா ஒரு சிறந்த நடிகை மட்டுமின்றி மிகவும் நல்ல குணம் கொண்ட ஒருவரும் ஆவார் அவர் உடலளவிலும், மனதளவிலும் படாத பாடுப்பட்டார், பல கஷ்டங்கள் இருந்தும் அதை பற்றி கண்டு கொள்ளாமல் தைரியமாக இன்றும் பலருக்கு எடுத்துக்காட்டாக பயணித்து வருகிறார். அவர் யாருக்கும் சளைத்தவர் இல்லை என்பதை உழைப்பின் மூலம் காட்டி வருகிறார்" என்று தெரிவித்துள்ளார்.




# சினிமாவில் அறிமுகமாகும் இன்னொரு திரைவாரிசு



தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளராக 2000ஆம் ஆண்டு முதல் இருந்து வருபவர் ஹரிஸ் ஜெயராஜ். இவர் கௌதம் மேனன், ஜீவா, கே.வி.ஆனந்த் மற்றும் ஷங்கர் ஆகிய இயக்குனர்களுடன் இணைந்து கொடுத்த வெற்றிப்பாடல்கள் எண்ணிலடங்காதவை.

இந்நிலையில் தற்போது ஹரிஸ் ஜெயராஜின் மகன் சாம்வேல் நிக்கோலஸ் ஹரிஸ் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார். அவர் இசையில் உருவாகியுள்ள 'ஐயய்யோ' என்ற தனியிசைப் பாடல் தற்போது வெளியாகி கவனம் ஈர்த்துள்ளது.



# Face of the week






# விடுதலை பாகம் 2

'விடுதலை" முதல் பாகத்தில் கடைநிலைக் காவலர் குமரேசனால் (சூரி) கைது செய்யப்படும் தமிழர் மக்கள் படையின் தலைவர் பெருமாள் வாத்தியாரை (விஜய் சேதுபதி), மலைக்காட்டு வழியாக பொலிஸ் படை வேறு இடத்துக்கு அழைத்துச் செல்கிறது. போகும் வழியில் பெருமாள் வாத்தியார், தன் காதல் கதையையும் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக, தான் உருவெடுத்த கதையையும் சொல்கிறார். இன்னொரு புறம் அவர் கைதை வைத்து அதிகாரவர்க்கம் வேறுவிதமாகத் திட்டம் போடுகிறது. அதே நேரத்தில் பெருமாள் வாத்தியாரை மீட்க அவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பொலீஸுடன் மோதலில் ஈடுபடுகின்றனர். இதில் பெருமாள் வாத்தியார் தப்பித்தாரா, இல்லையா என்பதுதான் கதை.

"விடுதலை" முதல் பாகத்தில் மலைக் கிராமத்தில் சுரங்கம் தோண்டும் கோர்ப்பரேட்களின் பின்னணியில் அரசியல், அதிகாரவர்க்கம் இருப்பதையும், தேடுதல் வேட்டை என்கிற பெயரில் எளிய மக்கள் மீது பொலிஸார் கட்டவிழ்த்துவிடும் அரச பயங்கரவாதத்தையும் காட்சிப்படுத்தியிருந்த இயக்குநர் வெற்றிமாறன், இரண்டாம் பாகத்தில் இதன் பின்னணியில் மக்கள் தலைவராக உயரும் விஜய் சேதுபதியின் கதை மொழிக்கு உயிர் கொடுத்திருக்கிறார்.

பெருமாள் வாத்தியாராக அந்தக் கதாபாத்திரத்தில் வாழ்ந்திருக்கிறார் விஜய் சேதுபதி. ஆசிரியர், தோழர், போராளி என அநீதிகளுக்கு எதிராகக் களமாடியிருக்கிறார். முதல் பாகத்தைப் போல சூரிக்கு வாய்ப்பு இல்லை என்றாலும் கடைசி அரை மணி நேரத்தில் கவனம் ஈர்க்கிறார். குறிஞ்சி மலர் போல நாயகி மஞ்சு வாரியாரின் பாத்திரப் படைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. பெண்ணியம் சார்ந்தும் கொள்கை சார்ந்தும் பேசுவது அழகு.

அந்தக் காலத்தில் தன்னலமற்று வாழ்ந்த பொதுவுடமை தலைவரை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார் கிஷோர். மோசமான குணம் கொண்ட பொலிஸாக சேத்தன், அதிகார வர்க்கத்தை கண்முன் கொண்டு வரும் ராஜீவ் மேனன். பொலிஸ் அதிகாரிகள் கௌதம் வாசுதேவ் மேனன், தமிழ், வாத்தியார் ஆயுதம் தூக்கக் காரணமாக இருக்கும் கென் கருணாஸ், பண்ணையார் போஸ் வெங்கட், வங்காள தோழர் அனுராக் காஷ்யப், அமைச்சர் இளவரசு, பாலாஜி சக்திவேல், சரவண சுப்பையா என நட்சத்திர பட்டாளங்கள் நடிப்பில் கவர்கிறார்கள்.

இளையராஜா இசையில் இரண்டு பாடல்களும் ஒத்தடம் போல் இருக்கின்றன. பின்னணி இசையிலும் மிரட்டியிருக்கிறார். ஆர்.வேல்ராஜின் ஒளிப்பதிவு இரவு மலைக் காட்சிகளை அழகாகப் படம் பிடித்திருக்கிறது.

"விடுதலை 2" – வெற்றி மாறனின் தத்துவார்த்த அரசியலை ஆழமாகப் பேசுகிறது.

# இறுதி கட்டத்தில் லைகாவின் 'விடாமுயற்சி'




அஜித்தின் பிறந்தநாளான மே 1ஆம் திகதி லைகா நிறுவனம், மகிழ்திருமேனி இயக்கத்தில் அஜித்தின் புதிய படம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. இவர் தமிழில் தடையறத் தாக்க, மீகாமன் மற்றும் தடம் போன்ற திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

மேலும், கடந்த ஆண்டு 'கலகத்தலைவன்' என்ற 'எக்ஷன் த்ரில்லர்' படத்தை நடிகர் உதயநிதி நடிப்பில் இயக்கி வெற்றி கண்டார். இந்த சூழலில் நடிகர் அஜித்தும், இயக்குனர் மகிழ் திருமேனியும் தற்போது கைகோர்த்துள்ளனர்.

லைகா நிறுவனம் தயாரிக்கும் 'விடா முயற்சி' படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இது அஜித் குமார் நடிக்கும் 62ஆவது படம். அஜித்தின் நேர்கொண்ட பார்வை, வலிமை, துணிவு போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த நீரவ் ஷா இப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்கின்றார்.

'மங்காத்தா' திரைப்படத்துக்குப் பின் அஜித், த்ரிஷா, அர்ஜுன் இணைந்து 'விடாமுயற்சியில்' நடித்துள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நடிகர் அஜித் குமார் இப்படத்திற்கான டப்பிங் பணிகளை முடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 'விடாமுயற்சி' பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை அஜித் இரசிகர்களை கொண்டாட்டத்தில் ஆழ்த்தியுள்ளது.

"அரசியலில் சேர்ந்தால் டெல்லியில் வீடு, குறிப்பிடத்தக்க பதவி, உயர் பாதுகாப்பு, அரசு முத்திரையுடன் கூடிய லெட்டர்ஹெட் போன்ற ஆடம்பரங்கள் கிடைக்கும் எனப் பலரும் என்னிடம் கூறினார்கள். எனக்கு முதல்வர் பதவி தருகிறேன் என்று கூட சொன்னார்கள். நான் மறுத்தபோது, என்னை துணை முதல்வர் ஆகச் சொன்னார்கள். ஆனால் நான் அந்த பதவிகளை வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அரசியலில் எதற்கும் போராட வேண்டிய அவசியம் இல்லை"

**– நடிகர் சோனு சூட்**




# ஒரு நாளில்.. கோடி..




## சூர்யாவின் 'ரெட்ரோ' சாதனை...!

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் 'ரெட்ரோ' திரைப்படத்தில் சூர்யா, பூஜா ஹெக்டே, ஜெயராம், கருணாகரன், நாசர், சுஜித் சங்கர், தமிழ், பிரேம்குமார், ரம்யா சுரேஷ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இந்த திரைப்படத்தை 2டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர்கள் ஜோதிகா – சூர்யா ஆகியோருடன் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பெஞ்ச் புரொடக்ஷன்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது. படத்தின் ஷூட்டிங் முடிந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் இந்த படத்தின் அறிமுக டீசர், வெளியான ஒரே நாளில் ஒரு கோடி பேரால் பார்க்கப்பட்டு சாதனைப்படைத்துள்ளது. இதைப் பகிர்ந்து படக்குழு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.




# மகனை இழந்த வேதனையில் திரிஷா



"எனது மகன் இறந்துவிட்டான். அதனால் நடிப்புக்கு பிரேக் தரப்போகிறேன்" என சோகமாக கூறியுள்ளார் திரிஷா.

மகன் என திரிஷா சொல்வது, அவர் உயிருக்கு உயிராக நேசித்து வளர்த்து வந்த தனது நாயைத்தான். ஜோரோ என்ற நாய்க்குட்டியை அவர் வளர்த்து வந்தார். அதனுடன் விளையாடுவதுதான் திரிஷாவின் ஒரே பொழுதுபோக்கு. அண்மையில் ஜோரோ இறந்துவிட்டது. இது குறித்து திரிஷா கூறுகையில், "எனது மகன் ஜோரோ, கிறிஸ்மஸ் தினத்தில் இறந்துவிட்டான். ஜோரோ எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை என்னை நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். எங்கள் குடும்பத்தினரின் மனம் உடைந்துவிட்டது. இனி என்னால் எப்படி முழு மனதுடன் நடிக்க முடியும்? அதனால் சிறிது காலத்துக்கு நடிப்புக்கு பிரேக் தரப்போகிறேன்" என கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.